Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 93 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 15 2025

# ஈகைத்தீயினில் வந்தமர்ந்தாள் ஒரு செந்தமிழ் மாது




19.03.1988 அன்று

## அன்னை பூபதி

## உண்ணா நோன்புப் போராட்டம் ஆரம்பித்த நாள்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**


































விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்:
437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். அவரது தியாகம் ஒப்பற்றது – உலக வரலாற்றிலேயே புதுமையானது.







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சிலுவைப் பாதையில... கப்டன் கதிரவன்

“கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்“ என்பதை அடிப்படையாகக் கொண்டு இயங்குபவர்கள் தான், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்பவர்கள். புலனாய்வாளன் ஒருவனின் அறிக்கையில் காணப்படும் சிறு தவறுகூட பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது; எமது போராட்டத்தைப் பின் தள்ளக் கூடியது. எனவே, அவன் நிதானம் மிக்கவனாக நடந்து கொள்ள வேண்டும். கம்பியில் நடப்பது போன்ற இப்பணியினை மேற்கொண்டு வந்தவர்களில் ஒருவன்தான் கதிரவன்.

பெறுப்பாளர்கள் எதிர்பார்க்கும் பணியைச் செய்து முடிப்பது மட்டுமல்ல, மேலதிகமாக இப்படியும் - செய்யலாம் செய்விக்கலாம் என்று அவர்கள் உணரக்கூடியதாக, இவனது பங்களிப்பு அமைந்திருந்தது. அதனால், “கதிரவனால் இது செய்ய முடியுது தானே -உங்களால ஏன் முடியாது” என்று இவனை உதாரணம் காட்டி, சகபோராளிகளைப் பொறுப்பாளர்கள் ஊக்குவிக்குமளவுக்குப் பணியாற்றினான் இவன். குறிப்பாகச் சொன்னால், இவனது வாழ்க்கை சகபோராளிகளுக்குப் பாடவிதானமாக அமைந்தது. முகாமில் பகல் முழுவதும் நாளாந்தப் பணி: இரவில் காவல் பணியின்போது தனக்கும் நேரத்தைப் பங்கீடு செய்தல்; இந்த இடைப்பட்ட நேரத்தில் தனது வேலைகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல் - இது தான் இவனது வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு போராளியையும் முழுமையானவர்களாக, எதிர்காலத்தில் தனது பணிகளைப் பொறுப்பேற்று நடத்தக்கூடியவர்களாக உருவாக்கினான். தான் செய்யும் வேலையில், குறைந்தது அரைவாசியையாவது செய்தோமா என்ற உணர்வைப் போராளிகளுக்கு உருவாக்குவதன் மூலம், படிப்படியாக அவர்களை முழுமையாக்குவது இவனது பாணி.






## ஜெருசலேம் பெரிய தேவாலயத்தின் முன்னால், அநீதிகள் புரிபவருக்கெதிராக ஆவேசத்துடன் சென்று சாட்டையால் அடித்த யேசுதான் பெரிதாகத் தெரிந்தார்.

பொதுமக்களைப் பொறுத்தவரை இவன் பழகும் விதம், “வாழ்வில் என்றுமே மறக்கமுடியாதவன் கதிரவன்“ என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். இவனது வாழ்வு வித்தியாசமானது. இவன் சாதாரண மனிதனாக வாழத்தொடங்கியவனல்ல...... குருத்துவக் கல்வியை மேற் கொண்டு கிறிஸ்தவ மதகுருவாக வாகவிருந்த ஒருவன்தான், போராளியாக மாறியிருக்கிறான்; இரண்டுமே மக்களுக்காகத் தம்மை ஒப்படைக்கும் பணிதான்!

★ ★ ★



சுமார் 2 ½ மைல் நீளமும் ½ மைல் அகலமுமானதுதான் எழுவைதீவு. சுமார் 175 குடும்பங்கள்வரைதான் அங்கிருந்தன. கடற்றொழில்தான் அங்கு பிரதானமானது. அடிக்கடி தெரியும் கடற்படைப் படகுகளும், குமுதினிப் படகு பற்றிய நினைவுகளும், ஆக்கிரமிக்கப்பட்ட தீவில் தாம் சிக்கிக் கொண்டிருப்பதை அங்குள்ளவர்களுக்கு உணர்த்தும். இத்தீவில்தான் இவன் பிறந்தான். இவனது இயற்பெயர் கிறிஸ்ரியன் பெர்னாண்டோ. இவனுடன் சேர்த்து குடும்பத்தில் 13 பேர்.

ஓலை வீட்டில் இருந்த இவனது குடும்பத்தினர், இவன் பிறந்த காலத்தில்தான் கல்வீடு கட்டத் தொடங்கினார்கள். எனவே, வாசலில் சீமேந்தின் ஈரத்தினிடையே இவனது பாதத்தைப் பதித்து மகிழ்ந்தார்கள். அப்போதெல்லாம் நினைத்திருக்க மாட்டார்கள், இந்தப் பிஞ்சுப் பாதங்கள் எதிர்காலத்தில் மக்களுக்காகச் “சிலுவை” சுமக்குமென்று.

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

யில் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே கல்விகற்க முடியும்; அதன் பின் கடல் கடந்தால்தான் உயர் கல்வி. எனவே, இவன் 6 ஆம் வகுப்பைக் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் படித்தான். இப்பகுதி இராணுவ நடவடிக்கைக்குட்பட்டதால், பின்னர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் இவனது கல்வி தொடர்ந்தது. இங்கு 10 ஆம் வகுப்பில் சித்தியெய்திய காலத்தில் தான் குருத்துவக் கல்வியை மேற்கொள்ளத் தீர்மானித்தான் இவன். ஏற்கெனவே இவனது ஒரு சகோதரர் குருத்துவக் கல்வியைப் பயின்று மத குருவாக உள்ளார். அவரைப் போலவே உருவாக விரும்பினான் இவன். யாழ். புனித சம்பத்திரிசி யார் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்ற வாறே குருத்துவ வாழ்வில் புகுந்தான். பாடசாலை விடுமுறை நாட்களில் இவன் எழுவைதீவுக்குச் செல்வதுண்டு.

இக்காலகட்டத்தில் ஒருநாள், கடல்வழியாக எட்டுக் குதிரைவலு இயந்திரம் இணைக்கப்பட்ட படகில் பயணமாகிக் கொண்டிருந்தனர் இன்பம், குட்டி, அப்ஸ், ராஜன் ஆகிய நான்கு போராளிகள். அது இந்திய இராணுவத்தினர் எம்மண்ணினை ஆக்கிரமித்திருந்த காலம். அவர்களின் நடவடிக்கைகள் காரணமாக, தாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து தற்காலிகமாக இடம் மாறியிருப்பதற்காக இப்பயணத்தை மேற்கொண்டனர். அவ்வேளை சிறீலங்காக் கடற் படையினரின் அதிவேகப் படகொன்று இப் படகினை நெருங்கியது. எனவே, மோதல் தவிர்க்கமுடியாததாகியது. இம்மோதலில், அப்படகில் வந்த சிறீலங்காக் கடற்படையினரில் ஒரேயொருவனே தப்பினான்; ஏனையோர் உயிரிழந்தனர். தப்பியவன் இவர்களை நோக்கிச் சுட்டபடியிருந்தான்.



போராளிகளின் படகு ஆபத்திலிருந்து தப்பிவிட்டது. எனினும், மோதல் நடந்து கொண்டிருந்தவேளை, இப்படகினைச் செலுத்திக்கொண்டிருந்த பொதுமகன் கடலில் குதித்துவிட்டார். எனவே, படகினைச் செலுத்த ஆள் இல்லை; போராளிகளே படகினைச் செலுத்த முயன்றனர். படகு அப்படியே எழுவை தீவில் கரையொதுங்கியது. அப்போராளிகள் எழுவைதீவு மக்களால் உபசரிக்கப்பட்டனர். அப்போராளிகளை உபசரித்தவர்களுள் இவனும் ஒருவன். இக்காலகட்டத்தில் திலீபன் நினைவு நாள் வந்தது. மக்களுக்கு ஊழியம் செய்வதற்காகக் குருத்துவ வாழ்வில் புகுந்தவன் மனதில், தற்கொடையாளி திலீபன் பெருமதிப்புக்குரியவனாக இருந்தான். எனவே, இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் தன்னாலியன்ற அத்தனையையும் செய்தான் இவன்.

26.11.1988 அன்று, இவன் கல்விகற்கும் சம்பத்திரிசியார் கல்லூரியினுள் புகுந்தனர் இந்திய இராணுவத்தினரும் தேச விரோதிகளும். “நக்குகின்ற நாய்க்குச் செக்கென்ன, சிவலிங்கமென்ன” என்று கூறுவார்கள். அதுபோலவே தமிழீழ மக்கள் மீதான இனப்படுகொலையைச் சிறீலங்காப் படையினரிடமிருந்து பொறுப்பேற்றிருந்த இப்படைகளுக்கு, வைத்தியசாலையென்றோ கல்லூரியென்றோ வித்தியாசம் காணத்தெரியவில்லை. கல்லூரியிலிருந்த வண. பிதா பிலேந்திரன் தாக்கப்பட்டார்; பக்கத்திலுள்ள புனித மரியாள் பேராலயத்தினுள் இருந்த சக்கரியாஸ் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டார்; பின், இவர் ஈச்சமோட்டைப் பகுதியில் பிணமாக மீட்கப்பட்டார். அந்தப் பேராலயத்தில் பியானோ வாசிப்பதுடன், ஊழியம் செய்து வந்தவர் சக்கரியாஸ். வண. பிதா பிலேந்திரன் தாக்கப்பட்டதும், சக்கரியாஸ் கைதுசெய்யப்பட்டுப் பிணமாக மீட்கப்பட்டதும் இவன் அறிய நடந்த சம்பவங்கள். இச்சம்பவங்கள் இவன் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. இதுவரை, “ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு” என்று போதித்தபடி மற்றவர்களுக்காகத் தன்னை வருத்தி ஊழியம் செய்பவராகத் தெரிந்த யேசு, இப்போது தெரியவில்லை; மாறாக, ஜெருசலேம் பெரிய தேவாலயத்தின் முன்னால், அநீதிகள் புரிபவருக் கெதிராக ஆவேசத்துடன் சென்று சாட்டையால் அடித்த யேசுதான் பெரிதாகத் தெரிந்தார்.

★ ★ ★



விடுமுறை நாட்களில் இரவு, பகலென்று போராளிகளுடனேயே தங்கினான் இவன். அவர்களது நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்தான். இதுவும் அடிப்படையில் மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கை என்பதால், இந்த வாழ்க்கை பிடித்துப் போயிற்று. அதனால், 01-01-1990 அன்று, குருமடத்தில் இருக்கவேண்டிய இவன் இரவோடிரவாக இயக்கத்திற்குச் சென்று விட்டான். சில நாட்கள் அனலைதீவில் தங்கியிருந்த இவன், மீண்டும் எழுவைதீவு வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றான். எனினும், எழுவைதீவில் தரையிறங்கவில்லை; படகினுள்ளேயே மறைந்திருந்தான். வழக்கமாக போராளிகளுக்கான உணவுப் பொட்டலங்களைக் கட்டிக்கொடுக்கும் இவனது அன்னைக்கு, அன்று அதிலொன்றைத் தனது மகனுக்காகவும் கட்டுவது தெரியாமலிருந்தது. அந்த உணவு தான் தாயின் சமையலில் உண்ணும் இறுதிச் சாப்பாடு என்பதை அவனும் அறிந்திருக்க வில்லை. படகு புறப்படும்போது இவன் எழுந்து நின்றான். அந்த அழகிய தீவை நன்றாக இரசித்தான். அது சுதந்திர பூமியாக, எமக்குச் சொந்தமாக விருக்கும் நாளைப் பற்றிய கற்பனைகளுடன் பயணத்தைத் தொடர்ந்தான். ஆனால், மீண்டும் அந்தத் தீவின் புழுதி இவனுடலில் படவேயில்லை.

இவன் இயக்கத்திற்குப் போகும்போது தனது அன்னைக்கு எழுதிய கடிதத்தில், “இந்த ஊரில் முதல் குருவானவரும் எங்களுடைய குடும்பத்தில்தான் முதல் போராளியும் எங்களுடைய குடும்பத்தில்தான்” என்று குறிப்பிட்டிருந்தான். அதுவும் ஒரு பெருமைதான் என்பதை உணர்ந்தார் இவனது அன்னை.

★ ★ ★

மணலாற்றில் தனது இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டான் இவன். அங்கேதான் கிறிஸ்ரியன் பெர்னாண்டோ “கதிரவனாக” மாறினான். யூலை மாதத்தில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதலொன்றில் கையில் காயமடைந்தான். இக்காயம் குணமடைந்ததும் இவன் தீவகப் பகுதியில் புலனாய்வுப் பிரிவின் உதவிப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அக்காலத்தில் தகவல்களை மட்டும் பெற்றுக் கொள்ளவில்லை; மக்களுடைய மனங்களையும் வென்றெடுத்தான். அவர்கள் மனம் வேதனைப்படக்கூடியவாறு ஒருபோதும் இவன் நடந்ததில்லை. அனுபவமுள்ள பல போராளிகளே, மக்களை அணுகும் விடயம் தொடர்பாக இவனிடம் ஆலோசனை பெற்றுள்ளனர் என்றால், இவன் எந்தளவுக்கு மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளான் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

1991 ஆம் ஆண்டு தீவுப்பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டனர். உலங்கு வானூர்திகளினதும், குண்டு வீச்சு விமானங்களினதும் இரைச்சல் காதைச் செவிடாக்கியது. இந்த முற்றுகைக்குள் இவன் சிக்கிவிட்டான். எல்லோரும் யாழ்ப்பாணத்தை நோக்கி மிக வேகமாக நகர்ந்து கொண்டிருக்கையில், இவன் மட்டும் இன்னும் உள்ளே சென்றான். வேலணையிலிருந்து புங்குடுதீவை நோக்கிச் சென்றாள். அங்கு இயக்கத்தின் புலனாய்வு நடவடிக்கைகள் பற்றிய பல முக்கிய ஆவணங்கள் இருந்தன. அவை சிறீலங்காப் படையினரிடம் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே, அங்கு விரைந்தான். அங்கிருந்து அவற்றை எடுத்துக்கொண்டு, இவன் வேலணையின் பிரதான வீதியைக் கடந்ததற்கும் சிறீலங்கா



இராணுவம் அந்த இடத்தைக் கைப்பற்றிய தற்குமிடையில், மிகச் சில விநாடி இடை வெளியே இருந்தது. உயிரைப் பணயம் வைத்துத்தான் அதை மீட்டிருக்கிறான். இது இவனது பொறுப் புணர்ச்சிக்கு உதாரணம்.

இவனுக்குப் பொறுப்பானவர்கள் மனத்தில் இவன் வித்தி யாசமானவனானவனாகத் தெரிந்தான். குறிப்பிட்ட தவறுக்காக, இன்ன தண்டனை உனக்கு என்று இவனிடம் அறிவித்தால் போதும்; கண்காணிக்கத் தேவையில்லை. அத்தண்டனை யைச் செய்து முடித்துவிட்டால் அறிவிப்பான்; இல்லையேல், இன்ன காரணத்துக்காக - இன்ன வேலையால் - இத்தண் டனையைச் செய்து முடிக்கவில்லை என்றோ அல்லது இவ் வளவு தண்டனையை முடித்துள்ளேன், மிகுதியை நாளை செய்து முடிக்கிறேன் என்றோ இவனிடமிருந்து அவர்களுக்குக் குறிப்பு வரும்.

தீவகத்திலிருந்து வந்த பின்னர், இவன் புலனாய்வுப் பிரிவின் நிர்வாக அலுவலகம் ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்தகாலத்தில், மிக முக்கியமான ஆவணமொன்று தொலைந்து விட்டது. இதற் காக இவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை, ஒரு பெட்டியைத் தூக்கித் திரிதல். அப்பெட்டி சங்கிலியினால் இவனது கையுடன் இணைக்கப்பட்டிருந்தது. தண்டனைக் காலம் முழுவதும் இவன் அதனுடனேயே திரிந்தான். யாழ். நகரத்தினுள் இவ னுக்கு வேலையிருக்கும்; முக்கியமான கூட்டங்களுக்குப் போக வேண்டியிருக்கும். எல்லாமே பெட்டியுடன்தான். குளிப்பதற்குப் பெரும்பாலும் குளத்தையே தேர்ந்தெடுத் தான். அந்தப் பெட் டியையே சலவைக் கல்லாகவும் பாவித்தான். அப்போதெல் லாம், தன்னுடனிருந்த போராளிகளுக்கு, தான் செய்த தவறு எவ்வளவு பாரதூரமானது என்றும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்னவென்றும் விளக்கினான். அது போலவே, தன்னுடனிருந்து தவறு செய்யும் போராளிகளுக்கு, அத்தவறின் விளைவாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் இவன் விளக் குவான். அந்த விளக்கங்கள் இவன் மீதிருந்த மதிப்பை மேலும் உயர்த்தின.

எல்லோரையும் போல சண்டையில் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை இவனுக்கும் இருந்தது. இராணுவ நெருக்கடிகள் மிகுந்த நேரங்களில் அலுவலகத்தில் இவனைக் காணக் கிடைக்காது. பரபரப்பு முடிந்த பின்னர்தான் அலுவலகப் பக்கம் தென்படுவான். தலையைச் சொறிந்து கொண்டே, எந்த இடச்சண்டையில் தான் கலந்து கொண்டான் என்பதைச் சொல்வான் – தனக்குப் பொறுப்பானவர்களிடம்.

இவனது போராட்ட வாழ்வின் இறுதிப் பகுதி, வவுனியா தடைமுகாம் பகுதியிலேயே கழிந்தது. புலனாய்வுப் பிரிவு மிகவும் விழிப்புடன் பணியாற்றவேண்டிய பகுதி இது. எல்லை கடந்தால் எதிரியின் பிரதேசம். எனவே, தேசத்துரோகிகளின் நடமாட்டத்தைத் தடுக்க வேண்டும். அதே வேளை, ஏனைய பொதுமக்களை அநாவசியமாகச் சிரமப்படுத்தக் கூடாது; அவர்கள் மனம் நோகாதவாறு நடக்க வேண்டும். எனவே, இப்பணி இலகுவானதல்ல.

இப்பணிகளைத் தொடர்ந்துவரும் காலத்தில், மாவீரர் வாரம் நெருங்கியது. மாவீரர் வாரத்துக்கான பணிகளை ஆரம்பித்த போது, நண்பர்களிடம் சொன்னான்: “எனக்கு மாவீரர் வாரத் துக்கை சாகிறதுதான் விருப்பம்; அதுக்குள்ள சாகிறதுக்குக் குடுத்து வச்சிருக்கவேணும்.”

★ ★ ★

அன்று நொச்சிமோட்டைப் பக்கமாக சிறீலங்கா இராணுவத் தினர் வெளியேறி விட்டனர் என்று, தகவல் கிடைத்தது. உடனே இவன் தன் நண்பர்களுடன் இராணுவ முன்னேற்றம் நிகழ்ந்த இடத்தை நோக்கி விரைந்தான். “சண்டைக்கு முதல் இராணுவத்தினர் எதுவரை வந்துள்ளார்கள் என்பதை அறிய வேண்டும். இதற்கு நொச்சி மோட்டைப் பாலத்தடியில் உள்ள ஒரு மரத்தின் மீது ஏறவேண்டும்” எனத் தீர்மானித்தான். அவர்களோ அப்பாலத்தைத் தாண்டி வந்துவிட்டார்கள். அந்த விபரம் இவனுக்கும், இவனது நண்பர்களுக்கும் தெரியாது. இவர்கள் இராணுவத்தின் வியூகத்துள் அகப்பட்டுவிட்டனர். இந்நிலையில் இவனது நண்பனொருவன் காய மடைந்தான். எனினும், சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே அவன் மீட்கப் பட்டான். இந்நிலையில் கதிரவன் காயமடைந்தான். போர்முனையிலிருந்து வைத்திய சாலைக்குப் போகும்வரை, தனது அலுவலகத்திலிருந்த ஆவணங்களைக் காப்பாற்றிப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுமாறு, கூறிக் கொண்டிருந்தான். அவை சிறீலங்கா இராணுவத்தினரிடம்




சிக்கிவிட்டால் மிகப்பெரிய பின்னடைவு ஏற்படும். எனவே, எப்பாடுபட்டேனும் அவை பாதுகாக்கப்படவேண்டியவை.

கதிரவன் சொல்லிக்கொண்டேயிருந்தான்–அதைக் காப்பாற் றும்படி. கிளிநொச்சி மருத்துவமனையில் இவன் அனுமதிக்கப் பட்டிருந்த நேரத்தில், அவற்றினைக் காப்பாற்றியாயிற்று என்ற செய்தி, இவனுக்கு உரைக்கப்பட்டது. அதைக் கேட்டதும், அது வரை இருந்த இவனது பரபரப்பு ஓய்ந்தது; பரபரப்பு மட்டுமல்ல, இவனது உடலின் இயக்கமும்தான்.

“எனக்கு மாவீரர் வாரத்துக்கை சாகிறதுதான் விருப்பம்; அதுக்குள்ள சாகிறதுக்குக் குடுத்து வச்சிருக்கவேணும்” என்ற இவனது வார்த்தைகளும், இவனது வாழ்வும் எங்களால் என்றுமே மறக்கமுடியாதவை.

இவனது பிரிவுச் செய்தி சிறீலங்காப் படையினர் மூலமாகத்தான் இவனது அன்னைக்குக் கிடைத்தது. அவர் அந்த வீட்டில் பதிக் கப்பட்டிருந்த இவனது பிஞ்சுப் பாதங்களின் அடையாளங் களைப் பார்த்திருப்பார்.

“சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்” என்ற வாக்கியம், அவருக்கு நினைவில் வந்திருக்கும்!

விடுதலைப்புலிகள் - பங்குனி 1993




# வட்டுவாகல் விகாரையின் கீழ் 2009 இல் சரணடைந்தோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர்

**வன்னி பாராளுமனற் உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

01.03.2025

கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, தற்போது முல்லைத்தீவு – வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின்கீழ் பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக மக்கள் பலரும் தம்மிடம்



முறையிட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இன்று சனிக்கிழமை (01) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட நீதிமற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



எனவே மடியில் கனமில்லையெனில் விகாரையை அகற்றி அகழ்வினை மேற்கொண்டோ, நவீனமுறையில் ஸ்கேன் கருவிகள் மூலமோ ஆய்வுகளை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய அரசாங்கம் முன்வரவேண்டுமென இதன்போது நீதி அமைச்சையும் கோரியுள்ளார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி நீதியை வழங்குமாறும், அரசியல்கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்,கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிவிவகாரம், அரச திணைகளங்கள் மற்றும், அரசபடைகளால் தமிழ் மக்களின் காணிகள்



ஆக்கிரமிக்கப்படும் விவகாரங்கள் என்பவற்றிற்கும் நீதியை வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நீதி அமைச்சைக் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசு இதுவரை இனவாதம் பேசவில்லை. வரவேற்கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு பலமான சக்தி. இதனை முழுமனதோடு ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் நாம் நீதி கேட்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். ஜனாதிபதியும் தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டிருந்தார். நடந்தால் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும். நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிரவேறொன்றுமில்லை.

யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை, குறிப்பாக கணவரை மனைவியும், மகன், மகளை பெற்றோரும் வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய முன்றலில் ஒப்படைத்தார்கள். தடுப்புமுகாம்கள், கடல்எனப் பல இடங்களிலும் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்டவர்களை கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ்களில் கொண்டுசெல்லப்பட்டார்கள்.



இலங்கைப் படையினரிடம்தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில்லையே அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள். நீதிஅமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள்.

வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பேருந்தில் ஏற்றிக்கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பேருந்துகள் மட்டும் திரும்பி வந்ததாகவும் மக்கள் சொல்கின்றார்கள்.

வட்டுவாகல் தனித்தமிழ் சைவக்கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரியவிகாரை அமைக்கப்பட்டுள்ளது.

# ஆதாரங்களை திரட்டும் செயன்முறையை கனடா வலுப்படுத்த வேண்டும்!

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

16.02.2025

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை திரட்டும் செயன்முறை வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அச்செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும். அதற்குரிய அழுத் தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும் என இலங்கைக்கான அந்நாட்டு உயர்ஸ் தானிகர் எரிக் வோல்ஷிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கைக் கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ்க்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை(14) இரவு 7.30 மணிக்கு யாழ் ஃபொக்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழர்கள் முகங்கொடுத்துவரும் சமகாலப் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்குரிய தீர்வை வழங் குவதில் தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள் உள் ளிட்ட விடயங்கள் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் கஜேந்திரகுமாரிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளங்களை திரட்டும் செயன் முறை வரவேற்கத்தக்கதாகும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இருப்பினும் அச்செயற்திட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத் திய அவர், அதற்குரிய அழுத்தங்களை இணையனுசரணை நாடுகளில் ஒன்றான கனடா வழங்கவேண்டும் எனக் கேட்டுக்



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# வடக்கில் இராணுவத்தினரால் இளைஞர்களுக்கு போதைப்பொருட்கள் வழங்கப்படுகின்றன!

## பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

01.03.2025

இராணுவத்தில் நான்கில் மூன்று பங்கினர் வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் உணவகம் ஒன்றை நடத்துவதுடன் அங்கு இராணுவத்தினரால் இளைஞர்களுக்கு போதைப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

சில இளைஞர்கள் அந்த இராணுவ முகாமில் ஆடையின்றி உள்ளாடைகளுடன் இருந்ததை நான் என் கண்களால் கண்டேன் என்று இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (28) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாதுகாப்பு தரப்பினரால் நெருக்கடிகளை சந்திக்கும் தேசிய இனமாக தமிழினம் இன்றும் உள்ளது. நாட்டில் 3,17,000 படைகள் வரை இருப்பதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மக்கள் தொகை 2 கோடியே 21 இலட்சத்து 81,000 பேர். இதன் அடிப்படையில் 14 பேருக்கு ஒரு படையினர் என்ற வகையில் உள்ளது. இது வடக்கு மற்றும் கிழக்கில் 6 பேருக்கு ஒரு படை வீரர் என்ற வகையில் உள்ளது. இதில் நாட்டில் உள்ள படைகளில் நான்கில் மூன்று பங்கு படையினர் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் இராணுவ கெடுபிடிக்குள், திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைதான் உள்ளது.

யுத்தமில்லாத நாட்டில் ஏன் இவ்வளவு படையினர்? இவர்களுக்கான சம்பளத்திற்காக பெருமளவு பணம் ஒதுக்கப்படுகின்றது வடக்கு மற்றும் கிழக்கில் படையினரை குவித்து நீங்கள் திறந்த வெளிச் சிறைக்குள் தமிழர்களை அடைத்து வைத்துள்ள நிலையில் படையினர் இங்கு தோட்டங்கள் செய்கின்றனர் பலாலி படை முகாமை சூழவுள்ள பல் இடங்களில் படையினர் தோட்டங்கள் செய்கின்றனர் இவர்களின் உற்பத்திகள் யாழ்ப்பாணத்து சந்தைகளில் விற்பனைக்கு வருகின்றன.

அதுமட்டுமல்ல இங்கு படையினர் சலூன்களும் நடத்துகின்றனர். உலகில் சகல நாடுகளும் படையினரை வைத்துள்ளன. அங்கு படையினருக்கான சிகை அலங்காரத்துக்காக சலூன்கள் வைத்திருப்பார்களே தவிர மக்களிடம் பணம் அறவிட்டு படையினரைக்கொண்டு சலூன்கள் நடத்தும் ஒரே நாடு இலங்கை தான். அதுமட்டுமல்ல உணவகங்களையும் நடத்துகின்றனர்.

நான் அண்மையில் வடமராட்சியிலுள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சென்றேன். அங்கு முகாமிட்டுள்ள இராணுவத்தினர் உணவகம் ஒன்றையும் நடத்துகின்றனர். அங்கு வைத்து இராணுவத்தினரால் இளைஞர்களுக்கு போதைவஸ்துக்களும் வழங்கப்படுகின்றன சில இளைஞர்கள் அந்த இராணுவ முகாமில் மேல் ஆடையின்றி உள்ளாடைகளுடன் இருந்ததைநான் என் கண்களினால் கண்டேன். இராணுவமுகாமில் இராணுவம் உணவகம் நடத்தி தமிழ் இளைஞர்களை இவ்வாறு தவறான வழிக்கு கொண்டு செல்வது என்பது எவ்வளவு மோசமான காரியம். இந்த நாட்டில் ஒரு இனம் திட்டமிட்டு ஏதோவொரு வகையில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றும்போது, நாங்கள் உள் நாட்டு பொறிமுறையை பின்பற்றி தீர்வைக்காண்கின்றோம் எனக் கூறினார். இது கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இந்த நாட்டில் மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் சொல்லுகின்ற விடயம் .

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அப்போதிருந்த வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் நாங்கள் எல்லா வறையும் ஏற்றுக் கொண்டு தீர்வை எட்டுகின்றோம் எனக் கூறினார். நீங்கள் அப்போது இதனை ஏற்க மாட்டோம் என்றீர்கள். இப்போது உள்ளக பொறிமுறையில் தீர்வு என்கின்றீர்கள்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைக்காமல் உள்ளது நீதி தடுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சுக்காக 2023 ஆம் ஆண்டு 375 பில்லியன் ஒதுக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு 425 பில்லியன் ஒதுக்கப்பட்டது. தற்போது 2025 ஆம் ஆண்டுக்கு 437 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது .பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு படிப்படியாக கூடிக்கொண்டே செல்கின்றது.

யுத்தம் இல்லாத நாட்டில் படைகளுக்கு ஏன் இவ்வளவு நிதி? சமூக அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி ஒவ்வொரு ஆண்டும் குறைந்து செல்கையில் படையினருக்கான நிதி அதிகரித்து செல்கின்றது. நாட்டில் புரையோடிப்போயுள்ள பிரச்சினையை தீர்க்காமல் படையினருக்கு அதிக நிதிகளை ஒதுக்கிக்கொண்டிருந்தால் இந்த நாட்டின் சரிந்த பொருளாதாரத்தை எவ்வாறு நிமிர்த்தப்போகின்றீர்கள்? மூலதனத்திற்கான ஒதுக்கீடு மிக மிகக்குறைவு. இந்த நிலைமை மாற வேண்டுமானால் முதலில் உங்களின் மன நிலை மாறவேண்டும்.



யாழ்ப்பாணத்தில் வலி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 13 கிராம அலுவலகர் பிரிவுகளில் கிட்டத்தட்ட 2700 ஏக்கர் காணிகள் இப்போதும் படையினர் வசம் உள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற சொல்லுக்குள் அடக்கப்பட்டு அந்த இடங்களில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. மக்கள் இப்போது அகதிகளாக இருக்கின்றார்கள். இந்த மக்களின் காணிகளை ஏன் இன்னும் விட முடியவில்லை? பலாலி விமான நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்ட ஈடுகள் இன்னும் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மேலும் காணிகளை சுவீகரிக்கப்போவதாக செய்திகள் வெளி வருகின்றன.

ஒன்றை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். ஒருபகுதி மக்கள் கண்ணீரோடு வாழ்கின்றார்கள். அந்தமக்களுக்கு நீதி வழங்காது தொடர்ந்தும் படைகளுக்கு அதிக நிதிகளை ஒதுக்குவதென்பது நீதியாக அமையாது. கிளிநொச்சி நகரப் பகுதியில் 39 வீத நிலப்பகுதி தற்போதும் இராணுவ வசம் உள்ளது. இலங்கையில் எங்கேயாவது மாவட்ட அரச செயலகத்திற்குள் இராணுவ முகாம் உள்ளதா? கிளிநொச்சி மாவட்ட செயகத்திற்குள் இருக்கின்ற 2 ஏக்கர் காணியை இராணுவம் பலாத்காரமாக பறித்தெடுத்து இராணுவ முகாம் அமைத்துள்ளது. நகரப் பகுதியில் இராணுவம் குடியிருக்கின்றது. மக்களுக்கான காணிகள் இன்னும் வழங்கப்படவில்லை. அரச காணிகள் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படவில்லை.

எனவே இவ்வாறான படை ஆக்கிரமிப்புக்களிலிருந்து மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாது இந்த நிலை தொடருமானால் அது நாட்டை மிகவும் ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்லும். மக்கள் தமது ஜனநாயக உரிமையைக்கூட பயன்படுத்தமுடியாதவகையில் பாதுகாப்பு கிடுக்குப் பிடிக்குள் வைக்கப்பட்டுளார்கள். போராட்டங்களில் ஈடுபடுவோர் விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்றனர் என்றார்.

# சிறையிலுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க வேண்டும்

01.03.2025

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைத்துள்ள அரசியல் கைதிகளை அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பெயர்களை பட்டியலிட்டு மேலதிக விபரங்களை நீதி அமைச்சரிடம் கோரினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (28) நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27 - 2 இன் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது

தமிழ் இளைஞர்கள் பலர் இலங்கை சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் குடும்பத்தினர் கண்ணீருடனும் கவலையுடனும் இவர்களின் வரவுக்காக காத்திருக்கின்றனர். தாயை இழந்த நிலையில் தந்தை பல ஆண்டுகளாக சிறையில் இருக்க தாய், தந்தை இருவரின் அரவணைப்பின்றி பல பிள்ளைகள் தமது பெற்றோரின் விடுதலைக்காக தவமிருக்கின்றனர்.

இந்த நாட்டில் இன ஒற்றுமை, மாற்றம் வேண்டிய புதிய சிந்தனை, சுத்தமான இலங்கை என்ற மகுட வாசகங்களுள் சிறைக் கைதிகளும் மனிதர்களே என்ற மகுட வாசகத்தை மனதில் வைத்தாவது பல ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு அவர்களின் உறவினர்கள் நீண்ட காலமாக எங்களிடம் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் சில கேள்விகளை அமைச்சரிடம் எழுப்புகின்றேன். அதாவது தற்போது எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர்? தமிழ் அரசியல் கைதிகள் எந்தெந்த சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்? இவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள்? மனிதாபிமான அடிப்படையிலோ, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பிலோ இவர்களை விடுதலை செய்ய முடியுமா? என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, இது முக்கியமான கேள்வியாகும். இதற்கு நான் பதிலளிக்க வேண்டும். ஆனால் அமைச்சு மீதான விவாதம் நடக்கவுள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகளில் இருந்தமையினால் இன்று பதிலளிக்க முடியாதுள்ளது. இதற்கு ஒருவார கால அவகாசம் வழங்குங்கள் நான் அப்போது முழுமையான பதிலை வழங்குகின்றேன் என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய சிறீதரன், அமைச்சரின் கோரிக்கையை ஏற்கின்றேன். நான் முன்வைத்த விடயங்களுக்கு, மேலதிகமாக சில விடயங்களை சேர்க்க விரும்புகின்றேன். அதாவது கதிர்காமத்தம்பி சிவகுமார், விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், கிருஷ்ணசாமி ராமசந்திரன், சண்முகலிங்கம் சூரியகுமார்,

ஜோன்ஷன் கொலின் வெலன்டினோ, சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர், ஏ.எச்.உமர் ஹதாப், தங்கவேலு நிமலன், செல்வராஜா கிருபாகரன், தம்பிஜயா பிரகாஸ் ஆகியோரில் இரண்டு பேர் 30 வருடங்களாகவும், மூவர் 17 வருடங்களும்,ஒருவர் 22 வருடங்களாகவும் மற்றும் நான்கு பேர் 16 வருடங்களாக சிறையில் வாழ்கிறார்கள். இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் இவர்களின் விடுதலை தொடர்பில் அதிக கரிசனை செலுத்தி உங்கள் விடையை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.




இதனை தொடர்ந்து பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், அந்த பெயர்களை இன்றைய தினத்தில் எனக்கு கிடைக்கச் செய்யுங்கள். அந்தப் பெயர்கள் கிடைத்தால் அது தொடர்பில் விசேட கவனத்தை செலுத்துகின்றேன். அதன்படி நான் பதிலளிக்கின்றேன் என்றார்.

இவ்வேளையில் மீண்டும் உரையாற்றிய சிறீதரன் நீண்ட காலமாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் பட்டியலையும் குரலற்றோரின் குரல் அமைப்பு வெளியிட்ட கடிதத்தையும் சபாபீடத்திற்கும் அமைச்சரின் கவன்திற்காகவும் சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

# ‘வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்’ அறிக்கை வெளியீடு!

02.03.2025

‘வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்’ என்ற அறிக்கை வெளியீடும் ஊடக சந்திப்பும் இன்று 02 யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது.




சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இன்று வெளியிட்டு வைத்தனர்.

பாதிக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அகவணக்கம், பொதுச்சுடர் ஏற்றல், மலர் வணக்கத்தை தொடர்ந்து வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் தி.எஸ் தில்லைநாதன் நிகழ்த்தியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சோ தண்டாயுதபாணி தேசிகர், யாழ். மறை மாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் ஊரணி மயிலிட்டி பங்குத்தந்தையும் லண்டன் கத்தோலிக்க ஆண்மீக பணியகத்தின் இயக்குநருமான அருட்தந்தை தேவராஜன் அடிகள் ஆகியோர் அஞ்சலி உரையை ஆற்றினர்.

தொடக்க உரையை வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு செயலாளர் ந. ஆனந்தராஜ் ஆற்றினார். அதன் பின்னர் அறிக்கை அறிமுகமும் பிரதிகள் வழங்கலையும் தொடர்ந்து சிறப்புரைகளை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னானடோ மற்றும் வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு தலைவர் ச.செல்வேந்திரா ஆகியோர்



ஆற்றியிருந்தனர்.

நன்றி உரையினை சிரேஸ்ட ஊடகவியலாளர் கு.மகாலிங்கம் நிகழ்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.







# கொக்குத்தொடுவாய் பகுதி மனித புதைகுழி இலக்கத்தகடுகளை அடையாளங்காண அழைப்பு!

03.03.2025

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பொலிஸ் பிரிவுக்



குட்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நிறைவுபெற்ற பின்னர் அது தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் கடந்த 27 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வழக்கில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவா மற்றும் காணாமல் போனோர் அலுவலக சட்டத்தரணிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சார்பான சட்டத்தரணிகள் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவா அவர்கள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டு அறிக்கைகள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில்



அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் இருந்த உடைகள் தொடர்பான ஆய்வறிக்கையும் இரண்டாவதாக கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணியின் போது அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆட்களை இனம் காணக்கூடிய பொருட்கள் சம்பந்தமான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிச்சயமாக இரண்டாவது அறிக்கையில் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட இலக்கத்தகடுகள் ஆடைகளில் பொறிக்கப்பட்ட இலக்கங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது இந்நிலையில் குறித்த இலக்கத்தகடுகளுக்குரியவர்களின் உறவினர்கள் யாராவது





முன்வந்தால் இறந்தவர்களை நாங்கள் இலகுவாக இனங்காண முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இறுதி அறிக்கை எதிர்வரும் ஆறு வார காலங்களில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது இறுதி அறிக்கையின் போது சட்ட வைத்தியர்களின் பூரண அறிக்கை இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள் என்ன காரணத்தினால் இறந்தார்கள் அவர்களின் வயது உயரம் போன்ற விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் ஆறு வார காலத்தில் சமர்ப்பிக்கப்படும் இல் வழக்கானது அடுத்த தவணை க்காக மார்ச் 27 க்கு தவணையிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

www.sangathamil.ca

# எல்லா சிங்களத் தலைவர்களும் குற்றமிழைத்த படையினரையே பாதுகாக்கின்றனர்!

## மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன்

03.03.2025

இந்த நாட்டில் சிங்கள தலைவர்கள் என்பது வலதுசாரியாக யிருந்தாலும் இடதுசாரியாகயிருந்தாலும் எந்த கட்சியை சேர்ந் தவராகயிருந்தாலும் குற்றமிழைத்த படையினரை பாதுகாக்கும் செயற்பாட்டினையே முன்னெடுத்து வருவதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று (02.02.2025) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் அவர், “ஐநா மனித உரிமை பேரவையின் கூட்டம் நடைபெற்றது. இதனை தேசிய மக்கள் சக்தி அரசு எவ் வாறு கையாளப்போகின்றது என்ற கேள்வி எங்களிடமிருந்தது.

இந்த பேரவையின் கூட்டத்தில் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்ட கருத்துகள் தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் ஏமாற்றமானதாகவே இருந்தது.

இறுதி யுத்ததின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் அவலங்கள் தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் அவர்களுக்கான பொறுப்புக்கூறலை பார்க் கின்ற போது அமைச்சரின் கருத்து ஏமாற்றத்தினையளித்தது.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியானாலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியென்றாலும் இந்த கட்சிகள் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக செயற்பட்டதைவிட பாதிப்பினை ஏற்படுத்திய படை யினரை பாதுகாக்கும் வகையிலான செயற்பாடுகளேயிருந்தது.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் பார்க்கின்ற போது இறுதி யுத் ததில் நடைபெற்ற விடயங்களின் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும், உண்மைகள் கண்டறியப்பட்டால் அதற்கான நீதிகள், பரிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

அவை வழங்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதுடன் பொறுப்புக்கூறலில் அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

ஆனால் வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துகளை பார்க்கின்ற போது அவர் உள்நாட்டு பொறிமுறையின் அடிப் படையில் இந்த பிரச்சினைகளை தீர்க்கலாம் என்ற அடிப்படை யிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றின் ஊடாக உள்ளக பொறிமுறை யினை பயன்படுத்தி இறுதி யுத்த விடயங்களை கையாளலாம் என்று சொல்லியுள்ளார்கள்.

தமிழ் மக்களை பொறுத்த வரையில் யுத்தம் நிறைவுபெற்று 16ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உள்பொறிமுறை எங்க



ளுக்கு ஒரு அங்குலம்கூட முன்னேறவில்லை. விஜயதாச ராஜபக்ஸ அமைச்சராகயிருந்த காலப்பகுதியில் காணாமல் ஆக் கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாவினை வழங்கி கோவையினை மூடிவிடலாம் என்று கருதினார்கள் அது வெற்றியளிக்கவில்லை.

சிங்கள தலைவர்களைப் பொறுத்தவரையில் வலதுசாரி கட்சிகள் என்றாலும் இடதுசாரி கட்சிகள் என்றாலும் அவர்கள் செய்கின்ற செயற்பாடுகள் என்பது தமிழ் மக்களுக்கு பாரிய ஏமாற்றத்தினை தருகின்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதை விட பாதிப்பினை ஏற்படுத்திய படையினரை குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் அவர்கள் செயற்படுகின்றார்கள்” என குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்!

04.03.2025

அனைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் இன்று செவ்வாய்க்கழமை (04) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடு




பட்டனர்.

இதன் பிரகாரம் வவுனியா பல்கலைக்கழகத்தின் வாயிலிலும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் ஒரு மணி நேர கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போதைய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் தமக்கு வழங்கப்பட்டு வருகின்ற கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்




ளதாகவும், ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவில்லை எனவும் தெரிவித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடு பட்டிருந்தனர்.

கடந்த காலத்தில் தமக்கு வழங்கப்பட்டு வந்த சில கொடுப் பனவுகள் இம்முறை வரவு செலவு திட்டத்தில் அதிரடியாக குறைக்கப்பட்டு இருப்பதாகவும் சம்பள உயர்வு என்ற பெயரில் தமக்கான சம்பளம் குறைப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டி இருந்தனர்.

பாடசாலை பல்கலைக்கழக வாயிலில் சுமார் 12 மணிக்கு ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டம் ஒரு மணி வரை இடம் பெற்றதோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளையும் ஏந்தி இருந்தனர்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்!

04.03.2025

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்றைய தினம் (4) பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




“இடமாற்ற விண்ணப்பங்களுக்கு நடவடிக்கை எடு”, “OT வீதத்தை மாற்றாதே”, “சம்பளத்தை பொய்யாக உயர்த்தாதே”, “பதவி வெற்றிடத்தை உடனடியாக நிரப்பு” போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட அட்டைகளை ஏந்தியவாறு இதன்போது ஆர்ப் பாட்டம் நடத்தினர்.



# ‘தமிழ் மக்களை அரசாங்கம் ஏமாற்றுகிறது’

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின்

05.03.2025

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உள்ளிட்ட விவகாரங்களில் கடந்த கால அரசுகளைப் போன்று அனுர அரசும் ஏமாற்றும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். வட மராட்சிக்கு நேற்று (04) விஜயம் மேற்கொண்ட இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப் பில் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவது, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு உள்ளிட்ட தமிழர் விவகாரங்களில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் அனுர அரசும் ஏமாற்றும் விதத்திலேயே செயற்பட்டு வருகிறது.

ஜெனீவா விவகாரம் மற்றும் வரவு - செலவு திட்டம் ஆகியவற் றில் இந்த விடயங்கள் குறித்து அதிகமாக பேசுகின்ற அளவுக்கு நடைமுறையில் செயற்படுத்துவதில் இந்த அரசு அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரது அண்மைக்கால பேச்சுகள் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

அரசியல் தேவைகளுக்காக மீனவர் பிரச்சினையை கையி லெடுக்காது கடல் வளத்தையும் மீனவர்களது வாழ்வாதாரத் தையும் கருத்தில் கொண்டு இரு நாட்டு அரசுகளும் சாத்திய மான வழிமுறைகளில் தீர்வுகான முன்வரவேண்டும் என்றார்.



# யாழ். அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான விவகாரம்: நீதிமன்றம் அதிரடி உத்தரவு

05.03.2025

யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமான கண்காணிப்பு பணிக்கு மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் ஐவரை நியமிக்க நீதி மன்றம் உத்தரவிட்டது.







அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கினுடைய கலந்தாய்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தலைமையில், செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்றது

குறித்த கலந்துரையாடலில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி சுகாசும், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குறித்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட மயானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு உரிய வகையில் வழங்கப்பட வேண்டும் என்றும் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக குறித்த மயானத்தி னுடைய அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பாது காப்பு பணியை மேற்பார்வை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என சட்டத்தரணிகளால் கோரப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதவான், மயான அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஐந்து உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த அனுமதி வழங்கினார். வழக்கு தொடர் விசாரணைக்காக திகதியிடப் பட்டது.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# மாமனிதர் கிட்டினன் சிவநேசன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்

06.03.2025

மாமனிதர் கி. சிவநேசன் அவர்களின் 17ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நேற்று 06.03.2025 மல்லாவி அனிஞ்சியன் குளத்தில் பிரத்தியேகமாக விதைக்கப்பட்ட இடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் அணியினர் மற்றும் மல்லாவிப் பகுதி இளைஞர்களாலும் முன்னெடுக்கப்பட்டது.

வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்களின் பேரிணையத்தின் முன்னாள் பொதுமுகாமையாளரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சிவநேசன் அவர்களின் 17ம் ஆண்டு இன்றாகும்.



அன்று யாழ்ப்பாணம், வடமராட்சியின் கரவெட்டி கிழக்கு எனும் கிராமத்தில் திரு கிட்டினன், ஆழ்வியம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக பிறந்த மாமனிதர் சிவநேசன் அவர்கள் தனது ஆரம்ப கல்வியினை யாழ்.கரவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியினை யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார் பின்னர் 1980 ம் ஆண்டில் பனை தென்னை வள கூட்டுறவு துறையில் பணி யாற்ற ஆரம்பித்து வட மாகாண பனை தென்னை வள கூட் டுறவு சங்கங்களின் பேரிணையத்தின் பொதுமுகாமையாளர் எனும் பதவி நிலைவரை உயர்வுபெற்று கூட்டுறவுத்துறையில் சார்ந்த மக்களுக்காக உழைத்தார்.

சிறுவயது முதல் பேச்சாற்றல் மிக்கவராகவும் இறை வழிபாட்டில் அதிக ஆர்வமும் கொண்டவர் தமிழ் தேசிய விடுதலை ஊடாகத்தான் சமூகவிடுதலையை வென்றெடுக்கமுடியும் என் பதில் அசைக்கமுடியாத நம்பிகை கொண்டு தமிழ்த்தேச விடுதலைக்காக 1982 ல் இருந்து பணியாற்றினார்.

இதன் பிரகாரம் தமிழீழ தேசிய தலைவர் அவர்களின் வேண் டுகோளை ஏற்று 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்தேசியகூட்டமைப் பின் சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு 43730 வாக்குக்களை பெற்று நாடாளுமன்றுக்கு தெரிவாக்கினார் .

தமிழ் மக்களை தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின்னால் அணிதிரட்டும் புனிதப்பணியில் தாயகத்திலும் புலம் பெயர்ந்த மண்ணிலும் ஈடுபட்டவர். ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் பல தடைவ பயணம் செய்த இவர் ஐரோப்பிய நாட்டின் பல பாராளு மன்ற உறுப்பினர்களையும் பல இராஜதந்திரிகளையும் அந் தந்த நாடுகளில் சந்தித்து தமிழ் மக்களது உரிமைப் போராட் டத்தின் நியாயப்பாடுகள் தொடர்பாகவும் தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொண்டு வரும் இன அழிப்பு தொடர்பாகவும் எடுத்துரைத்து சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டுவதில் பெரும் பங்காற்றியவர். நீண்டகாலமாக ஸ்ரீலங்க படைகளினதும் துணை இராணுவக் குழுக்களினதும் அச்சுறுத்தல்கள் தனக்கெதிராக தொடர்ந்து கொண்டிருந்த பொழுதும் கூட மிரட்டல்களுக்கு பணியாது தமிழ் தேசியத்தின் விடுதலைக்காக உழைத்த நம் மாமனிதர் சிவநேசன் அவர் களும் சாரதி பெரியண்ணன் மகேஸ்வரராஜா அவர்களும் 06.03.2008 வியாழக்கிழமை அன்று கொழும்பில் இருந்து மல்லாவி நோக்கி மல்லாவி சிவன்கோவிலில் சிவராத்திரி





நிகழ்வில் பிரசங்கம் நிகழ்த்தும் பொருட்டு வருகைதந்தவேளை பிற்பகல் 1.10 மணியளவில் மாங்குளம் கொல்லர் புளியங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படை யணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொலை செய்யப்பட்டார்...



தேசியத்தலைவர் அவர்கள் மாமனிதர் எனும் அதியுயர் விருதினை வழங்கி புகளுடலினை வன்னிப்பெருநிலப் பரபெங்கும் மக்களின் மலர்வணக்கத்துக்காக முள்ளியவளை இல் இருந்து கிளிநொச்சி ஊடாக மாங்குளம் மல்லாவிவரை எடுத்துச்சென்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டறவாளர்கள் பொதுமக்கள் போராளிகள் பங்கேற்க இறுதி வணக்கநிகழ்வு மல்லாவியில் நடைபெற்று....

மாமனிதர் சிவநேசன் அவர்களின் புகழுடல் மல்லாவி அனிச் சியன் குளம் பிரதேசத்தில் பிரத்தியேகமாக விதைக்கபட்டது......!

# வடகிழக்கு மக்களுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை: அதற்காக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளோம்

### மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ்

07.03.2025

'வடகிழக்கு மக்களுக்கு அன்று முதல் இன்று வரை நீதி கிடைக்கவில்லை, தற்போது புதிதாக வந்துள்ள அந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காகவும் உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்காகவும் நாங்கள் தொடர்ந்து போராட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர் அருட்தந்தை ஜீவநந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையில் (06) நீதிக்கான நடை பயணத்தின் 1030 வது நாள் போராட்டத்தில் மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப் பினர்கள் பௌத்த தேரர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

காலிமுகத்திடல் அரகலைய போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் நீதிக்கான பயணம் தொடர்ந்து 1030 வது நாளாக இடம்பெற்று வருகின்றது.அந்தவகையில்' வடக்கு கிழக்கில் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி அவர்களுக்கான இடங்கள் அன்று முதல் இன்றுவரை கிடைக்கப்படவில்லை'. அனைத்து மக்களையும் விட அதிகமாக வடகிழக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதை கருத்திற் கொள்ள வேண்டும்'.

எனவே அந்த மக்களின் நோக்கத்தை கூட தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே, மக்களின் நோக்கத்துக்காக மக்கள் பேரவைக்கான இயக்கமாகிய நாங்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து போராடிவருகின்றோம். அதை வலியுறுத்து




வதற்காக இந்த தொடர்ச்சியான நடைபாதை போராட்டங்கள். கோரிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அசாதாரண நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற் காகவும் உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற் காகவும் மக்களாகிய நாங்கள் ஒன்றுபடவேண்டும் ' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் மனிதனை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச்செல்கின்றன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, காலமாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்பச் சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் புதிய தீர்மானம் அவசியம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

06.03.2025

'ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிர்காலத்தில் கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு தமிழ் மக்களின் சம்மதத்தினை பெற வேண்டுமாயின் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் ஏனைய சர்வதேச நீதி கட்டமைப்புகளிலும் பாரப்படுத்தும், புதிய தீர்மானம் அவசியம்' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 58 வது அமர்வில் இலங்கை குறித்த புதிய தீர்மானம் தொடர்பில் இணை அனுசரணை நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதனை தெரிவித்துள்ளது.

2021 ஜனவரி 15ம்திகதியும் பெப்ரவரி 24ம் திகதியும் செப்டம்பர் 8 ம் திகதியும் 2022 பெப்ரவரி 25ம் திகதியும் கூட்டாக வெளியிட்ட கடிதங்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி எடுத்துக் காட்டியுள்ளது.

அந்த தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என தெரிவித்திருந்தோம்.

'அனைத்து முன்னைய தீர்மானங்களும் ஜெனீவாவில் பொறுப்புக்கூறலை தேக்கமடையச் செய்கின்றன'.

'மேலும் இவை இலங்கைக்கு காலஅவகாசத்தை வழங்குகின்றன' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இரண்டு உறுப்பினர்களை கொண்டுள்ள இணை அனுசரனை நாடுகள், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தீர்மானத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம்'.

'இலங்கையில் தொடரும் வன்முறைகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்காக விசேட அறிக்கையாளரை நியமிக்கும் வகையிலும் மாற்றங்களை கொண்டு வரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தோம்' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

'இலங்கை குறித்த முதலாவது தீர்மானம் 2012 இல் நிறைவேற்றப்பட்டு பல வருடங்களாகிவிட்டது'.

'எங்களின் எச்சரிக்கைகள் ஒவ்வொன்று சரியானவை என்பது நிரூபணமாகியுள்ளது' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

'இந்தநிலையில் இலங்கையின் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் முன்னைய தீர்மானங்களை, இலங்கை விவகாரத்தில் தலையிடுபவை, அரசியல் நோக்கம் கொண்டவை என நிராகரித்துள்ளதுடன் உள்நாட்டு பொறிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளது' என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருவாக்கப்படும் எந்த பொறிமுறையும் உண்மையை



கண்டறிவதை நோக்கமாக கொண்டிருக்கும் மாறாக பொறுப்புக்கூறலை நோக்கமாக கொண்டிராது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

'இவ்வாறான சூழ்நிலைகளில் இந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களை போல குற்றவாளிகளிற்கு எதிராக சுயவிருப்புடன் நடவடிக்கைகளை எடுக்காது என்பது மிகவும் தெளிவாக தெரியவந்துள்ளது' என்று இணை அனுசரணை நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

'குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்பதையே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வலியுறுத்திவருகின்றனர்'. 'மீளநிகழாமைக்கு இது மிகவும் அவசியம்' என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

# மட்டக்களப்பில் மீண்டும் பதிவுகளை மேற்கொள்ளும் சிங்களப் பொலிசார்: அச்சத்தில் தமிழ் மக்கள்

08.03.2025

மட்டக்களப்பில் மீண்டும் சிறீலங்கா சிங்களப்பொலிசார் குடியிருப்பாளர்களின் விபரம் திரட்டுவதற்கான விண்ணப்பபடிவங்களை வீடுவீடாக சென்று வழங்கும் நடவடிக்கையினை இன்றையதினம்(08) ஆரம்பித்துள்ளதையடுத்து மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றியுள்ளது

1865 ம் ஆண்டு 16 ம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ம் பிரிவிற்கமைய வீடுகளில் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கி இருப்போரின் விபரங்களை பெற்றுக் கொள்வதற்கான தலைப்பிலான இந்த விண்ணப்பப் படிவம் மட்டக்களப்பு நகரிலுள்ள பகுதிகளில் வீடுவீடாக பொலிசார் சென்று வழங்கி வருகின்றனர்.

இந்த பொலிஸ் பதிவு மீண்டும் ஆரம்பித்ததையடுத்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றியுள்ளதுடன் கடந்த 2016 ம் ஆண்டுக்கு பிற்பாடு மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆட்சியாளர்கள் மாறினாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடையத்தில் கவனம் செலுத்தப்படவில்லை!

## திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா

08.03.2025

ஆட்சியாளர்கள் மாறுகின்றபோதும் எவருமே காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு சனிக்கிழமை (08) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா மேலும் தெரிவிக்கையில்,

புதிய ஆட்சியாளர்கள் மாறிவருகின்றபோதிலும் தமது குரலுக்கு எவருமே செவிசாய்க்கவில்லை. தமது தொடர்ச்சியான போராட்டங்களின்போது தமது பக்கமாக நின்ற அனுர அரசாங்கமானது தற்போது ஆட்சிக்கு வந்த பின்னராக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் மௌனம் சாதிக்கின்றது.

காலங்கள் மாறுகின்றபோதிலும் எமது நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சியாளர்கள் மாறிவருகின்றபோதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது நிலமை தொடர்கதையாகவே காணப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடி வீதியில் இறங்கி பெண்கள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக்கும் இந்த நிலையிலே தற்போது அத்தியாவசிய பொருட்களது விலைகளும் குறைந்தபாடில்லை ஆகையால் தமக்கு எங்கு பார்த்தாலும் இன்னல்கள் நிறைந்ததாகவே காணப்படுகிறது.




அதுபோலவே வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக வேலை பார்க்கச் செல்லும் பெண்களது நிலமைகளும் அவர்களது பிள்ளைகளது வாழ்வும் தொடர்ச்சியான இன்னல்களை சந்திக்கும் நிலையாகவே காணப்படுவதுடன் இதிலிருந்து பெண்கள் விடுபட்டு தமது வாழக்கையை நடத்த மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். முன் வைக்கிறோம் குறித்த மனிதப் புதை குழி தொடர்பில் நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள் வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# திருகோணமலையில் 5,226 ஏக்கர் நிலம் துறைமுக அதிகார சபை வசம்

## திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் எஸ். குகதாசன்

08.03.2025

"இலங்கைத் துறைமுக அதிகார சபையானது பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் 5,226 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி வைத்துள்ளது உள்ளது. இதில் 1882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றார்கள். துறைமுக அதிகார சபையிடம் இருந்து அதை விடுவிக்க வேண்டு மென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். குகதாசன் வலியுறுத்தினார்.



பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (7) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மற்றும் நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் மாகாண மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் வரும் முதன்மையான வீதிகள் உள்ளக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. எனவே இதனை மறுசீரமைக்க வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் பாலங்களும் பழுதடைந்துள்ளன. இவை நீண்ட காலத்துக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். எடுத்துக்காட்டாக மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் கட்டைபறிச்சான் பாலம் ( கருப்பு பாலம்) மற்றும் இறால் பாலம் என்பன முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றன . இவற்றைச் சீரமைக்காவிட்டால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைப் புதிதாக அமைக்க வேண்டும்.

அதேபோன்று வெருகல் பிரதேசத்தில், ஏரிக்கும் கடலுக்கும் இடையில் சுமார் 5000 மக்கள் வாழ்கின்றனர். பேரிடர் காலங்களில், மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கி மரணத்தை சந்திக்கக் கூடிய வாய்ப்பு உண்டு . இவ்வாறான விளைவுகளைத் தடுக்க ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும். திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையில் கொக்கிளாய் ஏரி உள்ளது.

இது ஓர் ஆழமற்ற ஏரி. புல்மோட்டையில் வாழும் மக்கள் கொக்கிளாய் ஏரி வழியாக 32 கிலோமீட்டர் பயணித்தால் முல்லைத் தீவை சென்றடையலாம். பாலம் இல்லாததால் மக்கள் வவுனியா வரை சுற்றிச் சென்று 75 கிலோமீற்றர் அதிகமாக பயணித்து முல்லைத்தீவுக்கு செல்ல வேண்டியுள்ளது. இது பணச் செலவையும் நேரச் செலவையும் ஏற்படுத்துகிறது. எனவே கொக்கிளாய் ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் முதன்மையான வளமாக காணப்படுவது அதன் இயற்கை துறைமுகம். ஆனால் சுதந்திரத்திற்கு பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் இந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பெரிய அக்கறை காட்டவில்லை. திருகோணமலை துறைமுகத்தின் உள்ளே 4 இறங்கு துறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று அஷ்ரப் இறங்கு துறை. இது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எஞ்சிய மூன்று இறங்கு துறைகளில் ஒன்று பிறிமாமா ஆலையும் மற்றொன்றை டோக்கியோ சீமேந்து ஆலையும் பிறிதொன்றை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனமும் பயன்படுத்துகின்றன.

அஸ்ரப் இறங்கு துறையில் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுடன் மாத்திரம் இன்று வரை ஆளணி பற்றாக்குறை, போதிய கப்பல் தரிப்பிட வசதியின்மை போதிய சரக்கு களஞ்சிய வசதியின்மை சரக்கு ஏற்றி இறக்கும் கனரக இயந்திரங்கள் இன்மை, முறையான வாகன ஓடுதளம் இன்மை என்ற குறைபாடுகளோடு காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்கு வரவேண்டிய கடற் கலங்களுக்கு சிறந்த சேவை கிடைப்பதில்லை.

இதனால் அவை வேறு துறைமுகங்களை நாடிச் செல்கின்றன. இதன் விளைவாக நமக்கு பாரிய வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. துறைமுகத்தில் உள்ள குறைபாடுகளை சீர் செய்வதன் மூலம் கணிசமான அந்நிய நாணயமாற்று வருவாய் ஈட்ட முடியும். முற்கூறியவாறு மூன்று நிறுவனங்கள் பயன்படுத்தும்




மூன்று இறங்கு துறைகளையும் இலங்கைத் துறைமுக அதிகார சபையே நிருவகித்தால் கூடுதல் வருவாயினை நாட்டுக்கு ஈட்ட முடியும் என்பதோடு வேலை வாய்ப்புகளையும் வழங்க முடியும்.

துறைமுகத்தை அண்டியுள்ள எண்ணெய்க் குதங்களில் பத்து வீதத்துக்கும் குறைவானவையே பயன்பாட்டில் உள்ளன. ஏனையவற்றையும் பயன் பாட்டுக்கு கொண்டு வந்தால், இந்துமா கடலில் பயணம் செய்கின்ற கடற் கலங்களுக்கு எரிபொருள் வழங்கி பெருமளவு அந்நிய நாணய மாற்றினை ஈட்டுவதோடு வேலை வாய்ப்பினையும் வழங்கலாம்.

இலங்கைத் துறைமுக அதிகார சபையானது பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் 5226 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி வைத்துள்ளது உள்ளது. இதில் 1882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றார்கள். எனவே துறைமுக அதிகார சபையிடம் இருந்து அதை விடுவித்து அதில் வாழும் மக்களுக்கு வழங்க வேண்டும்.

இ.போ. சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு 37 பஸ்கள் தேவை. எனினும் 20 பஸ்கள் மட்டுமே அதனிடம் உள்ளன. இதனால் இ.போ.சபையானது சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது. எனவே பழுதுபட்டு கிடக்கின்ற பஸ்களை திருத்த வேண்டும். குறைந்தது பத்து புதிய பஸ்களை திருகோணமலை மாவட்டத்துக்கு வழங்க வேண்டும்.

அத்தோடு இ. போ.சபையின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் காணப்படும் 50சதவீதமான ஆளணி பற்றாக்குறை நிரப்ப வேண்டும். மேலும் இ.போ.சபையின் திருகோணமலை மாவட்ட தரிப்பிட உள்ளக ஓடுதளம் மிக மோசமாக பழுதடைந்துள்ளது இதை மறுசீரமைக்க வேண்டும். திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு நேரடியாக புறப்படும் புகையிரதம் சேவை அண்மையில் நிறுத்தப்பட்டு உள்ளது. இதனை மீள தொடங்க வேண்டும் என்றார்.

# மாவீரர் துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.03.2025

மாவீரர்களுடைய உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவுகூருவதற்காக, வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர்துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் இக்கோரிக்கையை விசேடமாக முன்வைத்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,





இறந்தவர்களை நினைவு கூருதலென்பது அங்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும்.

எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நினைவுநாளாக நவம்பர்-27 அன்று துயிலுமில்லங்களிலும், மே-18 அன்று முள்ளிவாய்க்காலிலும் நினைவு கூருவார்கள்.

கடந்தவருடம் உங்களுடைய ஆட்சியில் தடைஇல்லாமல் உணர்வுபூர்வமாக நவம்பர் 27 நாளினை நிம்மதியாக நினைவு கூர்ந்தார்கள்.

துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணவத்தினர் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கில் அதிகமாகவும், முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒருபடையினர் என்று உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒரு சொட்டுக்கண்ணீர் சிந்தி, தமது மனத்தை ஆறுதல் படுத்துவதற்கு, இராணுவம் அத்துமீறி கையகப்படுத்திவைத்துள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள இன்னும்சில துயிலுமில்லங்களையும் விடுவியுங்கள்.

**எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; என்பதே எமது குறிக்கோள். இதுவெ எமது தேசத்தின் அபிலாசை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# “பிள்ளைகளை ஒவ்வொருநாளும் தேடித்தேடி நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம்” மார்ச் 08, முல்லைத்தீவில் மக்கள் போராட்டம்

08.03.2025

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது இன்றுவரை தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை சனிக்கிழமை (08) முன்னெடுத்துள்ளனர்.

கவனயீர்ப்பு போராட்டமானது முல்லைத்தீவு கோத்தபாய கடற்படை முகாமிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது வட்டுவாகல் பாலம் ஊடாக பேரணியாக சென்று வட்டுவாகல்




பகுதியில் இறுதியாக கையளிக்கப்பட்ட இடத்திற்கு முன்பாக வரை சென்று போராட்டம் நிறைவடைந்திருந்தது.

கவனயீர்ப்பு போராட்டத்தின் போது சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன!, பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம். கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம்! எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும், தமிழரை கடத்தாதே! இனவழிப்பு செய்யாதே! உங்கள் சிறைக் கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு என்ன கல்விக்கூடமா? எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா? உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக்கிறது அரசு, போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தின் போது வட்டுவாகல் விகாரைக்கு செல்லும் வழியில் அதிகளவவான காவல்துறையினர் ஈடுபட்டடிருந்தமையும் குறிப்பிடதக்கது.

இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் திரு.வோல்கர் டேர்க் அவர்களுக்கான ஒரு அறிக்கையை வாசித்தனர்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மீண்டும் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்துகின்றோம்.

08-03-2025

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வடக்கு கிழக்கு மாகாணம்.

ஜக்கிய நாடுகளின் மனித உரிமைகள் போரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த பிப்ரவரி மாதம் 24 ம் திகதி ஜெனிவாவில் தொடங்கியது, இக் கூட்டத்தொடரில் இலங்கை அரசு சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கடந்த கால தீர்மானங்களை நிராகரிப்பதாக கூறிப்பிட்டார்,

நீங்கள், இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவரும் தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கட்டியொழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் என அறிக்கையிட்டள்ளீர்கள்,

இலங்கை சிங்கள பேரினவாத அரசு அனைத்தையும் நிராகரித்துள்ளது, நாம் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இடமான முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் வட்டுவாகலில் நின்று மீண்டும்,மீண்டும் கோருகின்றோம்.

வலிந்துகாணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் பல வருடங்களாக தமிழர் தாயகத்தில் எட்டு மாவட்டங்களும் இணைந்து எமது உறவுகளை தேடியும் அவர்களுக்கான நீதியை கோரி போராடி வருகின்றோம்.

எமது போராட்டமானது இறுதி யுத்தத்தின் போது கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும் இலங்கை இராணுவம் மற்றும் துணைக் குழுக்களால் கடத்தி சென்று வலிந்து காணாமல் ஆக்கசெய்தார்கள் பல வேறு பட்ட விதங்களிள் கடத்தியும் செல்லப்பட்டார்கள். இலங்கை இராணுவம் மற்றும்துணைக் குழக்களிடமும் எமது உறவுகளை எம்மிடம் வழங்குமாறு இரந்து கேட்பதில் ஆரம்பித்து உள்ளக நீதிப் பொறிமுறையூடாக நீதி மறுக்கப் பட்ட நிலையில் சர்வதேச நீதிப் பொறி முறையை நாடிய




போராட்டங்களாக விரிவடைந்து உள்ளது.

எமது உறவுகளை மீட்பதில் ஆரம்பித்த நீதிப் போராட்டமானது மீளவும் இவ்வாறான வலிந்து காணாமலாக்கப்படுதல் சம்பவங்களால் எமது இனம் பாதிக்கப்படாது இருப்பதனை உறுதி செய்வதற்கான சர்வதேச கண்காணிப்பையும் வலியுறுத்தியதன் ஊடாக எமது இனத்தின் பாதுகாப்பிற்கான போராட்டமாகவும் விரிவடைந்து உள்ளது.



எமது போராட்டத்தின் விளைவாக எமது உறவுகள் இலங்கை இராணுவத்தினாலும் துணை இராணுவ குழுக்களாலும் வலிந்து காணாமலாக் காரணமானவர்களை இலங்கை அரசாங்கம் பாதுகாப்பதிலும் நீதி கோருபவர்களை அச்சுறுத்துவதிலும் கவனம் செலுத்துவதுடன் சர்வதேசத்தை ஏமாற்ற முயலுகிறது என்பதனை எமது போராட்டங்கள் ஊடாக சர்வதேசத்திற்கு நிருபித்ததன் விளைவாக இன்று சர்வதேச நாடுகள் எமக்கான தீர்வுகள் தொடர்பாக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன.

எமது வடக்கு கிழக்கு இணைந்து ஒற்றுமையாக நாம் போராடினாலும் நாங்கள் இப் போராட்டத்தின் போது எதிர் கொண்ட அச்சுறுத்தல்களும் ஆபத்துகளும் துரோகங்களும் எண்ணில் அடங்காதவை எமது நீண்ட நெடிய நீதி கோரல் பயணத்தில் நாம் எட்ட வேண்டிய இலக்கு இன்னும் மிகத் தொலைவிலேயே உள்ளது.

தற்போது ஐநா கூட்டத்தொடர் தொடங்கி உள்ள இந்த காலப் பகுதியில் எமது போராட்டங்களை தீவிரப் படுத்த வேண்டிய நிலையிலும் சர்வதேச உறவுகளை கட்டிமுப்புவதன் ஊடாகவும் எமது நீதிக்கான பயணத்தினை விரைவு படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனவே மாதாந்த தொடர் போராட்டங்களை நடத்தியும், சர்வதேச ரீதியான கவனயீர்ப்புக்கள் மற்றும் ஆதரவு திரட்டல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தை சேர்ந்த எட்டு மாவட்ட நிருவாகங்களும் இனணந்து தீர்மானித்துள்ளோம்.

இப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குமாறு சமூக அமைப்புக்கள் சிவில் சமுக பிரதிநிதிகள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சர்வதேச பிரதிநிதிகள் மற்றும் என்றும் எங்களுடன் உறுதுணையாக நிற்கும் ஊடகவியலாளர்கள் , பொதுமக்கள் அனைவரையும் ஆதரவு தந்து உதவுமாறு பாதிக்கப்பட்ட சங்கமாக கேட்டுக்கொள்கின்றோம்.

ஒற்றுமையே பலம் ஒற்றுமையாக இலக்கு நோக்கி பயனிப்போம் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக இராது, நேரடிப் பங்காளிகளாக மாற வேண்டும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# மார்ச் 08, அனைத்துலகப் பெண்கள் நாள் முல்லைத்தீவு, தமிழீழம்






























# திருகோணமலை மூதூர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளான நபர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதி!

09.03.2025

மூதூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தாக்குதலுக்குள் ளான குமாரபுரத்தைச் சேர்ந்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

மூதூர் பொலிஸாரினால் குமாரபுரம் பகுதியில் வைத்து 6 பிள் ளைகளின் தந்தையான 44 வயதுடையவரே கைது செய்யப் பட்டு பின்னர் பொலிசாரினால் தாக்கப்பட்டதாக தெரிய வரு கின்றது.

குறித்த நபர் மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது சனிக்கிழமை (08) பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் தேடப் பட்டு வந்த குறித்த நபரே கடந்த வெள்ளிக்கிழமை (07) மூதூர் பொலிசாரினால் குமாரபுரம் பகுதியில் வைத்து கைது செய்யப் பட்டிருந்தார்.

இதன்பின்னர் சட்டத்திற்கு முரணான வகையிலும், அடிப்படை உரிமையை மீறும் வகையிலும் தனது கணவர் தாக்கப்பட்டுள் ளதாகவும், தாக்கப்பட்ட தனது கணவனுக்கு நீதி கோரி அவரது மனைவியினால் வெள்ளிக்கிழமை (07) திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன் பின்னர் குறித்த அதிகாரிகள் நேரில் சென்று பார்வை யிட்டதுடன் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தின் பின்னர் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக தெகிவத்தை பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட இளை ஞர்கள் தமது கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண் டிருந்ததாகவும் இதன்போது தமது கிராமத்தைச் சேர்ந்தவர் களும் தற்பாதுகாப்பிற்காக திருப்பி தாக்கியதோடு தப்பியும் ஓடினார்கள் என தெரியவந்துள்ளது.

இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த மூதூர் பொலிசார் தெகிவத்தைப் பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்ததுடன் இரு தரப்பிலும் சிலரை தேடியும் வந்தார்கள்.

பின்னர் இரு தரப்பினரும் சமாதானமான முறையில் இணக்கப் பாட்டுக்கு வந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் கைது செய்யப் பட்ட அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந் தார்கள்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை (07) பாலர்பாடசாலையில் பிள்ளையை விட்டு திரும்பி வரும் வழியில் மூதூர் பொலிசார் எனது கணவரை முச்சக்கர வண்டியில் அழைத்துச் சென்று எனது கணவரின் தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் மிகவும் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர்.

அத்துடன் 30 பேருக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் எமது ஊருக்குள் வந்து தாக்குதல் மேற்கொண்டபோதும் வெறும் 4



பேரை மாத்திரம் கைது செய்து பிணையில் விடுவித்தும் ஏனை யவர்களை கைது செய்யாமலும் குமாரபுரம் மக்கள் மீது தமது அதிகாரத்தை பிரயோகித்து ஒரு பக்கச்சார்பாக பொலிஸார் நடந்து கொள்வதாகவும் திருகோணமலை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாரால் தாக்கப்பட்ட வரின் மனைவி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# புல்மோட்டை கனிய மணல் தொழிற்சாலை ஊழியர்கள் சம்பளம் வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்!

09.03.2025

திருகோணமலை மாவட்ட புல்மோட்டை கனிய மணல் தொழிற்சாலையில் புதிதாக நியமிக்கப்பட்ட 83 பேருக்கு கடந்த 9 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாததால் வெள்ளிக்கிழமை (7) மற்றும் சனிக்கிழமை (08) ஆகிய தினங்களில் அமைதி யான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த அரசாங்கத்தின் போது நியமனம் வழங்கப்பட்டிருந்த நிலையில் குறித்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்களுடைய குடும்பங்கள் சாப்பாட்டுக்கு கூட கஷ்டப் பட்டு வருவதாகவும் பிள்ளைகளை கற்பிப்பதற்கு கூட வசதி யின்றி இருப்பதாகவும் தமது கவலைகளை வெளிப்படுத் துகின்றனர்.

தேர்தலின் போது புதிய அரசாங்கத்திற்கு தங்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படும் என்ற நோக்கில் அயராது பாடுபட்டு வாக்குகளை அள்ளி வழங்கியிருந்த போதிலும் தற் போது தாங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதாகவும் கவலையை வெளிப்படுத்துகின்றனர்.

எமது குடும்பங்கள் மற்றும் சிறார்களின் எதிர்கால நலன் கருதி எங்களுடைய சம்பளத்தை பெற்றுத்தருமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்வதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கனிய மணல் கூட்டுத்தாபனத்திற்கு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கடந்த மாதமளவில்



விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன் இது குறித்து எதிர்காலத்தில் முறையான சம்பளம் வழங்குவதாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி பெற்றோர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

11.03.2025

மூதூர் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் வித்தி யாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய் யக்கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் இன்று செவ்வாய்க்கிழமை (11) காலை பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது "பாடசாலை வீழ்ச்சிக்கு அதிகாரிகளே பொறுப்பு", "கல்வியே எமது சமூகத்தின் மாற்றம்", "எமது பிள்ளை அரசின் பிள்ளை இல்லையா?", "என் கல்வி என் உரிமை", "கல்வி அதி காரிகளின் அசமந்தப்போக்கு தடைசெய்யப்பட வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவதாஸ் ஜெயந்தன் பெற்றோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதோடு மூதூர் வலயத்தில் உள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர் பற் றாக்குறை இருப்பதாகவும் இந்த பாடசாலையின் குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஒரு குழுவொன்றை மூதூர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு தெரிவித் ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களினால் மகஜர் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த மகஜரில் மூதூர் பாட்டாளிபுரம் பாமகள் வித்தியாலயம் க.பொ.த. சாதாரணதரம் வரை 352 மாணவர்கள் கற்கும் பாடசாலை எனவும் இங்குக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இவ்வாறான நிலையில் க.பொ.த சாதாரண தரத்தில் மாணவர்கள் எவ்வாறு சித்தியடைய முடியும் எனவும் தேவையான ஆசிரியர் நியமித்து மாணவர்களுடைய கல்விக்கும் எதிர்காலத்திற்கும் உதவு மாறும் கோரப்பட்டுள்ளது.





www.sangathamil.ca

# தெற்கின் பிள்ளைகளைப் போல வடகிழக்கின் பிள்ளைகளும் கல்வி பெறுவதை உறுதிப்படுத்துங்கள்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

11.03.2025

கல்விக்கான முதலீடு செலவல்ல, அது எதிர்காலத்திற்கான முதலீடு கல்விக்கான ஒதுக்கீடுகளை சமத்துவ அடிப்படையில் மேற்கொண்டு, தெற்கின் பிள்ளைகளைப் போல வடகிழக்கின் பிள்ளைகளும் தரமான, சமத்துவமான, சிறப்பான கல்வியை பெறுவதை இவ்வாண்டிலிந்தே உறுதிப்படுத்துமாறும் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் திங்கட்கிழமை (10) நடைபெறற2 025ஆம் ஆண்டிற்கான வரவுசெவவுத்திட்ட கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின்மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

பிரதமர்தான் கல்வி அமைச்சுக்கும் பொறுப்பாக இருக்கின்றார் . அவர் சிறப்பாக செயலாற்றுவார் என்ற நம்பிக்கை நம் எல்லோருக்கும் இருக்கின்றது.

அந்தவகையிலே கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் சிறந்து விளங்குதல் என்ற நோக்கிலே அரசின் இவ்வாண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடுகள் அமையப் பெற்றிருக்கிறது. தேசிய அபிவிருத்திக்கான அடித்தளமே கல்வி என்ற வகையில் குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகள் இம்முறை இப் பாதீட்டிலே உள்ளடக்கப்பட்டமையை இந்த நேரத்தில் வர வேற்றுக்கொண்டு கல்விக்கான ஒதுக்கீடு தீவளாவிய வகையில் சமத்துவ அடிப்படையில் பகிரப்படுவதை தயவு செய்து உறுதிப் படுத்துங்கள் என்றே வன்னி மாவட்டத்தைச் சார்பாக்கும் பாராளுமன்ற உறுப்பினராக கேட்டுக்கொள்கிறேன்.

பாடசாலை உட்கட்டுமான மேம்பாட்டுக்காக 10000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். போதுமானதற்ற கட் டடங்கள், கட்டிமுடிக்கப்படாத வகுப்பறைக் கட்டடங்கள், நூல கங்கள், ஆய்வுகூடங்கள் இன்றி வன்னிப்பிராந்தியப்பாட சாலைகள் இன்னமும் இருப்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். வன்னியில் வாழும் எங்கள் பிள்ளைகள், போதுமான ஆசிரியர்கள் இன்றி, இணைய வசதி இன்றி, முறையான வழிகாட்டல்கள் இன்றி பாடசாலை மட்டத்திலே மிகவும் இடர்படுகின்றார்கள்.

பாடசாலைகளில் நிலவும் இடைவிலகல்கள் இன்றளவும் வன்னிப்பிராந்தியத்தில் அபாயநிலையிலேயே காணப்படு வதை இப்பேரவையிலே முன்வைக்கிறேன்.

வன்னிமாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களில் முதன்மையானவை ஊழியர் பற்றாக்குறை. வன்னி மாவட்டத்தில் உள்ள 6 கல்வி வலயங்களில் குறிப்பாக முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆங் கிலம், அழகியல் பாடங்கள், விசேட கல்வி, உயர்தர பௌதிக வியல், இணைந்த கணிதம், வணிகக்கல்விபாடங்களுக்கு ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகிறது. 1AB பாடசாலை தொடக்கம் வகை 2 பாடசாலை வரை உரிய பாட ஆசிரியர்கள் இன்மையால் நீங்கள் முன்மொழியும் தரமான கல்வியை எங்கள் மாணவர்கள் பெற இயலாதுள்ளனர். தரமான கல்வி யைக்கொள்கையை எங்கள் வன்னியிலும் உறுதிப்படுத் துவீர்களா?

மிகவும் கடைசி நிலையில் STEM கல்வியில் உள்ள எங்கள் மாவட்டத்தின் முல்லைத்தீவின் ஆசிரிய ஆளணித் தேவைக் குக்கு உங்கள் வரவுசெலவுத்திட்டம் முன்னிரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல பாடசாலைகள் போதுமான அளவில் கல்வி சார், கல்விசாரா ஊழியர்கள் இல்லை. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மாத்திரம் 392 ஆளணி வெற்றிடங்கள். இவர்களில் 322 ஆசிரியர்கள். அதிபர் சேவைக்குரியோர் 23, காவலாளிகள் 20 பேர், பாடசாலைப்பணியாளர்கள் 12. விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழினுட்பம் உட்பட பத்து துறைகளுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் இல்லை. 14 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை. வவுனியா தெற்கு வலயத்தில் 29 காவலாளிகள், 10 பாடசாலை பணியாளர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய கல்வி வலயங்களிலும் இத்தேவைப்பாடுகள் உண்டு. பட்டதாரிகளை உள்ளீர்ப்பு செய்யும் வகையில் பாட சாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான நிரந்தரத்தீர்வு என்ன?

தரமான கல்வி, சமத்துவமான கல்விக்கான வாய்ப்புகளை எங்கள் பிள்ளைகள் பெறுவதையும் உறுதிப்படுத்துங்கள். இது வரை நாங்கள் பெறவில்லை என்பவற்றுக்கான சான்றுகளே இவை!

தகவல் தொழினுட்ப நிலைமாற்றத்திலும் ஏனைய 7 மாகா ணங்களை விடவும் வடக்கும் கிழக்கும் பின்தங்கியே உள்ளது.

இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் போதுமானதற்ற தகவல் தொழினுட்ப மற்றும் தொலைக்கல்வி நிலையங்கள் இல்லாத மாகாணங்கள் வடக்கும் கிழக்கும் தான். கிழக்கிலே 4 கல்வி வலயங்களிலும் வடக்கிலே 3 கல்வி வலயங்களிலும் தகவல் தொழினுட்ப வள நிலையங்கள் இல்லை. இந்தப் பாகுபாடு ஏன்? பாராளுமன்ற உறுப்பினராக நான் சார்பாகும்



வன்னிமாவட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கும் மன்னார் கல்வி வலயத்திற்கும் இதுவரை அவ் வளநிலை யங்கள் ஏன் இன்னமும் வழங்கப்படவில்லை. இங்குள்ள ஆசிரியர்கள் போதுமான பயிற்சியை பெறும் வசதிகள் அற்று காணப்படுகின்றனர்.

இங்குள்ள பெரும்பகுதி கணினிகள் பழுதடைந்து காணப்படு கின்றன. இலத்திரனியல் கருவிகளை பதிவழிப்பதில் உள்ள இறுக்கமான நடைமுறையால் பல பாடசாலைகளில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல கணினிகள் இலத்திரனியல் குப்பைகளாக அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன.

2024 இன் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்விலே 57% மேசைக்கணினிகள் பழுதடைந்து காணப்படுவதை இனங்காண முடிந்தது. வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 75% மேசைக்கணினிகள் பழுதடைந் துள்ளன. திருத்தப்படாதுள்ள கணினிகள் கிடப்பில் போடப்படும் போது சிறுபிழைகள் பெரும்பிழைகளாகின்றன.

காவலாளிகள் இன்றிய சூழலில் அறைகளில் அடைத்து வைக் கப்பட்டுள்ள பழுதான கணினிகளின் பாகங்கள் களவு போகின் றன. இலத்திரனியல் கருவிகளின் திருத்தம் மற்றும் பதிவழித் தலில் உள்ள இறுக்கமான நடைமுறைகளால் நாடுமுழுதும் உள்ள பாடசாலைகள் இடர்களை எதிர்நோக்குகின்றனர். ஆய் வாளர் கருணாகரன் உள்ளிட்ட பலரின் ஆய்வுகளும் இதற்குச் சான்று.

இலத்திரனியல் கணினிகளை முகாமை செய்வதில் பொருத் தமான சாத்தியப்பாடான நடைமுறைகளை கொள்கை அளவில் ஏற்படுத்துங்கள் எனக்கேட்டுக்கொள்கிறேன்.

# உறுதியளித்தபடி பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச்செய்: கையெழுத்திடும் போராட்டத்தில் கோரிக்கை

## மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்

13.03.2025

ஆட்சிபொறுப்பை ஏற்பதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியினர் இந்த சட்டம் நீக்கப்படவேண்டும் என மக்களிற்கு தெரிவித் திருந்தார்கள் ஆனால் இன்று ஆட்சி பொறுப்பை ஏற்று இத் தனை நாள் சென்ற பிறகும் சட்டம் அப்படியே இருக்கின்றது. என மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்.



உறுதியளித்தபடி பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச்செய் வற்வரிச்சுமையை குறைத்திடு என கோரும் பொதுமனுவில் கையெழுத்திடும் போராட்டத்தினை மக்கள் பேரவைக்கான இயக்கம் யாழ் பஸ்நிலையம் அருகில் இன்று ஆரம்பித்த வேளை அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையில் மிக மோசமான மனித உரிமைகளை மீறக் கூடிய ஒரு சட்டமாக பயங்கரவாத தடைச்சட்டம் காணப்படு கின்றது.

இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தினால் மிகநீண்டகாலமாக தமிழ் மக்கள் மிக மோசமான பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் ஏனைய சட்டங்களை விட மிகமோச மான சட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

ஒருவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் கிட்டத் தட்ட 90 நாட்கள் வரை தடுத்துவைக்க முடியும்.

அதன் பின்னர் பல ஆண்டுகள் தடுத்துவைத்திருக்கின்றார்கள் , 15 ஆண்டுகள் தடுத்துவைத்திருக்கின்றார்கள், 15 ஆண்டு களின் பின்னர் குற்றமற்றவர்கள் என விடுதலையாகி யுள்ளார்கள்.

எனவே இப்படி ஒரு மோசமான சட்டம் நாட்டில் இருக்ககூடாது என்பதற்காக நாங்கள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக் கின்றோம்.

இந்த போராட்டங்களின் போது கடந்தகாலங்களில் தேசிய மக்கள் சக்தியினர் இந்த சட்டத்தை நீக்கவேண்டும் என எங் களுடன் சேர்ந்து குரல்கொடுத்திருந்தார்கள்.

ஆட்சிபொறுப்பை ஏற்பதற்கு முன்னர் இந்த சட்டம் நீக்கப் படவேண்டும் என்பதை அவர்கள் மக்களிற்கு தெரிவித்திருந் தார்கள் ஆனால் இன்று ஆட்சி பொறுப்பை ஏற்று இத்தனை நாள் சென்ற பிறகும் சட்டம் அப்படியே இருக்கின்றது.

அதனை நீக்குவதற்கான எந்தவொரு முயற்சியையும் அவர்கள் எடுக்கவில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு அவர்கள் மேல் உள்ளது.

எனவே நாங்கள் மக்கள் மத்தியில் சென்று இந்த பொதுப் பதாகையில் கையெழுத்திடும் வேலை திட்டத்தை ஆரம்பித் திருக்கின்றோம்.

இது அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு செய்தியாகவும் மக்களின் ஆணையை அரசாங்கம் மீறுகின்றது என்பதை நினைவூட்டுவதற்காகவும் நாங்கள் இதனை செய்துகொண் டிருக்கின்றோம்.







# யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும்!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

11.03.2025

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட் தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் செவ்வாய்க்கிழமை (11) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதம மந்திரியும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரம சிங்கவோடு ஆல்ஜசீரா ஊடகவியலாளர் நடாத்திய நேர் காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு விழுந்துள்ளது.

படலந்த வதை முகாமை மையமாக வைத்து அதற்கு காரண மான பிரதான சூத்திரதாரியான ரணிலின் "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பறிக்க வேண்டும்" எனும் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கையில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா அவர்களும் இது தொடர்பில் விசா ரணை நடத்தப்படும் எனக் கூறுவதில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஒரு குற்றவாளி இன்னும் ஒரு குற்றவாளியை விசாரிக்க முடியுமா? அவ்வாறு விசாரித்தாலும் அது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

தெற்கில் ரணிலிற்கு எதிரான மனநிலை பட்டலந்தை வதை முகாமை பற்றியதாகவே மட்டும் இருப்பதும் உருவாகி இன வாத தன்மையை வெளிப்படுத்துகின்றது.

யுத்த காலப்பகுதி தொடர்பிலும் யுத்த இறுதி கட்டத்தில் முள்ளி வாய்க்காலில் நிகழ்ந்தவை தொடர்பு கொள்ளும் அப்பேட்டியில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றிற்கும் பதில் அளிக்க ரணில் தடுமாறியதே நாம் அறி வோம். ஆனால் அதைப் பற்றி எல்லாம் கரிசனையோ அக் கறையோ இல்லாத மனநிலையையும் பலந்த குற்றங்களை முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனக்கொருவது பக்க சார்பானதும் இனி வாத மனநிலையை கொண்டதுமாகும்.

அல்ஜசீரா ஊடகவியலாளர் தெற்கிலும் வடக்கிலும் நிகழ்த்தப் பட்ட வதைகள், கொடூர கொடூரங்கள் யுத்தக் காலப்பகுதி தொடர் பிலும் குற்றங்கள் கேள்விக்கணைகள் தொடுகின்ற போது தெற்கு சார்ந்து மட்டும் சிந்திப்பதும் தமிழர் தேசத்தில் நிகழ்த் தப்பட்ட யுத்த குற்றங்கள் தொடரில் கருத்துக்கள் வெளியிடாது இருப்பது இரண்டு நாடுகள் என்பதையே காட்டி நிற்கின்றது.

இரண்டு நாடுகள் என்றாலும் அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுப்பது ஒவ்வொருவரினதும் தார்மீக பொறுப்பாகும். தற் போதும் அதனை காண முடியாமல் இருப்பது இனவாத அவல நிலையையே மீண்டும் உணர்த்துகின்றது.

பட்டர் அந்த முகாமோடு தொடர்புபட்டவர்கள் அதற்கு துணை நின்ற பாதுகாப்பு தரப்பினரும் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக் கப்பட வேண்டியவர்களே அதில் மாற்று கருத்து இல்லை காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும். உண்மை முழு நாட்டுக்கும் தெரிய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 1988-1989 காலப் பகுதியில் மாத்தலை பிரதேசத்தில் இராணுவத்திற்கு தலைமை தாங்கிய போது அங்கு கொண்டு புதைக்கப்பட்டவர்களின் சமூக புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

தெற்கில் மேலும் பல சமூக புதைகுழிகள் தொடர்பான அறிக் கைகள் 2023 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா நாயக்க சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான அறிக்கை பகிரங் கமாக வெளியிடப்பட்ட போதும் அது தொடர்பில் தற்போதைய தேசிய மக்கள் சக்தியான மக்கள் முன்னணி வாய் திறக்காமல் அமைதி காத்து தற்போது ரணில் மீது விசாரணை எனக் கூறுவது அரசியல் நாடகமாக அமையக்கூடாது.

ஊடகவியலாளர் திஸ்சநாயகத்தின் உதவியோடு 1988-1989 காலப்பகுதியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளை தூக்கிக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நோக்கி ஓடியதை மறக்க முடியாது.

அதே மகிந்த திஸ்ச நாயகத்திற்கு 20 வருட தண்டனையை பெற்றுக் கொடுத்ததும் சர்வதேச தலையீட்டின் காரணமாக அவர் விடுதலை பெற்றதும் மறக்க முடியாது.

படலந்த கொலைகளை காரணம் காட்டி ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இது தொடர்பில் சந்திரிக்கா பண்டார நாயக்கரும் மகிந்த ராஜபக்சவும் அமைதி காத்தமை கொலை குற்றவாளிகளை பாதுகாத்ததாகவே கருதப்பட வேண்டும். அவர்களும் ரணிலுக்கு கொலை குற்றவாளிகளே, தண்டிக்கப்பட வேண்டி யவர்களே.

சந்திரிக்கா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய யுத்தம் அவர்களால் புரியப் பட்ட கொலைகள் பலந்த விடயத்தை விசாரணைக்கு உட்படுத் தாததை மறைத்து விட்டது.

தெற்கு இனவாத யுத்தத்தில் மூழ்கி இருந்தது. இனவாதம் தெற்கின் கண்களை மறைத்து நீதியை புதைத்து விட்டது என்றும் கூறலாம்.

இவ்வாறு மறைத்தவர்களும் பட்டலந்தை கொலையாளிகளே. அல் ஜாசீரா ஊடகவியலாளர் கேள்விகளை கேட்கவில் லையேல: தற்போதும் நீதிக்கான குரல் எழுந்திருக்காது.

தமிழர்களை பொறுத்தவரையில் ரணிலுக்கு எதிரான விசா ரணை எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடு தலை முன்னணி நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

தண்டிக்கப்பட வேண்டியவர்கள் சந்திரிகாவையும் மகிந்தவை யும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு பலவந்தமாக தள்ளி தமது முன்னணி உறுப்பினர்களையும் சாதாரண கிராமிய இளைஞர்களையும் இனவாதத்திற்குள் தள்ளி தமிழர்களை இனப் படுகொலை புரிந்த இவர்களும் தண்டனைக்குரிய வர்களே.



தற்போதைய ஆட்சியாளர் ரணிலுக்கு எதிராக விசாரணை நடத்துவதாக கூறுவது போல் தங்கள் மனசாட்சியை தொட்டு தங்களுக்கு எதிராக விசாரணை நடத்தினால் மட்டுமே இவர் களின் கிளீன் சிறீலங்காவிற்கு நீதி கிட்டும் இல்லையேல் அதுவும் போலியே.

தற்போதைய ஆட்சியாளர் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தம் தொடர்பாக உள்ளக விசாரணை என்பதும் சர்வதேசத்தின் எந்த தலையீட்டையும் ஏற்க மாட்டோம் என்று கூறுவதற்கும் காரணம் இவர்கள் மீதும் கொலை குற்றச்சாட்டுகள் விழும் என்பதன் காரணமாகவே.

கடந்த ஆட்சியாளர்களை போல பாதுகாப்பு படையினரை பாது காக்கும் நோக்கமேயாகும். சர்வதேச விசாரணைக்கு மறுப்பு தெரிவிப்பவர்களும் கொலை குற்றவாளிகளே.

இலங்கை வரலாற்றில் எல்லா காலப்பகுதிகளிலும் நிகழ்த் தப்பட்ட இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இதய சுத்தியோடு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதற்கான தகுதி இலங்கைக்கு இல்லை என்பதே தமிழர்களின் கடந்த கால நிகழ்கால அனுபவமாகும். அதனாலையே சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்தில் யுத்த குற்றம் விசாரிக்கப்பட வேண்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அரசியல் நீதி கிடைக்க வேண்டும் என்று தமிழ் தொடர்ந்து கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்று வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

இதுவரை காலமும் பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக அமைதி காத்தவர்கள் எல்லாம் இன்று வாய் திறக்கிறார்கள் எனில் அதற்கு அல் ஜஸீரா சர்வதேச ஊடகமே காரணமாகும்.

அதைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இன படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வ தேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்ற வாளிகள், கொலையாளிகள், இனவாதிகள் என்பதை உண்மை என்றுள்ளது.

# தண்டனைகளில் படையினர் பாதுகாக்கப்பட்டதன் துணிவே குற்றங்கள் அதிகரிக்க வழிவகுத்தது!

## யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

12.03.2025

நாட்டில் முன்னாள் படையினரால் பாரிய குற்றச் செயல்கள் அதி கரிக்கப்பட்டுள்ளமைக்கு, நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச இயந்திரமும் இராணுவமும் மேற்கொண்ட மிலேச்சத்தன மான மனித உரிமை மீறல்களுக்கு எவ்வித பொறுப்புக்கூறலும் இடம்பெறாது சட்டத்தில் இருந்து படையினரை அரசு பாது காத்துவரும் துணிவுதான் இந் நிலைமைக்குக் காரணம் என்பதை ஒட்டுமொத்த நாடும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்று நாட்டின் நீதிமன்றத்தின் உள்ளே படுகொலை நடக் கின்றது. வைத்தியசாலையில் பணியாற்றிய பெண் வைத்தியர் அரச வளாகத்தினுள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக நேர் கின்றது. சாதாரணமான துப்பாக்கிப் பிரயோகங்கள் எங்கும் நடக்கின்றன. இவற்றிற்குப் பின்னால் முன்னாள் இராணுவத் தினர் உள்ளனர். நாட்டின் பொலிஸ் மா அதிபராக பதவி வகித் தவர் நீமன்ற கட்டளைக்கு மதிப்பளிக்காமல் மறைந்துள்ளார். அவருக்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை நாட்டின் பாதுகாப்புத் தரப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸ் தரப்பின் தொழில்சார் ஒழுக் கத்தை பகிரங்கப்படுத்தி நிற்கின்றன. படைகளின் தொழில் முகப்படுத்தலில் ஒழுக்கம் இன்மைகளை வெளிக்காட் டுகின்றன.

சாதாரணமாக இவற்றை படைகளில் இருந்து விலயோர் என்று கைவிரித்து விட முடியாது. படைகளில் பணியாற்றிய மனிதர்கள் உயர் ஒழுக்கம் மற்றும் கட்டளைகளை நிறைவேற்றும் தகுதியை அவர்களது சேவைக்கால பயிற்சி மற்றும் சத்தியப் பிரமாணங்களின் வாயிலாகப் பெற்றிருக்க வேண்டும். இது இலங்கையில் நடைபெறவில்லை.

காரணம் தமிழ் மக்கள் மீது படைகளில் இருந்தவர்கள் மேற் கொண்ட அத்தனை பாலியல் வல்லுறவுகள், மிலேச்சத்தன மான படுகொலைகள், சிறார் படுகொலைகள் மிலேச்சத்தன மான மனித உரிமை மீறல்களை படைத்தரப்புச் செய்த போதும், அவற்றுக்கு அரச பாதுகாப்பு அளிக்கப்பட்டதன் விளைவே இலங்கையில் இராணுவ ஒழுக்கம் மற்றும் பொலிசாரின் ஒழுக்கம் புகட்டப்படாத குற்றக் கலாச்சாரத்திற்கான அடிப்படை என்பதை அரச இயந்திரம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் நாட்டின் ஜனாதிபதிகள், பொதுமன்னிப்பு அதிகாரத்தினைப் பயன்படுத்திக் கூட தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தனமான கொலைகளை புரிந்த படைத்தரப்பினரை குற்றத்திற்கான தண்டனையில் இருந்து பாதுகாத்துள்ளனர்.

இவ்வாறான மனித நாகரிகமற்ற சட்டத்திற்கும் நீதிக்கும் ஏற்புடையதல்லாத கலாச்சாரம் தமிழர்களுக்கு எதிரான சிங்கள் பேரினவாதத்தின் வெற்றியாக அரசும் மாறி மாறி ஆட்சியேறிய அரசாங்கங்களும் கட்டிவளர்த்த கலாச்சாரம் தான் இன்று நாடே குற்றங்களுக்குள் மூழ்கக் காரணமாகவுள்ளது.

இந் நிலையில் துரிதமாக மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான விடயங்களை படையினரை பாதுகாக்கின்றோம் என அரசாங்கம் பாது காக்கக்கூடாது. குற்றங்களுக்கு பொறுப்புச் சொல்லாத கலாச் சாரம் ஒருபோதும் குற்றங்கள் மீள நிகழாமையினை உறுதிப் படுத்தாது. இவ்வாறு முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# மருத்துவர் மீதான பாலியல் வன்கொடுமை: சிறீலங்கா இராணுவ சிப்பாய் கைது

12.03.2025

அனுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவர் விடுதியில் க்டந்த திங்கட்கிழமை (10) இரவு பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்று புதன்கிழமை காலை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கல்னேவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அவர் முன்னர் துறவற அங்கிகளை அணிந்து ஒரு சாதாரண மனிதராக வாழ்ந்ததாகவும், இராணுவ சேவையிலிருந்து தப்பி ஓடியதாகவும் தெரியவந்துள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து, சந்தேக நபர், பெண் மருத்துவரின் இரண்டு மொபைல் போன்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

மீதமுள்ள தொலைபேசியில் இருந்து வந்த சிக்னல்களின் அடிப் படையில் காவல்துறையினர் தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டனர். இருப்பினும், அவுகனா தொடருந்து நிலையம் அருகே பலவீனமான சிக்னல்கள் காரணமாக, சுற்றியுள்ள பகுதியில் காவல்துறையினர் தேடுதலை தீவிரப்படுத்தினர்.

கல்னேவ காவல்துறையின் சிறப்புக் குழு, கல்னேவவின் எலபதுகம பகுதியில் மறைந்திருந்த சந்தேக நபரைக் கண்டு பிடித்து கைது செய்தது.

சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்?






இதேநேரம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணி யாற்றிய பெண் மருத்துவரைக் கத்திமுனையில் பாலியல் அத் துமீறல் செய்த குற்றவாளியை கைதுசெய்யுமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் மருத்துவர்கள் இன்று புதன்கிழமை (12) பணிப்புறக்கப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

நாட்டின் சகல மருத்துமனைகளின் மருத்துவர்கள் இன்றைய தினம் காலை 8 மணி முதல் மதியம் 12 மணிவரை அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவித் துள்ளனர்.

அநுராதபுரம் வைத்தியசாலையில் பணியாற்றிய பெண் வைத் தியரை பாலியல் வன்கொடுமை செய்ததாக சந்தேகிக்கப்படும் தப்பியோடிய இராணுவச் சிப்பாய் எனக் கருதப்படுபவரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டுமென வலியுறுத்தி அடையாள பணிப்புறக்கணிப்பு நடைபெறுகின்றது.

# பெண் மருத்துவருக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்: திருகோணமலையில் போராட்டம்!

12.03.2025

அநுராதபுரத்தில் பாலியல் துன்புறுத்தல் உட்படுத்தப்பட்ட பெண் மருத்துவருக்கு நீதி கோரியும், அவருக்கெதிராக இடம் பெற்ற குற்றச் செயலை கண்டித்தும் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்கள் இன்று புதன்கிழமை (12) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.







இதன்போது ஆர்ப்பாட்டம் நடத்திய வைத்தியர்கள் கறுப்புப் பட்டி அணிந்தும், பதாதைகளை ஏந்தியும், பாலியல் குற்றத்துக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.








## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# வனவளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்தார்கள்: மக்களின் காணிகளை அரசதிணைக்களங்கள் திருடுகின்றனர்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

13.03.2025

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பகுதிகளில், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மக்களின் விவசாய மற்றும், குடியிருப்புக் காணிகளை அத்துமீறி திருடியுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

அதேவேளை இவ்வாறு மக்களின் காணித்திருட்டில் ஈடுபடும் திணைக்களங்ளில் ஒன்றான வனவளத் திணைக்களம் வன்னியில் இடம்பெறும் சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, வனவளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார். கடந்த 2009ஆம் இற்கு முன்பு மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனகரக வாகனங்களைக் கண்டதில்லை எனவும், மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையைக் கேட்டதில்லை எனவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வனவளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் புதன்கிழமை (12) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தலைமைதாங்கும் உறுப்பினரே, காணிவிடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர், பிரதிஅமைச்சர் அவர்களே, மக்களினதும், எனது கருத்துக்களையும் குறிப்பிடுகின்றேன்.

முன்னைய ஆட்சியில் திணைக்களங்களால் காணித் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களுடைய ஆட்சியில் இவ்வாறான காணித் திருட்டுக்கள் நீக்கப்படவேண்டும்.

வன்னிப்பெருநிலப்பரப்பு எப்போதும் காடுகளை அதிகமாகக் கொண்ட நிலப்புரப்பாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்களின் வாழ்வு தொன்று தொட்டு இயற்கையோடு இணைந்த தொன்றாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் என்றும் இயற்கையோடு முரண்பட்டு கொண்டதில்லை. காடுகளை அழித்ததில்லை. 2009ம் ஆண்டுவரை வெட்டப்பட்ட மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனகரக வாகனங்கள் எம் வீதியால் சென்றதை நாம் கண்டதில்லை. மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையை நாம் கேட்டதில்லை. 2009ம் ஆண்டு வரை வனவளத்திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும், இங்கு எமது இடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகளின் வனவளப்பிரிவு இருந்தது. இயற்கையை நேசித்த வன்னியர்களின் வாழ்க்கைமுறை இருந்தது. இதனால் வனப்பகுதிகள் அழிக்கப்படவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டு மரங்களாகவும், விறகுத்தேவைகளுக்காகவும் பெருநகரங்களை நோக்கி ஏற்றிச்செல்லப்படவில்லை. காடுகள் மிகவும் கவனமாக காவல் செய்யப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் அதன்பின்னரும்தான் வனவளத் திணைக்களத்தினதும், வனஜீவராசிகள் திணைக்களத்தினதும், நிர்வாகம் இங்கு நிலைநிறுத்தப்பட்டது.

சபாநாயகர் அவர்களே இதன் பின்னர்தான் வன்னிப்பெருநிலப் பரப்பின் காடுகள் குறையாடப்பட்டன.

மன்னாரில் முசலி உட்பட குறிப்பிட்ட சில இடங்களிலும், வவுனியாவில் பம்பைமடு உள்ளிட்ட சிலகுறிப்பிட்ட இடங்களிலும் அடர்காடுகள், ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள் ஈவு இரக்கமற்று கனகரக இயந்திரங்களால் மூர்க்கத்தனமாக சிதைக்கப்பட்டன. இவைகள் வனவளத்திணைக்களத்தின் அபகரிப்புக்கள் அல்லது, திருட்டுக்களாகவே கருதப்படவேண்டும்.

Google Earth Time Line ஊடாகப் பாருங்கள் 2009இன் முன்பு வன்னிப்பெருநிலப் பரப்பில் வனவளம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பதையும், 2009இன் பின்பு வனப்பகுதிகள் எவ்வாறு சூறையாடப்பட்டது என்பதையும் அறியமுடியும்.

இன்றுவரை வனவளத்திணைக்களத்தின் செயல்பாடுகள் மிகவும் ஊழல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. இதே போலத்தான் வனஜீவராசிகள் திணைக்களமும் இங்கு செயற்பட்டுவருகின்றது. இவ்வாறு வனப்பகுதிகள், இயற்கை வாழ்விடங்கள் என்பவை சூறையாடப்படுவதற்கு காரணமாக இருக்கும் இத்திருட்டுத் திணைக்களங்கள் 2010இன் பின் எங்கள் வீட்டுமுற்றங்களையும் வயல் நிலங்களையும், தோட்டந்துரவுகளையும், ஏன்... வீதிகளையும் இடுகாடுகள், சுடுகாடுகளையும் கூட திருடத்தொடங்கி விட்டார்கள்.

2009ஆம் ஆண்டின் பின்னர் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும், விதிகளையும் புறக்கணித்து மாவட்டச்செயலாளருக்கோ, பிரதேசச் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது, நில அளவைத் திணைக்களத்தின் ஊடாக



வரைபடங்களையும் பெற்றுக்கொள்ளாமல், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 167,487 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தால் வனப்பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வறிக்கையின்படி 1983 ஆம் ஆண்டுதொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை உள்நாட்டுப்போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்புக்காணிகள், முத்தையன் கட்டுக்குள நீர்ப்பாசனத்திட்டம், தண்ணிமுறிப்புக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட வயல்நிலங்கள், இன்னும் கமநல அபிவிருத்தித் திணைக் களத்தின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும், அவற்றின்கீழ் இருக்கும் வயல்நிலங்கள் என்பன வனவளத்திணைக்களத்தால் விதிமுறைகளை மீறிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் ஒதுக்கப்பட்ட வனவளப்பிரதேசங்களாக வர்த்தமானப்படுத்தப்பட்டு இருக்கின்றன. என மாவட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதே போல் 2009ஆம் ஆண்டின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவில் 10,119 ஏக்கர் நிலப்பரப்பு நந்திக்கடல் இயற்கை வாழ்விடமாகவும், 10,925 ஏக்கர் நிலப்பரப்பு நாயாறு இயற்கை வாழ்விடமாகவும், சுண்டிக்குளம் தேசிய பூங்கா என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பரிவிலும், சேர்த்து 48,357 ஏக்கர் பிரதேசத்தையுமாக மொத்தம் 69,401 ஏக்கர் பிரதேசத்தை வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டு வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன என்றார்.

# இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விவசாயிகளிடம் ஒப்படையுங்கள்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

13.03.2025

வடக்கில் விவசாய நிலங்கள் பல இராணுவம் உள்ளிட்ட முப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. படையினர் அதில் விவசாயம் செய்கின்றனர். இந்தக் காணிகளை விவசாயிகளிடம் ஒப்படைத்தால் நெல்லுக்கான பஞ்சம் இல்லாமல் போகும். விவசாயிகள் வசதியானவர்கள் அல்ல. இவர்கள் பொருளாதார பிரச்சினையில் சொல்லொன்னா துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது.

மேய்ச்சல் தரை இல்லாமையினால் எமது பிரதேச கால்நடைப் பண்ணையாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பல மைல்களுக்கு கால்நடைகளை கொண்டுச் சென்று ஒரு இடத்தில் இருந்து அவற்றை பார்த்துக் கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. கடந்த அரசாங்கங்கள் மேய்ச்சல் தரை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில், இந்த அரசாங்கம் அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை வனஜீவராசிகள் மற்றும் வன திணைக்களங்கள் அரச நிறுவனங்களாகும். இந்த திணைக்களங்களும் நிலங்களை விடுவிப்பதாக கூறினாலும் அதை செய்வதில்லை. அவர்களுக்கென தனியான சட்டங்கள் இருக்கின்றனரவா என்று தெரியவில்லை. விவசாயிகளின் நிலமாக இருந்தாலும் சரி, மேய்ச்சல் தரையாக இருக்கலாம் இவை அந்த திணைக்களங்களின் கீழே உள்ளன.

அத்துடன் விவசாய நிலங்கள் பல இராணுவம் உள்ளிட்ட முப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. அவர்கள் அதில் விவசாயம் செய்கின்றனர். இந்தக் காணிகளை விவசாயிகளிடம் ஒப்படைத்தால் நெல்லுக்கான பஞ்சம் இல்லாமல் போகும் என்று கூறலாம்.



இங்குள்ள விவசாயிகள் வசதியானவர்கள் அல்ல. கால்நடைகளை விற்பனை செய்தல் மற்றும் பெண்களின் தாலிக் கொடிகளை அடகு வைப்பதில் ஈடுபடுகின்றனர். இவர்கள் பொருளாதார பிரச்சினையில் சொல்லொன்னா துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்த ஒரு சத்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# வன்னியில் ஏறக்குறைய 370,000 கால்நடைகள் மேய்ச்சல் தரை இன்மையால் அவதி!

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

13.03.2025

வன்னியில் ஏறக்குறைய 370,000கால்நடைகள் காணப் படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவையின் மையால், கால்நடைவளர்ப்பாளர்கள் அவதியுறுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மேச்சல்தரவைக்காக காணிகளை ஒதுக்கிக்கொடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் அவர் இதன்போது வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை (12) இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 100,000 கால்நடை களும், மன்னார் மாவட்டத்தில் 140,000 கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் 130,000 கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 370,000 கால்நடைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு பெருமளவான கால்நடைகள் காணப்படுகின்ற போதும் கால்நடைகளுக்குரிய மேச்சல்தரவை இல்லாத சிக்கலான நிலமை காணப்படுகின்றது.

இதனால் கால் நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேய விடவேண்டிய நிலை காணப்படுவதாக கால்நடைவளர்ப் பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேச்சல் தரவையின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக் கியுள்ளனர்.



எனவே இந்த சிக்கல் நிலமைகளைக் கருத்தில்கொண்டு கால் நடைகளுக்குரிய மேச்சல்தரவை நிலங்களை ஒதுக்கிக்கொடுக் குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# யாழ். தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டுமானத்திற்கு எதிராக போராட்டம்

19.03.2025

யாழ். தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டுமானத்திற்கு எதிரான போராட்டமானது இன்று வியாழக்கிழமை (13) நடாத்தப்பட்டுள்ளது.





குறித்த கட்டுமானமானது மக்களது காணியை அபகரித்து கட்டி யுள்ள நிலையில் காணி உரிமையாளர்களாலும், பொது மக்களாலும், அரசியல் பிரதிநிதிகளாலும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின் றமை வழமை. அந்தவகையில் இன்றைய தினமும் இந்த போராட்டமானது நடைபெற்று வருகிறது.







**எமது மக்கள் மீது அடக்குமறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதனின்றும் மக்களை விடுவித்து எமது மக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டும் வரை, நாம் ஆயுதம் ஏந்திப் போரிடுவதைக் கைவிடமாட்டோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# வட, கிழக்கில் நெல் உற்பத்தி அதிகரிப்புக்கு வனத்துறை அதிகாரிகளே பிரதான தடை!

## திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்

13.03.2025

வடக்கு மற்றும் கிழக்கில் வனத் துறை, வனவிலங்குத் துறை அதிகாரிகளும் நெல் உற்பத்தியை அதிகரிக்கத் தடையாக இருப்பதோடு இவர்கள் நாட்டின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்னும் அரசின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனரென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில், கால நடை அபிவிருத்தி, காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது.

அரசால் முன்வைக்கப் பட்டுள்ள பாதீட்டில் கமத் தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு மீண்டெழும் செலவுக்காக 83.9 பில்லியன் ரூபாவும் மூலதன செலவுக்காக 133பில்லியன் ரூபாவும் மொத்தமாக 216.9 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 62 பில்லியன் ரூபா அதிகமாகும். இது வரவேற்கத்தக்கது.

எனினும் விவசாய மற்றும் கால்நடை துறைக்கான ஒதுக் கீடானது கடந்த ஆண்டை விட 2.6 வீதத்தால் குறைக்கப் பட்டுள்ளதோடு இதன் அபிவிருத்திக்கான ஒதுக்கீடு 5.76 சத வீதத்தால் குறைக்கப் பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக் களத்தின் ஊடான அபிவிருத்திக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 22.4 ( 6037 மில்லியன் ரூபா ) சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இக்குறைப்புகள் நாட்டின் அரிசி உற்பத்தியில் தன்நிறைவு காணவேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கு ஏற்புடையதல்ல.

அண்மைக் காலத்தில் இலங்கையில் அரிசி விலை ஏற்றம், அரிசித் தட்டுப்பாடு ஆகியன முதன்மையான சிக்கல்களாகக் காணப்படுகின்றன. கேள்விக்கு ஏற்ப நிரம்பல் இல்லாதவிடத்து பொருள் விலையேறும் என்பதை அனைவரும் அறிவர். அரிசியின் நிரம்பல் குறைவாக இருப்பதே அதன் விலை ஏற்றத்திற்கு முதன்மையான காரணமாகும். ஒரு காலத்தில் அரிசியை ஏற்றுமதி செய்த நாடு இன்று இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? என்பதற்கான மூல காரணத்தை கண்டறிந்து, அதைத் தீர்க்க அரசு முனைய வேண்டும்.

அரிசி உற்பத்திக் குறைவுக்கு வெள்ளம், வரட்சி முதலிய இயற் கைப் பேரிடர்கள் ஒரு காரணமாக இருந்தாலும், திருகோண மலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர் காலத்திலே கைவிடப்பட்ட 205 சிறுகுளங்களும் 25 அணைக் கட்டுகளும் மீண்டும் நெற்செய்கைக்கு கொண்டு வரப்படாமல் இருப்பதே முதன்மையான காரணியாகும்.

இவற்றை மீண்டும் நெற் செய்கைக்கு கொண்டு வருவதன் மூலம் ஏறத்தாழ 12,000 ஏக்கர் நிலத்தை நெற் செய்கைக்குள் கொண்டு வர முடியும் இதன் மூலம் 24,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் இயலும்.

இவ்வாறு நெல் உற்பத்தியை அதிகரிக்கத் தடையாக இருப் பவர்களில் முதன்மையானவர்கள் வனத் துறை அதிகாரிகளும் வனவிலங்குத் துறை அதிகாரிகளும் ஆவர். இவர்கள் வேறு ஒரு நாட்டை கைப்பற்றுவதைப் போல விவசாயிகளது நிலங் களை கைப்பற்றி விவசாயம் செய்ய விடாமல் தடுத்து வரு கின்றனர்.

இவர்கள் நாட்டின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்னும் அரசின் கொள்கைக்கு எதிராகச் செயற்படுவோர் போல செயற்பட்டு வருகின்றனர். இவ்விடயத்தில் அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டு கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டதில் உள்ள வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 32,042 ஏக்கர் ஆகும். இதில் வனவிலங்குத் துறை 25,242 ஏக்கர் நிலத்தை தமக்கு உரியது எனவும் வனத் துறை 11,906 ஏக்கர் நிலத்தை தமக்கு உரியது எனவும் சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

மொத்தம் 32,042 ஏக்கர் பரப்பளவு நிலத்தை கொண்ட



வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் எப்படி 37,148 ஏக்கர் நிலத்தை கைபற்றினார்கள்? இப்படியான திறமை இந்த நாட்டில் உள்ள வனத்துறை மற்றும் வனவிலங்குத் துறை அதி காரிகளைத் தவிர உலகில் வேறு யாருக்கும் இருக்க முடியாது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 29,430 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. மேலும் 28,372 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்த முனைகிறது. வனவிலங்குத் துறை 7,330 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது.

தொல்பொருள் துறை 1,087 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது. புத்த பிக்குகள் பூஜா பூமி என்ற பெயரில் 3,820 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளனர். இதன் மூலம் 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் விவசாயம் செய்த 70,039 ஏக்கர் நிலம் நெல் உற்பத்தி செய்யாமல் தடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு போகத்தில் 140,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி குறைக்கப்படுறது.

அதேபோல தொல்பொருள் துறையும் மக்கள் விவசாயம் செய்த நிலங்களை தமது எல்லைக் கற்களைப் போட்டுப் பிடித்து வைத் துக்கொண்டு அதனுள் தொல்பொருள் சின்னங்களைக் கண்டு பிடிக்க முடியாமலும் அதேவேளை அதனுள் மக்களை விவசாயம் செய்ய விடாமலும் தடுத்து வருகின்றது . அரசாங்கம் இவ்விடத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# வைத்தியர் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

14.03.2025

சர்வதேச ரீதியாகவும் நாடு தழுவிய ரீதியிலும் மகளிர் தினம் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்றுவரும் நாட்களில் ஒரு பெண் வைத்தியர் பாலியல் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்ட செய்தி வெளிவந்திருப்பது இலங்கை தேசத் துக்கு அவமானத்தை தருகிறது என யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.




அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் பட்டதை கண்டித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று (14) வெளியிட்ட அறிக்கையில் இதனை குறிப் பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காலம் காலமாக இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படும் சூழல் நிலவி வருகிறது. அரசுக்கு எதிரான நியாமான புரட்சிகளின் போதும் இன விடுதலைப் போராட்டத்தின் போதும் நூற்றுக்கணக்கான பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது இனமுறுகலில் ஆதிக்கத் தனத்தை வெளிக்காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கருவியாக பயன் பட்டது. அதனால் ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாதிக்கப் பட்டார்கள். அவற்றுள் வெளிவந்த கதைகளை விட சமூக கலாசார இரும்புக் கதவுகளைத் தாண்டி வெளிவராத செய்திகள் ஏராளம்.

இன்றும் அனுராதபுரத்தில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருப்பது கவலையளிக்கிறது. இச்செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது.

இச்செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவர் அல்லது முன்னாள் இராணுவ வீரர் என அறியக்கிடைக்கின்றது. அவரது பின்புலம் இலங்கை இராணுவத்தினர் பெண்களை கையாண்ட பல பாதகமான முன்னைய சம்பவங்களையும் தற்போது ஞாபகப்படுத்தி வரு கின்றது.

போர் நடைபெற்றபோது போரின் ஓர் ஆயுதமாக பாலியல் துஷ் பிரயோகம் இடம்பெற்றதுடன் அது தொடர்பில் அலட்சியமும் செய்யப்பட்டது. அந்த அலட்சியம் பெண்களுக்கு எதிரான துஷ் பிரயோகம் குறித்து அச்சமற்ற சூழலை சம்பந்தப்பட்ட தரப் பினரிடம் விதைத்திருக்கின்றது.

இவ் விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சனல் 4 உள்ளிட்ட தரப்புக்கள் வலுவாக சுட்டிக்காட்டிய போதும் அது குறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச் சியாகவே அநுராதபுர சம்பவத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் தொழில்படையில் அதிக சதவீதத்தினர் பெண்கள். அவர்கள் தொழில் சார்ந்து உள்ளக குடிபெயர்வுக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றபோது அவர்களது பாதுகாப்பு குறித்து அதிக கரிசனை கொள்ளவேண்டும். அது போன்று போர் நடைபெற்றபோது எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக சேர்த் துக்கொள்ளப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படாத தொழில் நெறி முறையினால் இராணுவத்தை விட்டு விலகியவர்களால் நாடு முழுவதும் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெற்று வரு கின்றன. இவை குறித்து உடனடியாக கவனம் எடுக்க வேண் டும். இது பல்வேறு பாதகமான சூழ்நிலைகளை முற்கூட்டி தவிர்க்க வாய்ப்பளிக்கும்.

அநுராதபுர சம்பவம் ஆட்சியாளர்களுக்கும் பாதுகாப்புத் துறையினருக்கும் அவர்கள் முன்னுள்ள அவசரமான பணியை ஞாபகப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சம் பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச் சம்பவத்தில்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
JAFFNA UNIVERSITY TEACHERS' ASSOCIATION (JUTA)
යාපනය විශ්වවිද්‍යාල ආචාර්යවරුන්ගේ සංගමය

**அனுராதபுரத்தில் பெண்மருத்துவர் மீதான பாலியல் வன்கொடுமையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.**

சர்வதேச ரீதியாகவும் நாடு தழுவிய ரீதியிலும் மகளிர் தினம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நாள்களில் ஒரு பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட செய்தி வெளிவந்திருப்பது இலங்கை தேசத்துக்கு அவமானத்தை தருகின்றது. காலம் காலமாக இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் சூழல் நிலவி வருகின்றது. அரசுக்கு எதிரான நியாமான புரட்சிகளின் போதும் இன விடுதலைப் போராட்டத்தின் போதும் நூற்றுக்கணக்கான பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். பாலியல் வன்புணர்வு என்பது இனமுறுகலில் ஆதிக்கத்தனத்தை வெளிக்காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கருவியாக பயன்பட்டது. அதனால் ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். அவற்றுள் வெளிவந்த கதைகளைவிட சமூக கலாசார இரும்புக் கதவுகளைத் தாண்டி வெளிவராத செய்திகள் ஏராளம். இன்றும் அனுராதபுரத்தில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டிருப்பது கவலையளிக்கின்றது. இச் செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது.

இச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவர் அல்லது முன்னாள் இராணுவவீரர் என அறியக்கிடைக்கின்றது. அவரது பின்புலம் இலங்கை இராணுவத்தினர் பெண்களை கையாண்ட பல பாதகமான முன்னைய சம்பவங்களையும் தற்போது ஞாபகப்படுத்திவருகின்றது. போர் நடைபெற்ற போது போரின் ஒரு ஆயுதமாக பாலியல் வன்கொடுமை பாவிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் அலட்சியமும் செய்யப்பட்டது. அந்த அலட்சியம் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து அச்சமற்ற சூழலை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விதைத்திருக்கின்றது. இவ் விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சனல்4 உள்ளிட்ட தரப்புக்கள் வலுவாக சுட்டிக்காட்டிய போதும் அது குறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாகவே அனுராதபுரச் சம்பவத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் தொழில்படையில் அதிக சதவீதத்தினர் பெண்கள். அவர்கள் தொழில்சார்ந்து உள்ளக குடிபெயர்வுக்கு கட்டாயப்படுத்தப்படுகின்றபோது அவர்களது பாதுகாப்புக் குறித்து அதிக கரிசனை கொள்ளவேண்டும். அது போன்று போர் நடைபெற்ற போது எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படாத தொழில்நெறிமுறையினால் இராணுவத்தை விட்டு விலகியவர்களால் நாடு முழுவதும் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெற்று வருகின்றன. இவை குறித்து உடனடியாக கவனம் எடுக்க வேண்டும். இது பல்வேறு பாதகமான சூழ்நிலைகளை முற்கூட்டி தவிர்க்க வாய்ப்பளிக்கும். அனுராதபுர சம்பவம் ஆட்சியாளர்களுக்கும் பாதுகாப்புத் துறையினருக்கும் அவர்கள் முன்னுள்ள அவசரமான பணியை ஞாபகப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மருத்துவருடன் ஆத்மார்த்தமாக நமது சங்கம் துணைநிற்கின்றது. சட்டம் மற்றும் நீதித்துறையினர் இச் சம்பவம் தொடர்பில் மட்டுமன்றி இது போன்ற முன்னைய சம்பவங்கள் தொடர்பிலும் அதிக கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். சட்டங்களை புதிதாக உருவாக்குவதற்கு அப்பால் இருக்கின்ற சட்டங்களை முறையாக அமுல்படுத்துவது குறித்து பலமான பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். நாட்டை முன்னேற்றுவதற்கு மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய மனநிலையை உருவாக்குவதே முதற்படியாகும். இந்த விடயத்தை உரிய தரப்புக்கள் கவனம் எடுக்கும் என நம்புகின்றோம்.

தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

செயலாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

President : Dr.T.Vigneswaran
Vice President: Prof.M.Thanikaiselvan
Treasurer : Mr.R.Kajananthan
General Secretary: Mr.R.Sharveswara
Assistant Secretary: Mr.N.C.Umakanth
Email : juta@univ.jfn.ac.lk

பாதிக்கப்பட்ட மருத்துவருடன் ஆத்மார்த்தமாக நமது சங்கம் துணை நிற்கின்றது. சட்டம் மற்றும் நீதித்துறையினர் இச் சம்பவம் தொடர்பில் மட்டுமன்றி இது போன்ற முன்னைய சம் பவங்கள் தொடர்பிலும் அதிக கவனம் எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். சட்டங்களை புதிதாக உருவாக் குவதற்கு அப்பால் இருக்கின்ற சட்டங்களை முறையாக அமுல் படுத்துவது குறித்து பலமான பொறிமுறைகள் உருவாக்கப் படவேண்டும். நாட்டை முன்னேற்றுவதற்கு மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய மனநிலையை உருவாக்குவதே முதல் படியாகும். இந்த விடயத்தை உரிய தரப்புக்கள் கவனம் எடுக்கும் என நம்புகின்றோம் என்றுள்ளது.

# ஒரு பக்கம் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு மறுபுறம் கொக்கிளாய், நாயாற்றில் தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்பு: தேசப்படத்தில் மட்டும் இந்திய – இலங்கை கடல் எல்லை!

14.03.2025

படை அதிகாரிகளின் துணையுடன் தமிழரின் பாரம்பரிய பகுதிகளான கொக்கிளாய், நாயாற்றுப்பகுதி முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு நிரந்தர சிங்கள மீன்பிடிக் குடியிருப்பு.

பாராளுமன்றில் கடற்றொழில் தொடர்பான விவாதங்கள் சூடாக நடைபெற்று வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், வடக்கு – கிழக்கு மீனவர்கள், குறிப்பாக வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற நெருக்கடிகள் தொடர்பான விடயங்களை தரவுகள், தகவல்களை ஆதாரமாகக் கொண்டு அரசினை மிக கடுமையாக சாடி திணறடித்துள்ளார். முக்கியமாக இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் கொக்கிளாய், நாயாற்றில் தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பாக கடுமையான சீற்றத்தை வெளிப்படுத்தியிருப்பதுடன், படை அதிகாரிகளின் துணையுடன் தமிழரின் பாரம்பரிய பகுதிகளான கொக்கிளாய், நாயாற்றுப்பகுதி முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு நிரந்தர சிங்கள மீன்பிடிக் குடியிருப்புகளாக ஆக்கப்படுவதை எதிர்த்தும் குரல் எழுப்பியிருக்கிறார்.

மேலும் மயிலிட்டி துறைமுகத்தின் அபிவிருத்தி, தென்பகுதி ஆழ்கடல் பன்னாட் கல மீன்பிடி மீனவர்களின் பயன்பாட்டுக்குரிய ஒன்றாகவும் வடக்கு மீனவர்கள் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டதுடன், வடக்கே பரந்த ஆழ்கடல் இருந்தும் அதனைப் பயன்படுத்துவதற்கான உட்கட்டுமான வசதிகள் முக்கியமாக பலநாட் கலங்களுக்கான முதலீட்டு வசதியின்மை, துறைமுகம், பயிற்சி, மற்றும் உபகரணங்கள் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாதுள்ளமை குறித்தும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

வடகரையோரத்தில் அடுக்கடுக்காக படைமுகாம்களை வைத்துக்கொண்டு இந்திய மீனவர்களின் ஊடுருவலையோ போதை வஸ்து கடத்தலையோ அவர்களால் தடுக்கமுடியாத கையறு நிலையில் இருப்பது குறித்தும் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியிருந்தார். இதனால் திணறிப்போயிருந்த அரசு சார்பிலே கடற்றொழில் அமைச்சர் வடக்கு மீனவர்களின் நம்பிக்கையை காப்போம் எனவும் வைத்துள்ள நம்பிக்கைக்கு கடுகளவேனும் தீங்கு விளைவிக்கமாட்டோம் எனவும் ஒப்பாரி வைத்திருக்கிறார்.

தவிர அமைச்சர் பிமல் ரத்நாயக்கா, இந்தியாவை நோக்கி வடக்கு மீனவர்களுக்கு நல்லது செய்ய விரும்பின் எல்லை தாண்டி மேற்கொள்ளும் சட்டபூர்வமற்ற மீன்பிடியினை தடுக்க உதவ வேண்டுமெனவும் மன்றாடியிருக்கின்றார். வடக்கு என்.பி.பி. தமிழ் உறுப்பனர்களோ, வன்னி உறுப்பினர்களோ வாய் பிளந்து கொட்டாவி விடும் நிலைதான். மீனவர் துன்பம் குறித்து எந்தக் கவலையும் அவர்களுக்கு கிடையாது. ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவினுடைய நிலைப்பாடு புரியாத ஒன்றல்ல, அவர்களை நம்பமுடியாது.

எமது கோரிக்கை,

நாம் சிறீலங்கா அரசிடம் கோருவது என்னவெனில், அரசு வடக்கு மீனவர்களுக்கு நல்லது செய்ய விரும்பினால் முதலில் உள்ளூர் இழுவைமடித் தொழில் தடையினை நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும் என்பதுதான். 2017 ல் இழுவைமடி உள்ளூரில் தடையென சட்டம் இயற்றியிருந்தது. ஆனால் இது வரை அது அமுற்படுத்தப்படவில்லை. முதலில் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். பல தடவைகள் இது குறித்து பேசியும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே நிலைமை உள்ளது.

மேலும் கண்டல் கிளைகளையும் மரக்குற்றிகளையும் வெட்டி கடற்பகுதிகளில் அதனை அமிழ்த்தி மீனை ஒருங்குசேர விட்டு வெடிகளை அதன் மீதும் பவளப்பாறைத் தொடர்கள் மீதும் வீசி எறிந்து மீன்களை வேட்டையாடுவதையும் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கரையில் படையினர் பார்த்திருக்க டைனமெட் வெடி வைத்து மீன்களைக் கொல்லும் நாசகார செயற்பாடுகளையும், கடலில் நிலையாக நிறுத்தப்பட்டுள்ள நூற்றுக்கணக்கிலான கம்பிப்பொறி வலைகளை அகற்றி சிற்றளவு மீன்பிடியாளர்களின் மீன்பிடிச் செயல்பாடுகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின்போது பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட மக்கள் மீளவும் சொந்த இடம் திரும்பி தமது மீன்பிடிச் செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இடம்பெயர்ந்து வரும் தென்பகுதி மீனவர்களை படையினரின் உதவியுடன் நிரந்தர குடியிருப்புக்களை அமைப்பது, அவ்விடங்களில் பிக்குகளை கொண்டு விகாரைகளை அமைப்பது போன்ற இழிவான, அருவருப்பான செயற்பாடுகளை முன்னெடுப்பது வெறுக்கத் தக்கது. ஏற்றுக் கொள்ளவும் முடியாதது.

மேலும், கரையோரங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள படைமுகாம்களால் மீனவர்களுக்கு எந்த நன்மைகளும் கிடையாது என்பதை உறுதிபடக் கூறிவைக்க விரும்புகின்றோம். தேசிய பாதுகாப்புக்கென பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்து படையினரை நிலைகொள்ள வைப்பதைத் தவிர தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்ற கஞ்சாக் கடத்தலைக் கூட கட்டுப்படுத்த முடியவில்லையே?

மனித புதைகுழிகளும் பௌத்தர்களே இல்லாத இடங்களிலும் படைமுகாம்களிலும் துப்பாக்கி முனையிலே விகாரைகளை கட்டி அருவருப்பை ஊட்டியதும் தவிர, காத்திரமான அபிவிருத்தி திட்டங்கள் எவற்றையும் வடக்கில் காணோம்.

வடக்கிலே பாக்கு நீரிணை, பாக்கு குடா, மன்னார் குடா ஆகிய பாரம்பரிய கடல்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் வசமே உள்ளன. இதை ஊடறுத்தே 1974, 76 களில் இந்திய – இலங்கை எல்லைக்கோடு வரையப்பட்டது. கச்சதீவு அன்றைய பாரதப் பிரதமரின்(இந்திரா காந்தி) ஆலோசனையின் பிரகாரம் இலங்கை பிரதமரின் (சிறிமாவோ) விருப்பிற்கிணங்க இலங்




கைக்கு விட்டுக் கொடுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஆயினும் ஐம்பது வருடங்களாக கச்சதீவில் வடக்கு தமிழர் அடைந்த நன்மை எவையுமே இல்லை. இருந்தென்ன இல்லாமல் போனால் என்ன. எல்லாமே ஒன்றுதான். கச்சதீவும் ஐந்து மைல் சுற்றாடல் பரப்பு கடல் பகுதியும் மீனவர்களுக்காக குத்தகைக்குத் தேவையென ஓர் கோரிக்கை இந்திய தரப்பில் (பேராசிரியர் சூரியநாராயன்) ஓர் கருத்து முன்னர் முன்வைக்கப்பட்டது. பாக்கு கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதிப்பது வடக்கு கடலில் சவப்பெட்டிகளை மிதக்க விடுவதற்குச் சமம்.

புதுக்கோட்டை, நாகபட்டின மீனவர்களின் தளமாக பாக்கு நீரிணை மற்றும் முல்லைத்தீவு கடற் பகுதியும், இராமேசுவர மீனவர்களின் பகுதிகளாக பாக்கு குடா கடலும், தூத்துக்குடி மீனவர்களுக்கான பகுதியாக மன்னார் குடாக்களும் பறிபோயுள்ளன. ஏறத்தாழ வடக்கு கடல் முழுவதும் பறிபோயுள்ளது. இலங்கை – இந்திய சர்வதேச கடல் எல்லைக்கோடு தேசப்படத்தில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் அந்த எல்லைக் கோடானது வடக்கு கரையோரமாக இப்போது தள்ளப்பட்டிருக்கிறது. சர்வதேச கடற் சட்டம் இங்கு செல்லுபடியாகாத ஓர் விடயமாகவே உள்ளது. இந்திய மீனவர்களுக்கு கச்சதீவு அமைவிடம் எது, எல்லைக்கோடு எது என்பது நன்றாகத் தெரியும். ஆனால் தெரியாது என்பதே இந்தியாவின் நிலை.

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இலங்கை தபால் திணைக்கள ஊழியர்களால் கவனயீர்ப்பு போராட்டம்!

14.03.2025

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தபால் திணைக்கள ஊழியர்கள் இன்று வெள்ளிக்கிழமை (14) மட்டக்களப்பு பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.




அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம், அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் சேவையாளர் சங்கம் என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் போராட்டத்தினை முன்னெடுத்தது.

அந்த வகையில் மட்டக்களப்பு தபால் திணைக்களத்திற்கு முன்னால் தபால் திணைக்கள தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று மதியம் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த வருடம் அமைச்சரவையில் தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்த விடயங்களைத் தபால் திணைக்களத்தின் ஊடாக இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதை முன்னிட்டு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அனைத்து தரப்பு வெற்றிடங்களையும் உரிய முறையில் நிரப்ப




வேண்டும், அமைச்சர் உறுதி அளித்த விடயங்களை உடன் நிறைவேற்ற வேண்டும், பதவி உயர்வுகளுக்குக் காலம் தாழ்த்தாது உடன் வழங்க வேண்டும், தபால் திணைக்கள புதிய நியமன முறையை உடன் அமல்படுத்த வேண்டும் என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி நள்ளிரவு முதல் 18ஆம் திகதி நள்ளிரவு வரையான காலப் பகுதியில் தொழிற்சங்க நடவடிக்கை போராட்டத்தினை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் இவ்வார்ப் பாட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# இது சிறையல்ல: திருகோணமலை 'கன்சைட் – GUN SITE' வதைமுகாம்!

14.03.2025

நிலத்துக்கு அடியிலேயே அது அமைந்துள்ளது. நான் உள்ளிட்ட எனது குழு மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலேயே அங்கு சென்றோம்.





அதற்குள் கொடிய விஷப்பாம்புகள் இருந்தன. ஆயிரக்கணக்கான வௌவால்கள் இருந்தன. உள்ளே செல்ல முடியவில்லை. ஒரு வகையான வாயு வெளிவந்து கொண்டிருந்தது.

எல்லோருக்கும் இருப்பது ஒரே ஒரு மலசலகூடம். அது வர்த்தமானிப்படுத்தப்பட்ட சிறையும் அல்ல. மனிதன் ஒருவனை தடுத்து வைக்க எந்த வகையிலும் பொருத்தமற்றது.

தற்போது வெளிநாடொன்றில் தஞ்சமடைந்திருக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி திரு நிஸாந்த டீ சில்வா, திருகோணமலை 'கன்சைட்-Gun Site' வதை முகாமை இவ்வாறு அடையாளம் காட்டியிருந்தார்

அதே போல ஐ.நா.வின் குழுவொன்றும் 'கன்சைட்-Gun Site' வதை முகாம் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்தியிருந்தது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட மற்றும் ரியல் அட்மிரல் டி.கே.பி. தசநாயக்க ஆயோயோரின் துணையுடன் கடற்படையால் 'கன்சைட்-Gun Site' வதை முகாம் இயக்கப்பட்டிருந்ததும் தெரியவந்திருந்தது.

குறிப்பாக கடற்படையை சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டர்களான சம்பத் முனசிங்க, ஹெட்டியாராட்சி ஆகியோர் தலைமையிலான குழுவால் கொழும்பில் கடத்தப்பட்ட 11 தமிழ் மாணவர்கள் 'கன்சைட்-Gun Site' வதை முகாமில் தடுத்து வைத்து கொன்றமைக்கு ஆதாரங்கள் இருக்கின்றது.

அதே போல 'கன்சைட்-Gun Site' வதை முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த சுமித் ரணசிங்க அவர்களுடன் கோத்தபாயா ராஜபக்சே தொடர்பில் இருந்தார் என்பதை International Truth and Justice Project (ITJP) உறுதிப்படுத்தி இருந்தது.

இது தவிர கிழக்கு மாகாண கட்டளை அதிகாரியாக இருந்த எஸ் எம் பி வீரசேகர, பிரதி கட்டளை அதிகாரியாக இருந்த சிசிர ஜெயக்கொடி போன்றவர்களுடன் கோத்தபாயா ராஜபக்ஷே அவர்களும் 'கன்சைட்-Gun Site' செல்வதற்கான அதிகாரம் படைத்தவர்களாக இருந்தார்கள் என்பதும் அம்பலப்படுத்தப்பட்டு இருந்தது.

திருமதி யஸ்மின் சூக்காவின் International Truth and Justice Project (ITJP) 'கன்சைட்-Gun Site' அமைந்திருந்த இடம், அதன் அதிகாரிகள், சித்திரவதைகளை மேற்கொண்டவர்கள், உட்பட்ட பல தகவல்களை ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளிடம் வழங்கியிருந்தது.

இங்கு குறைந்தது 700 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

விசேடமாக யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட பலரும் பருத்தித்துறையிலிருந்து படகுகள் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அச்செழு இராணுவ முகாம், ஜோசப் இராணுவ முகாம், வேப்பங்குளம் (CID) முகாம், கொழும்பு விமான நிலைய பயங்கரவாத புலனாய்வு திணைக்களம், பூசா தடுப்புமுகாம், கபரண இராணுவ முகாம், வெலிகந்த முகாம் என தமிழர்களை வேட்டையாடிய வதை முகாம்களில் 'கன்சைட்-Gun Site' முக்கியமானது.

கொழும்பில் பணத்திற்காக கடத்தி காணாமலாக்கப்பட்ட ராஜீவ் நாகநாதன் என்கின்ற மாணவர் 'கன்சைட்-Gun Site' முகாம் தடுப்பிலிருந்தவாறு தன் தாயாரோடு பேசிய சந்தர்ப்பத்தில் பல உண்மைகளை வெளிப்படுத்திருக்கின்றார்

குறிப்பாக அங்கு சுமார் 18 முதல் 20 வயதுடைய பல இளைஞர் யுவதிகள சுட்டு படுகொலை செய்கின்றனர் என்பதையும் அங்குள்ள கழிவறை எங்கும் இரத்தக்கறை பரவியிருந்ததையும் சொல்லியிருக்கின்றார்.

2015 இற்கு பின்னர் 'கன்சைட்-Gun Site' முகாம் கொடுமைகள் தொடர்பான முழுமையான தகவல்கள் அம்பலமாகி விட்ட பின்னரும் வசந்த கரன்னகொட உட்பட யாரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேனா முதல் ரணில் விக்ரமசிங்கே வரையான ஆட்சியாளர்கள் சகல குற்றவாளிகளையும் பாது காத்தார்கள்.

இது போதாதென்று இன்றைக்கு 'பட்டலந்த வதை முகாம்' குறித்து பேசும் ஜேவிபி 'கன்சைட்-Gun Site' வதை முகாம் சூத்திரதாரிகளில் ஒருவரான கடற்படை தளபதி சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க அவர்களை துறைமுக அதிகார சபையின் தலைவராக நியமித்துள்ளது.



இந்த ஜேவிபி தான் இலங்கையராக ஒன்றுபடுமாறு எங்களுக்கு அழைப்பு விடுகின்றது.

20 நாட்களாக பொலிஸ் மா அதிபரை ஒழித்து வைத்து நாடக மாடும் ஜேவிபி தன் நிர்வாக பலவீனங்களை மறைக்க பட்டலந்த அறிக்கையை வைத்து வேஷம் போடுகின்றது.

இவர்கள் எங்களுக்கு மட்டுமின்றி யாருக்கும் நீதியை பெற்று தர மாட்டார்கள்.

நன்றி.இனமொன்றின் குரல்

# இளைஞரின் மரணத்துக்கு நீதி கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

14.03.2025

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்திலிருந்து கடந்த ஆண்டு சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் கொலைக்கு நீதி கோரி இன்று (14) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



வெளிநாடு செல்வதற்கான பயன ஏற்பாடுகளைச் செய்த 27 வயதுடைய மல்லாவியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 29-07-2024 அன்று முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கொலை செய்யப்பட்டு குளத்துக்குள் போடப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தபோதும் அதனுடன் தொடர்புபட்ட கொலையாளிகளை இதுவரை கைது செய்யவில்லை என தெரிவித்து இன்றைய தினம் பிரதேச பொது அமைப்புகள், வர்த்தக சங்கம், பொது மக்கள் என 300க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

மல்லாவி பேருந்து நிலையத்திலிருந்து மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்ற போராட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடி பொலிசாருக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

இதனையடுத்து, அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் சம்பவ இடத்துக்கு மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சென்று, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் இளைஞரின் மரணம் தொடர்பாக விசாரணைகளை தொடர்ந்து நடத்துவதாகவும் இந்த விசாரணைகளுக்காக விசேட குழு ஒன்றை நியமிப்பதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்ததையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளித்தனர்.

பின்னர், சம்பந்தப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கொலை செய்யப்பட்ட இளைஞரின் பெற்றோர், உறவினர்களுடன் கலந்துரையாடினர்.



இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் வகையில் மல்லாவி பொலிசாரால் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது.




# அமெரிக்கா விவகாரத்தில் பின் வாங்க போவதில்லை: கனடா

04.03.2025

அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து ஒருபோதும் பின் வாங்க போவதில்லை என கனடா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜன.,20ல் பதவியேற்ற டொனால்டு டிரம்ப், பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை டிரம்ப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார்.

அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்தநிலையில், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கும் அமெரிக்காவை எதிர்த்து போட்டியிடப்போவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா மீதான வரி விதிப்பு நடவடிக்கையை "வர்த்தக போர்" என்று குறிப்பிட்டுள்ள ட்ரூடோ இதன் மூலம் அமெரிக்க குடம்பங்கள் கடுமையாக பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து பின் வாங்க போவதில்லை. கனடியர்கள் நியாயம் மற்றும் கண்ணியமிக்கவர்கள். சொந்த நாட்டின் நல்லிணக்கம் ஆபத்தில் இருக்கும்



போது சண்டையில் இருந்து பின்வாங்க மாட்டோம் என்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மேலும் கூறியுள்ளார்.

# ரொரான்ரோவில் மோசடிகள் காரணமாக 400 மில்லியன் டாலர்கள் இழப்பு

05.03.2025

ஒன்ராரியோவின் ரொரான்ரோவில் கடந்த ஆண்டில் மோசடிகள் காரணமாக சுமார் 400 மில்லியன் டாலர்களை மக்கள் இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எண்ணிக்கை பல்வேறு மடங்குகளினால் அதிகரிக்க கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மோசடியில் சிக்கிய விவகாரம் தொடர்பில் முறைப்பாடு செய்வதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மாதம் மோசடிகளை தவிர்க்கும் மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு சுமார் 400 மில்லியன் டாலர் பெறுமதியான மோசடி சம்பவங்கள் ரொறன்ரோவில் இடம் பெற்றுள்ளன.

ரொரான்ரோவில் சுமார் 17,000 மோசடி சம்பவங்கள் பதிவாகி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இணைய வழியிலான மோசடி சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிரிப்டோ கரன்சி, பிரமிட் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிதி மோசடிகள் இடம் பெற்று வருவதாக பொலிசார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

பல்வேறு வழிகளில் மக்கள் ஏமாற்றப்படுவதாகவும் மோசடியில் சிக்கியவர்கள் வெட்கம் காரணமாக இந்த மோசடிகள் தொடர்பிலான தகவல்களை வெளியிட தயங்குவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான மோசடிகள் தொடர்பில் மக்கள் கூடுதல்




அவதானம் செலுத்த வேண்டும் என ரொறன்ரோ பொலிஸ் பிரிவின் நிதிக் குற்றவியல் புலனாய்வு அதிகாரி டேவிட் கொபி தெரிவித்துள்ளார்.

# அனைத்துலகப் பெண்கள் நாள் நிகழ்வும், பேரணியும்....

09.03.2025

08.03.2025 அன்று Canada - Toronto நகரில் அனைத்துலகப் பெண்கள் நாள் பேரணி நடைபெற்றது. பல பெண்கள் அமைப்புகள், அரசியலாளர்குள், தொழிற்சங்கங்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்துகொண்டார்கள். ஈழத் தமிழர் சார்பாக உலகத்தமிழர் உரிமைக் குரல் (Voice of Global Tamil rights) அமைப்பும் கலந்து கொண்டு, தமிழின அழிப்பில் எவ்வாறு ஈழத்தமிழ் பெண்கள் ஓர் கருவியாகப் பயன்படுத்தப் பட்டார்கள் என்ற விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்தினார்கள்.



தமிழீழ நாட்டின் கொடிகள் உயரப் பறந்து பேரணிக்கு அணி செய்தன.

"அனைத்துலகப் பெண்களுக்கு முன்னோடியாக நின்று போராடிய தமிழீழப் பெண்களுக்கு எதிராக, உலக வல்லரசுகளும் சிறீலங்கா அரசும் இணைந்து 2006 ஆம் ஆண்டு புலிகள் மீது தடைவிதித்து இனவழிப்பு போரை ஏவின.

75 வருடங்களுக்கு மேலான தமிழின அழிப்பில் ஏராளமான தமிழீழப்பெண்கள் சிறீலங்கா மற்றும் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள், ஏராளமானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டனர், பலர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டனர். ஏனையோர் உதவிகளின்றி தனித்துவிடப்பட்டுள்ளனர்.

ஆனால் தமிழீழத்தாகம் என்றும் அழிக்கப்படவதில்லை. உலக நீதி மறுக்கப்பட்டுள்ளது, இனவழிப்பு தொடர்ச்சியாக நடைபெறுகிறது" என்பதாக நிகழ்வின் கருப்பொருள் அமைந்தது.








**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# கனடாவின் லிபரல் கட்சியின் தலைவராக மார்க் கார்னி தெரிவு

09.03.2025

கனடாவின் லிபரல் கட்சியின் தலைவராக மார்க் கார்னி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

வெற்றி பெற்றதற்குப் பின்னர் அவர் உற்சாகமான உரையாற்றி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் கனடாவின் கன்சர்வேட்டிவ் தலைவர் பியர் பொய்லிவ்ரை எதிர்கொள்ள உறுதியளித்தார்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில், மார்க் கார்னி முதல் வாக்குகெடுப்பிலேயே 85.9% வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

லிபரல் கட்சியின் தலைவர் தேர்தலில், முன்னாள் நிதி அமைச்சர் கிரிஸ்டியா ஃப்ரீலாண்ட் 8% வாக்குகளுடன் இரண்டாவது இடத்தில், முன்னாள் அமைச்சரவை உறுப்பினர் கரினா கோல்ட் மற்றும் வணிகர் ஃப்ராங்க் பேயலிஸ் தலா 3% வாக்குகளுடன் மூன்றாம், நான்காம் இடங்களைப் பெற்றுக கொண்டனர்.




# கனடாவில் வீட்டு வாடகை தொகை வீழ்ச்சி...

11.03.2025

கனடாவில் வீட்டு வாடகைகள் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக குறைந்து, பெப்ரவரி மாதம் சராசரி வாடகை 2,088 டொலராக குறைந்துள்ளது.



Rentals.ca மற்றும் Urbanation வெளியிட்ட அறிக்கையின்படி, பெப்ரவரியில் வாடகைகள் 4.8% வீழ்ச்சி கண்டுள்ளன.

இது ஏப்ரல் 2021க்கு பின்னர் பதிவான அதிகளவு வாடகைத் தொகை குறைவு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுமானம் அதிகரித்துள்ளதால் வீடுகள் அதிகளவில் நிரம்பல் செய்யப்பட்டுள்ளதாகவும், மக்கள்தொகை வளர்ச்சி மந்த மாகியுள்ளதாகவும் இதனால் வாடகை குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவுடன் வர்த்தக போர் காரணமாக பொருளாதார சிக்கல்கள் உருவாகியுள்ளமையும வாடகை வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாகாணத்தில் அதிகபட்ச வாடகைத் தொகை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அடுக்குமாடி வாடகை 4.2% குறைந்து 2,329 டொலர்க ளாகவும், பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் 1% வீழ்ச்சி கண்டு 2,457 டொலர்களாகவும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.




எனினும், சராசரி வாடகை தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்டதை விட 5.2% அதிகம் எனவும், கொரோனா காலத்துடன் ஒப்பீடு செய்யும் போது 16.9% உயர்வினையும் பதிவு செய்துள்ளது.

# கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி பதவியேற்பு

14.03.2025

கனடாவின் 24ஆவது பிரதமராக மார்க் கார்னி இன்று (14) பதவியேற்றுள்ளார்.



கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி 7 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அவரே லிபரல் கட்சியின் தற்போதைய தலைவராகவும் பதவி வகிக்கும் சூழலில், லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் முன்னாள் மத்திய வங்கித் தலைவரான மார்க் கார்னி வெற்றிபெற்றார்.

இதையடுத்து, கனடாவின் 24ஆவது பிரதமராகவும் லிபரல் கட்சியின் அடுத்த தலைவராகவும் மார்க் கார்னி தேர்தெடுக்கப்பட்டார்.

இந்த நிலையில், கனடாவின் 24ஆவது பிரதமராக மார்க் கார்னி இன்று (14) பதவியேற்றுள்ளார்.









**TORONTO, CANADA - MARCH 08, 2025**

# #FreeTamileelam


















# தமிழக செய்திகள்



# முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருவதால் தமிழகத்துக்கு நீர் வெறுவதில் சிக்கல்

01.03.2025

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேசுவரம் அடுத்த தங்கச்சி மடத்தில் அனைத்து விசைப்படகு மீனவர்கள், நாட்டுப்படகு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் இணைந்து இன்று (28) வெள்ளிக்கிழமை காலை முதல் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.






உண்ணாவிரத போராட்டத்திற்கு அனைத்து கட்சியினரும் ஆதரவு தெரிவித்து உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு படகு அரசுடைமை யாக்க பட்டு வருவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் கடந்த 23 ஆம் திகதி ராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற ஐந்து படகையும் அதிலிருந்த 32 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறை தண்டனை விதிக்கப்பட்டு வெளிக்கடை சிறையில் 50 க்கும் மேற்பட்ட மீனவர்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சிறை கைதிகளாகவும் 50 க்கும் மேற்பட்ட மீனவர்கள் நீதிமன்ற காவலில் உள்ளனர்.

மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இலங்கை வசம் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் கிடப்பில் போடப்பட்டுள்ள இந்திய இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை துரிதப்படுத்தி உடனடியாக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற மத்திய அரசு நடவடிக்கை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இராமேசுவரம் அடுத்த தங்கச்சிமடம் வலசை தெருவில் அனைத்து விசைப்படகு மீனவர்கள் மற்றும் நாட்டுப் படகு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் இன்று (28) முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கி உள்ளனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு அதிமுக, மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், எஸ்டிபிஐ உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மேலும் இந்த உண்ணாவிரத போராட்டம் இரவு பகலாக நடைபெறும் எனவும் மத்திய அரசு படகையும் மீனவர்களையும் விடுதலை செய்வதாக உறுதியளித்தால் மட்டுமே இந்த போராட்டம் கைவிடப்படும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

தங்கச்சி மடத்தில் நடை பெறும் உண்ணாவிரத போராட்டம் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் தங்கச்சிமடம் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மீனவர்களின் இந்த கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 5 நாட்களாக தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் யோகா ஆசிரியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 20 மாத ஊதியத்தை உடனடியாக வழங்க வேண்டும்

## செந்தமிழன் சீமான் – நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர்

11.03.2025

இந்திய ஒன்றிய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், பணியாற்றி வந்த யோகா ஆசிரியர்களுக்கு ரூபாய் 5000 முதல் 8000 வரை அடிப்படை ஊதியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அவர்கள் அனைவரையும் பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளதுடன், கடந்த 20 மாதங்களாக ஊதியம் வழங்கப்படாதது வன்மையான கண்டனத்துக்குரியது.

தமிழ்நாடு முழுவதுமுள்ள 1300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது பணியாற்றி வரும், பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற யோக ஆசிரியர்களை பணி நீக்கம் செய்துவிட்டு, அவர்களுக்கு பதிலாக யோகா மற்றும் நேச்சுரோபதி (BNYS) படித்துள்ள ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய தமிழக ஆயூஸ் மையம் (STATE AYUSH SOICIETY) கடந்த 07.02.2025 அன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இது, ஏற்கனவே பணியாற்றி வரும் யோகா ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை நசிக்கின்ற கொடுஞ்செயலாகும். இப்புதிய பணி நியமனத்திற்கு, பல இலட்ச ரூபாய் இலஞ்சம் பெற்று, கோடிக்கணக்கில் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்திய ஒன்றிய அரசின் விதிமுறைகளின்படி, ஆரம்ப சுகாதார நிலைய யோகா ஆசிரியர் பணியிடத்திற்கு, யோகா படிப்பில் பட்டம் அல்லது பட்டயம் அல்லது 12 ஆம் வகுப்பு முடித்திருந்தாலே போதுமானது என்று வரையறுத்துள்ள நிலையில், அத்தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? யாரை மகிழ்விக்க இந்த அறிவிப்பு? யாருடைய லாபத்திற்காக இப்பணி நீக்க உத்தரவு? யோகா ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்து, அவர்களது குடும்பத்தை வீதியில் நிறுத்துவது சிறிதும் நியாயமற்ற கொடுஞ்செயலாகும். இதற்குப் பெயர்தான் திராவிட மாடலா? இதுதான் திமுக அரசின் சமூகநீதியா? என்ற கேள்விகள் எழுகிறது.



ஆகவே, தமிழ்நாடு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது பணியாற்றும் யோகா ஆசிரியர்கள் அனைவரையும் பணி நீக்கம் செய்யும் முடிவைக் கைவிட்டு, அவர்களுக்கு வழங்க வேண்டிய 20 மாத ஊதியத்தை உடனடியாக வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

## நாம் அரசியல்வாதிகளல்லர், நாம் புரட்சிவாதிகள்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# சிலை கடத்தலை விசாரித்த பொன். மாணிக்கவேல் மீது வழக்கு ஏன்? சிபிஐக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

12.03.2025

நீதிமன்ற உத்தரவுபடி சிலை கடத்தல் வழக்குகளை விசாரித்த ஐஜி பொன் மாணிக்கவேல் மீது நீதிமன்ற அனுமதி பெறாமல் வழக்குப் பதிவு செய்தது எப்படி? என சிபிஐக்கு உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐஜியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் பொன்.மாணிக்கவேல். சிலை கடத்தல் வழக்கின் முக்கிய குற்றவாளி தீனதயாளனை தப்பிக்க வைக்க உதவியது தொடர்பாக பொன்.மாணிக்கவேல் மீது வழக்குப் பதிவு செய்ய சிபிஐ-க்கு உத்தரவிடக்கோரி அதே பிரிவில் டி.எஸ்.பியாக பணி புரிந்து ஓய்வு பெற்ற காதர்பாட்ஷா உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, பொன்.மாணிக்கவேலுக்கு எதிரான புகார் குறித்த முதல் கட்ட விசாரணை நடத்தி, புகாரில் முகாந்திரம் இருந்தால் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என சிபிஐ-க்கு உத்தரவிட்டார்.

அதன்படி சிபிஐ விசாரணை நடத்தி பொன்.மாணிக்கவேல் மீது வழக்குப் பதிவு செய்து மதுரை மாவட்ட கூடுதல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் முதல் கட்ட விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தது. இந்நிலையில் முதல்கட்ட விசாரணை அறிக்கை நகல் கேட்டு பொன்.மாணிக்கவேல் விசாரணை நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். மனு தள்ளுபடி செய்யப் பட்டது. இதை ரத்து செய்து சிபிஐ விசாரணை அறிக்கை நகல் கேட்டு உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்பு புதன்கிழமை விசா ரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, “சிலை கடத்தல் வழக் குகளை நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே பொன். மாணிக்கவேல் விசாரித்து வந்தார். இதனால் அவர் மீது வழக்கு பதிவு செய்ய சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திடம் முறையாக அனு மதி பெற்றிருக்க வேண்டும். உரிய தகவல்கள் இல்லாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. போதுமான தக வல்கள் இல்லாமல் எப்ஐஆர் எப்படி பதிவு செய்யலாம்? யார் மீது வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் போதுமான தகவல்கள் இல்லாமல் இவ்வாறு சிபிஐ வழக்கு பதிவு செய்ய முடியுமா? இது விசாரணைக்கு தடை விதிக்க போதுமானது,” என்றார்.





பின்னர் சிபிஐ தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஆஜராக கால அவ காசம் கோரப்பட்டது. அதோடு கடந்த விசாரணையின் போது மூடி முத்திரையிட்ட கவரில் அளிக்கப்பட்ட ஆவணங்களில் பொன் மாணிக்கவேல் மீது உள்ள குற்றச்சாட்டுகளுக்கு முகாந் திரம் இருப்பதற்கான விவரங்கள் இடம் பெற்றுள்ளன. இதனை யடுத்து நீதிபதி, சிபிஐ தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் அலுவலர்கள் காணொலி காட்சி வழியாக ஆஜராக உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தார்.

# வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலுவை இழப்பீட்டு தொகையை 3 வாரங்களில் வழங்க உத்தரவு!

13.03.2025

வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப்படையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய பாக்கி இழப்பீட்டுத் தொகையை 3 வாரங்களில் வழங்க தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தன மரக்கடத்தலில் ஈடுபட்ட (?) வீரப்பனை தேடும் பணியில் ஈடுபட்ட தமிழக - கர்நாடக அதிரடிப்படையினர் விசாரணை என்ற பெயரில் மலைக்கிராம மக்கள் மீது மனித உரிமை மீற லில் ஈடுபட்டதாக அளிக்கப்பட்ட புகார்கள் குறித்து தேசிய மனித உரிமை ஆணையம் விசாரித்தது. அதன்படி அதிரடிப்படை பொலிசாரால் பாதிக்கப்பட்ட மலைக்கிராம மக்களுக்கு ரூ.5 கோடி இழப்பீடு வழங்க தமிழக அரசுக்கு தேசிய மனித உரி மைகள் ஆணையம் உத்தரவிட்டது. ஆனால் தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் மட்டும் இழப்பீடாக வழங்கியது. பாக்கித்தொகை ரூ.3 கோடியே 79 இலட்சத்து 50 ஆயிரத்தை வழங்கவில்லை. இந்த தொகையையும் வழங்க வேண்டுமென தேசிய மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தமிழக அரசு தரப்பில் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை ஏற் கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், அதிரடிப்படையால் பாதிக் கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகையை தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும், அதுதொடர்பான பயனாளிகள் பட்டியலை சேலம் மாவட்ட ஆட்சியரிடம் வழங்க வேண்டுமென விடியல் மக்கள் நல அறக்கட்டளைக்கு உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர்களிடம் வழங்கி விட்டதாக



விடியல் மக்கள் நல அறக்கட்டளை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக் கறிஞர் பி.குமரேசன், அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர் களின் அடையாளங்கள் கண்டறியப்பட்டு விட்டதாகவும், பாக்கி இழப்பீட்டு தொகையை வழங்க அரசு ஒப்புதல் அளித்துள் ளதாகவும், அதன்படி அந்த தொகையை வழங்க 3 வாரம் அவகாசம் தேவை எனவும் குறிப்பிட்டார்.

இதையடுத்து நீதிபதிகள், வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய பாக்கி இழப்பீட்டுத் தொகையை 3 வார காலத்தில் வெளிப்படையாக வழங்க வேண்டுமென உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## அமெரிக்கா ஜனாதிபதி மற்றும் உக்ரைன் அதிபரின் சந்திப்பு மோதலில் முடிவடைந்தது

01.03.2025

அமெரிக்கா சென்ற உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபி டொனால்ட் டிரம்பைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.






உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அமெரிக்காவுடன் ஒரு முக்கியமான கனிம ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது ஆனால் நடைபெறவில்லை.

அவர்களின் கலந்துரையாடல் ஒரு சண்டையில் முடிவதற்கு முன்னர் ரஷ்யாவுடனான ஒரு போர் நிறுத்தத்தில் உக்ரைன் சமரசம் செய்ய வேண்டும் என்று டிரம்ப் ஜெலென்ஸ்கியிடம் கூறியிருந்தார். எங்கள் பிரதேசத்தில் ஒரு கொலையாளியுடன் எந்த சமரசமும் இருக்கக்கூடாது என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

கனிம ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜெலென்ஸ்கி வெள்ளை மாளிகையில் இருந்தார். ஆனால் அந்த சந்திப்பில் டிரம்ப் மற்றும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் ஜெலென்ஸ்கியை கடுமையாகத் திட்டியதால் அது வாக்குவாதத்தில் முடிவடைந்தது.

பேச்சுவார்த்தையின்போது டிரம்புடன் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்திலிருந்து ஜெலென்ஸ்கி வெளியேறினார். இதேநேரம் அவர் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதானல் டிரம்ப் மற்றும் ஜெலென்ஸ்கி இருவருமாக இணைந்து நடத்தப்பட வேண்டிய ஊடகச் திட்டமிடப்பட்டிருந்த கூட்டு செய்தியாளர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டது.

ஓவல் அலுவலகத்தை விட்டு வெளியேறிய ஜெலென்ஸ்கி பின்னர், அமெரிக்க ஜனாதிபதியையும் அமெரிக்க மக்களையும் மதிப்பதாகக் கூறினார். அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல், மூன்று வருட ரஷ்ய படையெடுப்பை தனது நாடு தடுத்து நிறுத்துவது கடினம் என்று ஜெலென்ஸ்கி ஃபாக்ஸ் நியூஸிடம் கூறினார்.

இருப்பினும், ரஷ்யாவின் புதிய தாக்குதலைத் தடுக்க பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் உக்ரைன் ரஷ்யாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது என்று அவர் கூறினார்.

பல அமெரிக்க அரசியல்வாதிகள் கோரியபடி, டிரம்பிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமா என்று கேட்டதற்கு, நாம் மிகவும் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். நாம் ஏதாவது மோசமான செயலைச் செய்தோமா என்று எனக்குத் தெரியவில்லைஎன்று ஜெலென்ஸ்கி கூறினார்.

ஓவல் அலுவலகத்தில் நடந்த சந்திப்பு இரு தரப்பினருக்கும் நல்லதல்ல என்று அவர் விவரித்தார். ஆனால் அமெரிக்காவை ஒரு கூட்டாளியாக இழக்க விரும்பவில்லை என்றும் டிரம்புடனான தனது உறவைக் காப்பாற்ற முடியும் என்றும் கூறினார்.

ஓவல் அலுவலகத்தில் நேரலையில் ஒளிபரப்பப்பட்ட விவாதத்தின் போது, உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது கையை மிகைப்படுத்திக் கொண்டார் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறினார்.

எனக்கு இப்போது ஒரு போர்நிறுத்தம் வேண்டும் என்று வெள்ளை மாளிகையிலிருந்து தனது புளோரிடா எஸ்டேட்டுக்குச் செல்லும் போது செய்தியாளர்களிடம் பேசியபோது டிரம்ப் இதனைத் தெரிவித்தார்.

உக்ரைனில் போர் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என்று தான் விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி கூறினார். ஜெலென்ஸ்கியுடனான புதிய பேச்சுவார்த்தைகளை டிரம்ப் நிராகரித்தார். மேலும் ஜெலென்ஸ்கி ஒரு போர் நிறுத்தத்தை எதிர்ப்பதாகச் குற்றம் சாட்டினார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைனை ஆக்கிரமித்து ரஷ்யா தொடங்கிய போரை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முடிவுக்குக் கொண்டுவர விரும்புகிறார். அதே நேரத்தில் ஜெலென்ஸ்கி தொடர்ந்து போராட, போராட, போராட விரும்புகிறார் என்று டிரம்ப் கூறினார்.

## பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப இதுவே சரியான தருணம்

04.03.2025

இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் சார்பில் உரையாற்றிய பேரவைத்தலைவர், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து தமது வரவேற்பை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை (24) ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரில் நேற்று திங்கட்கிழமை (03) இலங்கை நேரப்படி பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமான அமர்வில், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை பேரவைத்தலைவரால் வாசிக்கப்பட்டது.

அதன்படி இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலில் பரந்துபட்ட மக்கள் ஆணையைப்பெற்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிபீடமேறியதாகவும், புதிதாகத் தெரிவான பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப்பிரகடன உரையில் நாட்டில் நீண்டகாலமாக நிலவும் பிரிவினைகளைக் களைந்து, இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருப்பதாக உறுதியளித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுவதாக ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டதுடன், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை உண்மை மற்றும் நீதிக்காக நீண்டகாலமாகப் போராடிவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதுடன், அவர்களுக்கான தீர்வை வழங்கக்கூடியவகையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கவேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச்சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும் எனவும், வட, கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான கண்காணிப்புக்கள் தொடர்வதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கும் நிலையில், அவை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் கோரப்பட்டது.




மேலும் நீண்டகாலமாக நிலவிவரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இதுவே சரியான தருணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயன்முறை குறித்து வரவேற்பு வெளியிடப்பட்டது.

# தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டு ஜெனீவா ஐ.நா முன்றலில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டம்

03.03.2025

தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டு ஐ.நா முன்றலில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டமானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தின் ஜெனீவா தலைமையக வளாகத்தில் அமைந்திருக்கும் ஈகை பேரொளி முருகதாசன் திடலில் 03.03. 2025 அன்று பேரெழுச்சியுடன் நடைபெற்றது.






இப் போராட்டமானது, சிறீலங்கா அரசு திட்டமிட்டு நடாத்திவரும் தமிழின அழிப்பிற்கு அனைத்துலக நீதிகோரியும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழம் விடுவிக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தியும் ஐரோப்பாவாழ் தமிழ் மக்களின் ஒன்றிணைவுடன் உணர்வெழுச்சியோடு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தின் ஜெனீவா தலைமையக வளாகத்தில் அமைந்திருக்கும் ஈகைப் பேரொளி முருகதாசன் திடலில், இளைய தலைமுறையினரோடு உணர்வாளர்களும் மக்களும் என நூற்றுக்கணக்கானோர் இணைந்து தமிழீழத் தேசியக் கொடிகளையும் பதாதைகளையும் தாங்கியவாறு ஐ.நா வளாகம் அதிர கொட்டொலிகளை எழுப்பி, வேற்றினத்தவரின் அதிக கவனத்தையும் ஈர்த்துள்ளனர்.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அரசியற்பிரிவினராலும், சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பாலும் ஐ.நா மன்றத்தின் இலங்கையின் மனித உரிமையை கண்காணிக்கும் உறுப்பினர்களிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அவர்களுடன் தொடர்ந்து 30 நிமிடங்கள் வரை, இன்னும் தாயகத்திலும் மற்றும், தாயகம் திரும்பும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றியும் பேசப்பட்டது. அத்துடன் தாங்கள் தொடர்ந்தும் இலங்கையில் நடந்து வரும் மனித உரிமை மீறலுக்கு எதிராக குரல் கொடுப்பதாகவும் கூறியிருந்தனர். அது மட்டும் இன்றி அவர்கள் எம்மை தொடர்ந்து நாங்கள் வாழுகின்ற நாடுகளில் அதிக மக்களைத் திரட்டி எமது உரிமைக்கான குரல்களை எழுப்புமாறும், மற்றும் அந்த நாட்டு வெளிவிகார அமைச்சர்களிடம் தொடர்புகளைப் பேணுமாறும் கேட்டுக் கொண்டனர். ஐநா முன்றலில் எம்மால் இன்று ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்,




தொடர்ந்தும் எம்மை எமக்கு நடந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுக்குமாறும் கூறியிருந்தனர்.

# பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால் இன்று சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது

07.03.2025

சர்வதேச விசாரணை பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால் இன்று சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது என கருதுகின்றீர்களா என இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் நிகழ்ந்த பாரிய மனித உரிமைமீறல்களை வெளிக்கொணர்ந்தகலும் மக்ரே முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பினார்.




அல்ஜசீரா பேட்டியின் போது ஹமாசை அழிப்பதற்கான ராஜபக்ச மாதிரி குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது-

காசாவில் யுத்தம் ஆரம்பித்து ஒரு மாதத்தின் பின்னர் அமெரிக்காவின் புத்திஜீவிகள் அமைப்பொன்று ஹமாசினை முற்றாக அழிப்பதற்கான ராஜபக்ச திட்டம் என கட்டுரையொன்றை வெளியிட்டது.

இசுரவேல் ராஜபக்சாக்கள் பயன்படுத்திய தந்திரோபாயத்தை பயன்படுத்தவேண்டும் என அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் குறிப்பிட்ட மூலோபாயம் என்பது பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை, யுத்த சூன்ய வலயம் என அழைக்கப்படும் பகுதியை நோக்கி செல்லவைத்து அதன் பின்னர் அவர்கள் மீது குண்டுவீசுவதாகும்.

ராஜபக்சாக்கள் செய்ததை இசுரவேல் செய்யவேண்டும், என அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டதுடன் இசுரவேல் எந்த வகையான சர்வதேச விசாரணை பொறுப்புக்கூறலிற்கும் உடன்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச விசாரணை பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால் இன்று சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது , அவ்வாறு சர்வதேச சட்டங்களை புறக்கணிப்பதை நியாயப்படுத்தும் அதன் விளைவுகளை நியாயப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது, அதனை காசாவில் பார்க்கவேண்டியுள்ளது என்பது குறித்து நீங்கள் கவலையடைகின்றீர்களா? என கேட்டார்

இதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க நான் அந்த கட்டுரையை படிக்கவில்லை ஆகவே அதில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது இதனால் அது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த மெஹ்டி ஹசன் இசுரவேலை ஆதரிக்கும் சிலர் யுத்தகுற்றங்கள் மருத்துவமனைகள் மீதுதாக்குதலை மேற்கொள்வது போன்ற ராஜபக்ச பாணியை பின்பற்றவேண்டும் என கருதுகின்றார்களே என கேள்வி எழுப்பினார்.




மருத்துவமனைகள் மீதுதாக்குதல்கள் இடம்பெறவில்லை என



இதற்கு பதிலளிக்க ஆரம்பித்தவேளை பார்வையாளர்கள் மத்தியிலிருந்து குரல்கள் எழுந்தன.

அதற்கு ரணில் எனது பதிலை முடிக்க விடுகின்றீர்களா? என தெரிவித்துவிட்டு முள்ளிவாய்க்கால் மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே முக்கியமானது, வேறு சில சம்பவங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன மருத்துவமனைகள் மீது விமானப்படை தாக்குதலை மேற்கொண்டுள்ளது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, ஆனால் பாரியளவில் பெருமளவில் இது இடம்பெற்றது என நான் தெரிவிக்க மாட்டேன்.

மருத்துவமனைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளகூடாது என வலியுறுத்தியவன் நான் அதனை நாங்கள் உறுதி செய்தோம்.

யுத்தத்தின் இறுதி தருணங்களில் என்ன நடந்தது என்றால் ஆம் அங்கு பிரச்சினைகள் உள்ளது அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன், நான் இல்லை என தெரிவிக்கமாட்டேன். என குறிப்பிட்டார்.

www.sangathamil.ca

# இலங்கையில் பணியாற்றிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் 'அரசுக்கு எதிரானவர்களாக' முத்திரை குத்தப்படுகின்றனர்

06.03.2025

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் உலகளாவிய அறிக்கை வியாழக்கிழமை (6) ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நிலையில், அதில் இலங்கையில் பணியாற்றிவரும் பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் 'அரசுக்கு எதிரானவர்களாக' முத்திரை குத்தப்படுவதாக விசனம் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த 24 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரில் கடந்த திங்கட்கிழமை (3) நடைபெற்ற அமர்வில், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அதன் சமகால நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வாய்மொழிமூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் பின்தங்கிய மற்றும் நெருக்கடி மிகுந்த பகுதிகளில் பணியாற்றிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டு வரும் ஒடுக்குமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையை மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் இன்றைய தினம் (6) பேரவையில் சமர்ப்பிக்கவிருப்பதுடன், அவ்வறிக்கை தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவிருக்கிறது.

உலக நாடுகளில் பலவற்றில் பணியாற்றிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மீதான ஒடுக்குமுறைகள் பற்றிய இந்த 19 பக்க அறிக்கையில், 'மோதலின் போதும், மோதலின் பின்னரான சூழ்நிலைகளிலும், நெருக்கடி நிலைமைகளிலும் பணியாற்றிவரும் செயற்பாட்டாளர்கள்' எனும் தலைப்பின்கீழ் இலங்கை நிலைவரம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையில் மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்றிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாவதாகவும், அவர்கள் 'தீவிரவாதிகள்' என முத்திரை குத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பலர் அரசுக்கு எதிரானவர்களாக அடையாளப்படுத்தப்படுவதாகவும், அவர்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கும்போது தாக்குதலுக்கு உள்ளாவதுடன், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலும் இலங்கை உள்ளடங்கலாக உலக நாடுகளின் அரசுகள் தத்தமது நாடுகளில் பணிபுரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பணிக்குரிய பகிரங்க அங்கீகாரத்தை வழங்கல், பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் செயற்பாட்டாளர்களை அணுகுவதை இலகுவாக்கக்கூடியவகையில் அவர்களுடனான வலையமைப்பை வலுப்படுத்தல், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கென தற்போது நடைமுறையிலிருக்கும் செயன்முறையை மேலும் விரிவுபடுத்தி, வலுப்படுத்தல், அச்சுறுத்தல்கள் ஏற்படும் பட்சத்தில் முன்கூட்டியே அறிவிக்கக்கூடியவாறான சமூக வலையமைப்புக்களைக் கட்டியெழுப்பல், பின்தங்கிய பகுதிகளில் பணியாற்றும் செயற்பாட்டாளர்களுடன் பாதுகாப்பான முறையில் தொடர்புகொள்ளக்கூடிய தொடர்பாடல் வசதிகளை விரிவுபடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் ஐ.நா விசேட அறிக்கையாளர் மேரி லோலர் அவ்வறிக்கையில் பரிந்துரைத்துள்ளார்.

# "காசா விற்பனைக்கு அன்று" டிரம்ப்பின் மைதானத்திற்குள் புகுந்து பதிவு செய்த பாலஸ்தீனர்

09.03.2025

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்றும் நாங்கள் காசாவை கைப்பற்றி அதனை மத்திய கிழக்கின் சுற்றுலா தளமாக மாற்றுவோம் என்றும் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், டிரம்ப்பின் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்காட்லாந்து நாட்டில் டிரம்ப்க்கு சொந்தமான கோல்ப் மைதானத்திற்குள் பாலஸ்தீன குழுவினர் சிலர் புகுந்து, அங்குள்ள புல்வெளி பகுதியில் "காசா விற்பனைக்கு இல்லை" என்று பிரமாண்டமாக எழுதி வைத்துள்ளனர்.




மேலும், கோல்ப் மைதானம் முழுவதும் குழிகள் தோண்டப்பட்டு, டிரம்ப் காசாவை தனது சொத்தாக கருத முயற்சித்தால், அவரது சொந்த சொத்து தங்களால் சூறையாடப்படும் என பாலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக ஸ்காட்லாந்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இராணுவ உடையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின்

14.03.2025

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், இராணுவ சீருடை அணிந்த நிலையில், மேற்கு ரஷ்யாவில் உக்ரேனியப் படைகளை விரைவாக தோற்கடிக்க உத்தரவிட்டார்.

போர்நிறுத்தம் குறித்து விவாதிக்கத் தயாராகும் நிலையில், மொஸ்கோ இராணுவ முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது என்பதற்கான சமிக்ஞையாகும்.

அண்மைய மாதங்களில் ரஷ்யாவின் போர் முனை முன்னேற்றங்களும், உக்ரேனில் மூன்று வருடங்களாக நீடித்து வரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமைதி ஒப்பந்தத்தை எட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முயற்சியும், மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் இயங்கும் கெய்வ் போரில் தோல்வியடையக் கூடும் என்ற அச்சத்தை எழுப்பியுள்ளது.



ட்ரம்பின் மத்திய கிழக்கு சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் வியாழக்கிழமை மொஸ்கோவிற்கு வந்து புட்டினை சந்தித்தார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ் புதன்கிழமை போர்நிறுத்த யோசனை குறித்த விவரங்களை வழங்கியதாகவும், ரஷ்யா அதைப் பற்றி விவாதிக்க தயாராக இருப்பதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். உக்ரேன் ஆதரிப்பதாகக் கூறிய 30 நாள் போர்நிறுத்தத்திற்கான அமெரிக்க முன்மொழிவை மொஸ்கோ ஒப்புக் கொள்ளும் என்று நம்புவதாக ட்ரம்ப் புதன்கிழமை வெள்ளை மாளிகையில் தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப் பேசிய சில மணி நேரங்களுக்குப் பிறகு, ரஷ்யப் படைகளின் மின்னல் தாக்குதலுக்குப் பின்னர் உக்ரேன் தனது நிலையை இழக்கவிருக்கும் மேற்கு ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதிக்கு பச்சை நிற உருமறைப்பு சீருடையில் புட்டின் வருகை தரும் காட்சிகளை கிரெம்ளின் வெளியிட்டது.

இதன்போது பேசிய புட்டின், எதிர்காலத்தில், மிகக் குறுகிய காலத்தில், குர்ஸ்க் பிராந்தியத்தில் வேரூன்றியிருக்கும் எதிரியை (உக்ரேன்) தீர்க்கமாக தோற்கடிப்பதே எங்கள் பணி. நிச்சயமாக, மாநில எல்லையில் ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும் - என்று கூறினார்.

எனினும், போர் நிறுத்த யோசனையை அவர் குறிப்பிடவில்லை. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று காயப்படுத்தியது, மில்லியன் கணக்கான மக்களை இடம்பெயர்ந்தது, நகரங்களை இடிபாடுகளாக்கியது.

மேலும், ஆறு தசாப்தங்களில் மொஸ்கோவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான மிகப்பெரிய மோதலைத் தூண்டியது. கிழக்கு உக்ரேனில் இருந்து ரஷ்யப் படைகளைத் திசைதிருப்பவும், பேரம் பேசும் வாய்ப்பைப் பெறவும், புட்டினை சங்கடப்படுத்தவும், உக்ரேன் கடந்த ஆகஸ்ட் மாதம் எல்லையைத் தாண்டி குர்ஸ்க் பகுதிக்குள் நுழைந்தது.

இது 1941 ஆம் ஆண்டு நாஜி படையெடுப்பிற்குப் பின்னர் ரஷ்ய பிரதேசத்தின் மீதான மிகப்பெரிய தாக்குதலாகும்.

ரஷ்ய இராணுவத்தின் கூற்றுப்படி, கடந்த கோடையில் ஊடுருவலின் உச்சத்தில் 1,300 சதுர கிமீ (500 சதுர மைல்) இருந்த குர்ஸ்கில், இப்போது உக்ரேனின் பகுதி 200 சதுர கிமீ (77 சதுர மைல்)க்கும் குறைவாக உள்ளது.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# எமது மக்களின் விடுதலைத் தாகம் கலை, இலக்கியங்களாக வேண்டும்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எமது மக்களின் விடுதலைத் தாகம் கலை, இலக்கியங்களாக வேண்டும்

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய இனக் காட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம் பெரும் மொழியம், பண்பாடும், பாரம்பரிய தாயகமும் பழமைமிக்க வரலாறும் கொண்ட ஒரு தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழம் என நாம் அழைக்கிறோம். இந்தத் தமிழர் தேசத்திற்கு தன்னாட்சி உரிமையையும் இறமையையும் வென் றெடுக்கவே நாம் இரத்தம் சிந்திப் போராடி வருகி றோம்.

தமிழ்த் தேசியத்தை ஆதாரமாகக் கொண்ட ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு எழுத்தாளர்களதும், கலைஞர்களதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. உங்களது கலை, இலக்கியப் படைப்புக்கள் தமிழரின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி, தமிழ்த் தேசிய எழுச்சிக்கு முனைப்பூட்டுவதாக அமையவேண்டும்.

ஒழுங்கும் அமைதியும் நிலவும் சாதாரண சமூகச் சூழலில் நாம் வாழவில்லை. நெருக்கடிகள் மிகுந்த ஒரு போராட்ட சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப் போர்க்காலச்சூழலில் வாழும் எமது மக்களின் இன்றைய வாழ்நிலை மிகவும் துன்பகரமானது, அவலங்கள் நிறைந்தது. இந்தத் துயரமான வாழ்வைத் தரிசிக்க விழையும் கலை, இலக்கியப் படைப்புக்கள், வெறுமனே அவலத்தையும் சோகத்தையும் பிரதியெடுத்துக்காட்டாமல், இனஒடுக்குமுறையின் கொடூரமாக அவற்றைச் சித்தரித்துக்காட்டி, மக்களிடையே விழிப்புணர்வை யும், ஒடுக்கு முறைக்கு எதிரான கொதிப்புணர்வையும் தூண்டிவிடவேண்டும்.

தனிமனிதர்களது வாழ்க்கையானது சுயநலச் சுவர்களுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இந்தச் சுயநல வரம்புகளுக்கு அப்பால், தேசவிடுதலை என்ற பொதுநல விழுமியத்தால் மனிதர்களைக் கவர்ந்திழுக்கும் எழுத்துக்களே இன்றைய காலத்தின் தேவையாக இருக்கின்றது. இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தமிழ்த்தேசிய வளர்ச்சிக்கும், தேசிய விடுதலை எழுச்சிக்கும் உரமூட்டு வதாக அமையும்.

தேசிய உணர்வை வெளிக்காட்டும் படைப்பாக்கங்கள் தமிழீழ மண்ணில் படிப்படியாக மேலோங்கி வருவதை இன்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தப் போர்க்கால விடுதலை இலக்கியம் மேலும் வளர்ச்சிகண்டு செழிப்புற வேண்டும். எமது மக்களின் விடுதலைத்தாகம் கலை, இலக்கிய வடிவங்களில் வெளிப்பாடு காணவேண்டும். இது எழுத்தாளர்களாகிய உங் களது ஆக்க முயற்சி யில்தான் தங்கியிருக்கிறது. இதனை ஒரு உன்ன தமான விடுதலைப்பணி யாகக் கருத்திற்கொண்டு நீங்கள் உழைக்க வேண்டுமென நான் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# "வாருங்கள் புலிகளே தமிழீழம் காப்போம்"

புலிகளின் முதல் பாடல்

"வாருங்கள் புலிகளே, தமிழீழம் காப்போம்!
வாழ்வா? சாவா? ஒரு கை பார்ப்போம்!

முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றம் அல்லவா?
முடிசுமந்து நாங்கள் ஆண்ட கொற்றமல்லவா?
இந்த மண்ணின் மக்கள் எங்கள் சுற்றமல்லவா? – தமிழ்
ஈழமண்ணை மறந்து வாழ்தல் குற்றமல்லவா?

ஞாலம் போற்ற வாழ்ந்தோம், இந்தக் கோலம் நல்லதா?
நாலுதிக்கும் நம்மை அடிமை என்று சொல்வதா?
ஈழமண்ணில் எங்கள் கண்ணீர் நாளும் வீழ்வதா? – அட
இன்னும் இன்னும் அந்நியர்கள் எம்மை ஆள்வதா?

தமிழர் பிள்ளை உடல் தளர்ந்த கூனல் பிள்ளையா?
தடிமரத்தின் பிள்ளையா? உணர்ச்சி இல்லையா? தமிழா!
என்னடா, உனக்குப் போர் ஓர் தொல்லையா? – உன்
தாய் முலைப்பால் வீரம் நெஞ்சில் பாயவில்லையா?
வேல் பிடித்து வாழ்ந்த கூட்டம் கால் பிடிக்குமா?
வீழ்ந்த வாழ்வு மீள இன்னும் நாள் பிடிக்குமா?
தோள் நிமிர்த்தித் தமிழர் தானை போர் தொடுக்குமா? – எங்கள்
சோழர், சேரர், பாண்டியர் போல் பேர் எடுக்குமா?"

புலிகளால் முதன் முதலில் கவிதை வடிவில் எழுதி எடுக்கப்பட்டு வாய்வழி மெட்டுடன் பாடலாகப் பாடப்பட்டது:

**"வாருங்கள் புலிகளே தமிழீழம் காப்போம்"**

இக்கவிதையானது புலிகளின் ஆரம்பகாலப் பயிற்சி முகாமான அம்பகாமம் பயிற்சி முகாமில் பாடப்பட்டது ஆகும். இது "உணர்ச்சிக் கவிஞர்" காசி ஆனந்தன் அவர்களிடமிருந்து எழுதிப் பெறப்பட்டதாகும். இதனை பெரும்பாலும் லெப். செல்லக்கிளி அம்மானே பாடுவாராம். பின்னாளில் இதற்கு இசையமைத்துப் பாடியவர் யாரென்பது தெரியவில்லை.

ஆதாரம்: "விடுதலைத் தீப்பொறி " நிகழ்படம்




# ஆனையிறவு சிறீலங்கா படைத் தளத் தாக்குதல்

ஆனையிறவுப் படைத்தளத் தாக்குதல் ஆனது, சிறீலங்கா இராணுவத்தினரின் ஆனையிறவு ஆக்கிரமிப்பிற் கெதிராக 2000 ஆம் ஆண்டு மார்ச் 26 ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் அளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். ஓயாத அலைகள் மூன்று என்ற நடவடிக்கை மூலம் ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

35 நாட்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆனையிறவுப் படைத் தளமானது, பத்தாயிரத்திற்கும் அதிகமான சிறீலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்பில் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.





குடாரப்புவில் தரையிறக்கப்படுவதற்கென வெற்றிலைக் கேணியில் இருந்து கடல்வழியே தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவிலான படை நகர்வொன்றை முன்னெடுத்தனர். கடற்புலிகளின் படகுகளில் 1200 வரையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள், தாளையடி முகாம் மீதிருந்து வரக் கூடிய எதிரியின் தாக்குதல்களை எதிர்நோக்கியவாறு, குடாரப்புப் பகுதியில் தரையிறங்கும் குறிக்கோளுடன் கடல்வழியாகப் பயணித்தனர்.

குடாரப்பு தரையிறக்கச் சமர் ஈழப்போராட்ட வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய சாதனைகளில் இது முக்கியமானது. மிகப்பெரிய நாடுகளின் படைத்துறைக்கு ஈடான உத்தியுடனும் வளத்துடனும் ஒரு மரபுவழித் தரையிறக்கத்தை தமிழரின் விடுதலைச்சேனை நிகழ்த்தியிருந்தது. அதன்மூலம் வெல்லப்பட முடியாததாக பலராலும் கருதப்பட்ட மிகமுக்கிய இராணுவத் தளமான ஆனையிறவும் அதைச்சுற்றியிருந்த மிகப்பெரும் படைத்தளமும் புலிகளால் மீட்கப்பட்டது.

சவால்களை ஏற்றுச் சமர் செய்யக்கூடாதென்பது கெரிலாப் போராளிகளுக்கான பொதுவிதி. ஓயாத அலைகள் மூன்று என்ற




தொடர் நடவடிக்கையில் முதலிரு கட்டங்களும் வன்னியின் தெற்கு மற்றும் மேற்கு முனைகளில் முன்னேறியிருந்த படையினரை விரட்டியடித்து மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டிருந்தது.

மூன்றாம் கட்டம் மூலம் வன்னியின் வடக்கு முனையில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளடக்கிய கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து பரந்தன் படைத்தளமும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட கடற்கரைப் பகுதியிலிருந்து நாலாம் கட்டத்துக்கான பாய்ச்சல் தொடங்க இருந்தது. 26.03.2000 அன்று மாலை வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் போராளிகள் அணிவகுத்து நிற்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஈழப்போராட்டத்தில் பாரிய திருப்புமுனையை ஏற்படுத்திய போரியற் சாதனையொன்றை நிகழ்த்த அவர்கள் ஆயத்தமாகி நின்றார்கள்.

வெற்றிலைக்கேணியிலிருந்து கடல்வழியாக எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கும் தாழையடி உட்பட்ட மிகப்பலமான கடற்கரையை மேவிச்சென்று, குடாரப்புப் பகுதியில் புலிகளின் அணிகள் தரையிறங்க வேண்டும் தரையிறங்கிய அணிகள் ஆனையிறவுத் தளத்துக்கான முக்கிய வினியோகப்பாதையான கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொள்ள வேண்டும் என்பதே திட்டம்.

தரையிறக்கம் செய்யப்பட வேண்டிய படையணி மிகப்பெரியது. ஆயிரத்து இருநூறு வரையான போராளிகளை ஒரேயிரவில் தரையிறக்க வேண்டும். தரையிறக்கத்தைத் தடுக்க எதிரி சகல வழிகளிலும் முயல்வான். கடலில் முழுக் கடற்படைப் பலத்தோடும் எதிரி தாக்குவான். கடற்கரையிலிருந்தும் டாங்கிகள் மூலம் நேரடிச்சூடு நடத்தி கடற்புலிகளின் படகுகளை மூழ்கடிப்பான். விடிந்துவிட்டால் எதிரியின் வான்படையின் அகோரத் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

மிக ஆபத்தான பணிதானென்றாலும் அதைச்செய்தே ஆக வேண்டும். கடற்புலிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்துமுடித்தனர். மாலை புறப்பட்ட படகணிகள் ஆழக்கடல் சென்று இரண்டுமணிநேரப் பயணத்தில் தரையிறங்க வேண்டிய பகுதியை அண்மித்தது. எதிர்பார்த்தது போலவே கடலில் கடும்சண்டை மூண்டது. இரவு 8.30 இற்கு கடலில் சண்டை தொடங்கியது. 16 டோறாப் பீரங்கிப் படகுகள் அடங்கிய தொகுதியுடன் சண்டை நடந்தது.

தாக்குதலணிகளைத் தரையிறக்கவேண்டிய படகுகளுக்கு எதுவித சேதமும் ஏற்படாவண்ணம் கடற்புலிகளின் தாக்குதற் படகுகள் சண்டை செய்தன. கடுமையான சண்டைக்கிடையில் விடிவதற்குள் வெற்றிகரமாக அணிகள் கடற்கரையில் தரையிறக்கப்பட்டன.

முதற்கட்டமாக தரையிறக்க அணிகளைக் காவிச் சென்ற ஏழு விநியோகப் படகுகளும் வெற்றிகரமாக அணிகளைத் தரையிறக்கின. தரையிறங்கிய அணிகள் தொண்டமானாறு நீரேரியைக் கடந்து அதிகாலைக்குள் கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலைகொண்டனர்.

அவர்கள் தரையிறங்கிய நேரத்தில் ஏற்கனவே உட்புகுந்திருந்த கரும்புலிகள் அணி பளையிலிருந்த ஆட்லறித் தளத்தைக் கைப்பற்றி பதினொரு ஆட்லறிகளைச் செயலிழக்கச் செய்திருந்தனர். தரையிறங்கி நிலைகொண்ட அனைத்து அணிகளையும் பிரிகேடியர் பால்ராச் அவர்கள் நேரடியாக களத்தில் நின்று ஒருங்கிணைத்து வழிநடத்தினார். அவருக்குத் துணையாக துணைத் தளபதிகளாக சோதியா படையணித் தளபதி துர்க்கா, மாலதி படையணித் தளபதி விதுஷா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி (பின்னர் பிறிதொரு நேரத்தில் இரணைமடு குளத்தில் குளிக்கும் போது நீரில் மூழ்கி சாவடைந்த) லெப்.கேணல் ராஜசிங்கன், விக்ரர் கவச எதிர்ப்பணிக்குத் தலைமை தாங்கிக் களமிறங்கியிருந்த இளங்கீரன் ஆகியோர் செயலாற்றினர்.

புலிகள் இயக்கம் இப்படியொரு தரையிறக்கத்தைச் செய்யுமென்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். இவ்வகையான முயற்சிகள் புலிகளின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதோடு, தற்கொலைக்கு ஒப்பானது என்றே எல்லோரும் கருதியிருந்தனர். உண்மையில், தற்கொலைக்கு ஒப்பானது தான்.

வன்னித் தளத்தோடு நேரடி வழங்கலற்ற நிலையில் பெருந்தொகைப் போராளிகள் எதிரியின் பகுதிக்குள் சிறிய இடமொன்றில் நிலையெடுத்திருப்பது தற்கொலைக்கு ஒப்பானது தான். தரையிறங்கிய அணிக்கான உணவு விநியோகத்தைக் கூடச் செய்யமுடியாத நிலை. கடலில் மிகக் கடுமையான எதிர்ப்பை எதிரி கொடுத்தான். தரையிறக்கம் தொடர்பான





செய்தியை எதிரி அறிந்தபோது முதலில் திகைத்தாலும், ஆனால் அவ்வளவு பேரையும் கொன்றொழிப்பது என்பதில் எதிரி தெளிவாக இருந்தான். தன்னால் அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழிக்க முடியுமென்று எதிரி நம்பினான்.

புலிகளின் போரிடும் வலுவுள்ள முக்கிய அணிகள் அங்கிருந்ததும், முக்கியமான போர்த் தளபதிகள் அங்கிருந்ததும் அவனுக்கு வெறியேற்றியது. அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழித்தால் புலிகளின் கதை அத்தோடு முடிந்துவிடுமென்று கணித்திருந்தான்.



வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்புவரை அரசபடையினரின் மிகவலுவான படைத்தளப் பகுதியாக இருந்தது. தரையிறக்கத்தின் முன்பே கடல்வழியான தொடர்ச்சியான விநியோகம் சாத்தியப்படாதென்பது தெளிவாக உணரப்பட்டது. ஆகவே தரைவழியாக விநியோகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே நியதி. அதன்படி வெற்றிலைக்கேணியிலிருந்து கடற்கரை வழியாக குடாரப்பு வரை நிலத்தைக் கைப்பற்ற வேண்டும். தரையிறங்கிய அடுத்தநாளே தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதிகளைக் கைப்பற்றி குடாரப்பு வரை தொடர்பை ஏற்படுத்தும் சமர் தொடங்கிவிட்டது.

இத்தாவில் பகுதியில் கண்டிவீதியைக் குறுக்கறுத்திருந்த புலியணிகளை முற்றாக அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எதிரிப்படையோடு கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இத்தாவிலில் நிலைகொண்டிருக்கும் படையணிக்கு விநியோகத்தை ஏற்படுத்த புலியணிகள் கடுமையான சண்டையைச் செய்தன.

இரண்டுநாள் எத்தனிப்பின் முடிவில் தாளையடி உட்பட்ட மிகப் பலமான படைத்தளங்களைக் கைப்பற்றி தரையிறக்க அணிக்குரிய தரைவழியான வழங்கலை உறுதிப்படுத்திக் கொண்டனர் புலிகள். அதுவரை சரியான விநியோகமில்லாது, இருந்தவற்றை மட்டும் பயன்படுத்தி நிலத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்த தரையிறக்க அணி ஆசுவாசப்படுத்திக் கொண்டது.

அணிகள் சீராக்கப்பட்டு (மீளொழுங்கு படுத்தப்பட்டு), தொடர்ந்து சண்டை நடந்தது. கண்டிவீதியைக் குறுக்கறுத்திருக்கும் புலிகளை முற்றாக அழிப்பதற்கு எதிரி தனது முழுவளத்தையும் பயன்படுத்தினான். கவசவாகனங்கள், ஆட்லெறிகள், கனரகப் படைக்கலங்கள் என்று சகலதும் பயன்படுத்தினான். மிகமிக மூர்க்கமாகத் தாக்கினான். ஆனாலும் புலிவீரரின் அஞ்சாத எதிர்ச்சமரில் தோற்றோடினான்.

கவசப்படைக்குரிய பல கவசவாகனங்கள் அழிக்கப்பட்டன் சேதமாக்கப்பட்டன. புலியணி நிலைகொண்டிருந்த பகுதி சிறிய தாகையால் மிகச்செறிவான ஆட்லறிச் சூட்டை நடத்துவது எதிரிக்கு இலகுவாக இருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின் அவ்வழியால் சென்றவர்கள் அப்பகுதியைப் பார்த்திருப்பர். அழிக்கப்பட்ட கவசவாகனங்கள் வீதியோரத்தில் நிற்பதையும் இத்தாவில் பகுதியில் ஒரு தென்னைகூட உயிரோடின்றி வட்டுக்கள் அறுக்கப்பட்டு மொட்டையாக நிற்பதையும் காணலாம். அவ்வளவுக்கு அகோரமான குண்டுத்தாக்குதல் புலியணி மீது நடத்தப்பட்டது. ஆனாலும் அப்பகுதியைத் தொடர்ந்து தக்கவைப்பதில் உறுதியாக இருந்து வெற்றியும் கண்டனர் புலிகள். ஆனையிறவுத் தளம் முற்றாகக் கைப்பற்றப்படும்வரை முப்பத்துநான்கு (34) நாட்கள் இத்தாவில் பகுதியில் நிலைகொண்டு அதைத் தக்கவைத்துக்கொண்டனர் தளபதி பால்ராச்சின் தலைமையிலான புலியணியினர்.

தரையிறங்கிய சிலநாட்களுக்குள் ஆனையிறவைக் கைப்பற்றும் முயற்சியொன்றைப் புலிகள் மேற்கொண்டபோது, அது தோல்வியில் முடிவடைந்தது.

பின்னர் சிலநாட்களில் வேறொரு திட்டத்தைப் போட்டு மிக இலகுவாக, மிகக் குறைந்த இழப்புடன் ஆனையிறவுப் பெருந்தளம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனர் புலிகள். இயக்கச்சியைக் கைப்பற்றியதோடு தானாகவே எதிரிப்படை ஆனையிறவிலிருந்து தப்பியோடத் தொடங்கிவிட்டது.

ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட பின்வாங்கல் போலன்றி, அனைவரும் தங்கள் தங்கள் பாட்டுக்குச் சிதறியோடினர். தாம் பயன்படுத்திய ஆட்லறிகள் முழுவதையும்கூட அழிக்க முடியாத அவசரத்தில் விட்டுட்டு ஓடினர். அவர்களுக்கு இருந்த ஒரே பாதையான ஆனையிறவு - கிளாலி கடற்கரைப் பாதை வழியாக ஓடித்தப்பினர்.

முடிவில் ஆனையிறவு தமிழர்களிடம் வீழ்ந்தது. ஆனையிறவு மட்டுமன்றி மிகப்பெரும் நிலப்பகுதி - கண்டிவீதியில் முகமாலை வரை - கிழக்குக் கடற்கரையாகப் பார்த்தால் சுண்டிக்குளம் முதல் நாகர்கோவில்வரை என்று மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டது. அனைத்துக்கும் அடிநாதமாக இருந்தது அந்தத் தரையிறக்கம்தான்.

சிங்களப்படை அப்படியொரு தரையிறக்கத்தைச் செய்ய கனவிலும் முனையாது. 1996 இல் அரசபடையால் அளம்பிலில் அவ்வாறு செய்யப்பட்ட தரையிறக்கமொன்று பெருத்த தோல்வியில் முடிவடைந்து இராணுவம் மீண்டும் தப்பியோட நேரிட்டது. ஆனால், புலிகள் மிக வெற்றிகரமாக படையணிகளைத் தரையிறக்கி, ஒரு மாதத்துக்கும் மேலாக எதிரியின் மிகக் கடுமையான எதிர்த் தாக்குதலைச் சமாளித்து நிலைகொண்டிருந்ததோடு, இறுதியில் எதிரியை முற்றாக வெற்றிகொண்டனர்.

### கரும்புலி அணியினரால் தகர்க்கப்பட்ட ஆட்டிலெறிகள்

பளை ஆட்டிலெறித் தளத்தைத் தகர்ப்பதற்கு 26.03.2000 அன்று இரவு விடுதலைப் புலிகளின் சிறிய அணியொன்று மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தது. முதல்நாளே கடல்வழியாக எதிரியின் பகுதிக்குள் ஊடுருவிவிட்டிருந்தனர் அவ்வணியிலுள்ளவர்கள். அதுவொரு கரும்புலியணி. ஆண்போராளிகளும் பெண்போராளிகளும் அதிலிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பளையை அண்டிய பகுதியில் இரகசியமாக நகர்ந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது, ஆனையிறவுத் தளம் எதிரியின் வசமிருந்தது. அன்று இரவுதான் வரலாற்றுப் புகழ்மிக்க குடாரப்புத் தரையிறக்கம் நடைபெற இருந்தது. இவர்கள் நகர்ந்துகொண்டிருக்கும் அதேநேரத்தில் கடலில் தரையிறக்க அணிகளைக் காவியபடி கடற்புலிகளின் படகுகள் நகர்ந்துகொண்டிருந்தன. குறிப்பிட்ட கரும்புலி அணிக்குக் கொடுக்கப்பட்ட பணி, பளையிலுள்ள பாரிய ஆட்டிலெறித் தளத்தை அழிப்பதுதான்.

பின்னொரு சமரில் வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் வர்மனின் தலைமையில் அவ்வணி பளை ஆட்டிலெறித் தளத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. முழுவதும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதி. எந்த நேரமும் எதிரியோடு முட்டுப்பட்டு சண்டை மூளக்கூடும். இயன்றவரை அவ்வணி இடையில் வரும் சண்டைகளைத் தவிர்க்கவேண்டும். இலக்குவரை வெற்றிகரமாக, சலனமின்றி, எதிரி அறியாவண்ணம் நகரவேண்டும். அவ்வணியில் மொத்தம் பதினொரு பேர் இருந்தார்கள்.



குறிப்பிட்ட ஆட்டிலெறித்தளம் வரை அணி வெற்றிகரமாக நகர்ந்தது. நீண்டநாட்களாக துல்லியமான வேவு எடுத்திருந்தார்கள். அதுவும் அந்த அணியை வழிநடத்திய வர்மனும் ஏற்கனவே வேவுபார்க்கச் சென்றவர்களுள் ஒருவனாவான். எனவே, அந்த அணியை இலகுவாக இலக்குவரை நகர்த்த அவனால் முடிந்தது.

ஆட்டிலெறித் தளத்தின் சுற்றுக் காவலரண் தொடருக்கு மிக அருகில் வந்துவிட்டார்கள். இனி சண்டையைத் தொடக்கி காவலரணைத் தகர்த்து உள்நுழைய வேண்டியதுதான். இந்த நிலையில் காவலரணிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் அணி




யினர் இருக்கும்போது எதிரியே சண்டையைத் தொடக்கி விடுகிறான்.

தடைக்குள்ளேயே அவ்வணியின் முதலாவது வீரச்சாவு நிகழ்கிறது. கரும்புலி மேஜர் சுதாயினி என்ற வீராங்கனை முதல்வித்தாக விழுந்தாள். சண்டை தொடங்கியதும் கரும்புலியணி உக்கிரமான தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு காவரணைக் கைப்பற்றுகிறது. மின்னல் வேக அதிரடித் தாக்குதலில் எதிரி திகைத்து ஓடத் தொடங்குகிறான். தாக்குதல் நடத்துவது பத்துப்பேர் கொண்ட சிறிய அணியென்பதை அவன் அனுமானிக்கவில்லை. ஆட்டிலெறித் தளத்தைப் பாதுகாத்து நின்ற நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் சண்டை தொடங்கிய மறு நிமிடமே ஓட்டமெடுத்துவிட்டனர். ஆட்டிலெறித் தளம் எஞ்சியிருந்த பத்துப்பேர் கொண்ட அணியிடம் வீழ்ந்தது.

ஆட்டிலெறிகள் முழுமையாகக் கைப்பற்றப்பட்டன. மொத்தம் பதினொரு ஆட்டிலெறிகள் இருந்தன. ஓடிய எதிரி பலத்தைத் திரட்டிக்கொண்டு மீண்டும் தளத்தைக் கைப்பற்ற வருவான். இருப்பதோ பத்துப்பேர் மட்டுமே. இது தாக்கியழிப்பதற்கான அணி மட்டுமே. மீண்டும் கைப்பற்றவரும் எதிரியோடு சண்டை பிடிக்க முடியாது. ஆனாலும், போதுமான நேரம் இருந்தது. எதிரி உடனடியாக தளத்தைக் கைப்பற்ற முனையவில்லை. குறிப்பிட்டளவு நேரம் தளத்தைக் கட்டுப்பாட்டுள் வைத்திருந்து, பின்னர் தலைமைப்பீட அறிவுறுத்தலின்படி ஆட்டிலெறிகளைச் செயலிழக்கச் செய்யத் தொடங்கினார்கள்.

இந்த நடவடிக்கையில் கரும்புலி மேஜர் தனுசன் வீரச்சாவடைந்தான். பதினொரு ஆட்டிலெறிகளையும் செயலிழக்கச் செய்துவிட்டு எஞ்சிய ஒன்பதுபேரும் பாதுகாப்பாகத் திரும்பினர். ஆட்டிலெறிகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது குடாரப்புவில் தரையிறக்கம் நிகழ்ந்தது.

அவ் ஆட்டிலெறிகள் முற்றாக அழிக்கப்பட்டன. அதன்மூலம், தரையிறங்கிய அணியினருக்கான உடனடி எதிர்ப்பை இல்லாமல் செய்தது. தளத்தை அழித்த கரும்புலியணி மீண்டும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளால் இரகசியமாக நகர்ந்து விடிவதற்குள் பாதுகாப்பாகத் தளம் திரும்பினர்.

பளை ஆட்டிலெறித் தள அழிப்பு, ஆனையிறவு மீட்புப் போரில் மிகப்பெரிய திருப்புமுனை. எதிரிக்கு மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணியது. இந்த அழிப்போடு தரையிறக்கமும் ஒன்றாக நிகழ்ந்ததால் எதிரி மிகவும் குழம்பிப்போனதோடு, உடனடியான எதிர்வினையை அவனால் செய்யமுடியவில்லை. தன்னை மீள ஒழுங்கமைத்து தாக்குதல் தொடங்க குறிப்பிட்ட அவகாசம் தேவைப்பட்டது.

இந்த தாக்குதலின் பின்னணி குடாரப்புத் தரையிறக்கத்துக் கானது

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 26, 2000 ஆம் ஆண்டு மாலை நேரம் குடாரப்பு பகுதியினை இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் அடைகின்றனர் தமிழீழ விடுதலை புலிகளின் போராளிகள்.

**குடாரப்புத் தரையிறக்க மோதல்**

குடாரப்பு பகுதியில் மாலை 8:30 மணியளவில் தரையிறங்கும் வேளை ஏற்பட்ட மோதலில் 16 டோறாப் பீரங்கிப் படகுகள்



கொண்ட சிறீலங்கா இராணுவத்தினருடன் கடற்புலிகளின் போர்க்கலங்கள் மோதின. தரையிறங்கு கலங்களிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் சேதம் எதுவும் ஏற்படாது தரையிறக்கப்பட்டனர்.

**கண்டி வீதியில் நிலை கொள்ளல்**

குடாரப்பு பகுதியில் தரையிறங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் தொண்டமனாறு கடல் நீரேரி ஊடே இத்தாவில் பகுதியில் உள்ள கண்டி வீதியில் நிலை கொண்டனர். இக் கண்டி வீதியினூடாகவே ஆனையிறவுப் படைத்தளத்திற்கான பிரதான விநியோகங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**பளை ஆட்டிலெறித் தள உள்நுழைவு**

கண்டி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் நிலை கொண்டிருக்கும் வேளை பளை ஆட்டிலெறித் தளத்தில் உட்புகுந்த கரும்புலி அணியினர் அங்கு அமைத்திருந்த 11 ஆட்டிலெறிகளைச் செயல் இழக்கச் செய்தனர்.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் வழங்கல் தொடர்பு**

வெற்றிலைக்கேணி முதல் குடாரப்பு வரையான 12 கிலோ மீற்றர் தூரம் வரையிலான சிறீலங்கா இராணுவத்தினரின் படை முகாம்கள் அழிக்கப்பட்டு அங்குள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் ஆனையிறவின் பல பாகங்களிலும் உள்ள தமது போராளிகளிடையே வழங்கல் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்தனர்.

**சிறீலங்கா இராணுவத்தின் தீவிரப்படுத்தப்பட்ட தாக்குதல்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளை எதிர்நோக்கிய தீவிர தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. டாங்கிகள், கவச வாகனங்கள், எறிகணைகள் எனப் பல்வேறு வகையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்களிற்கு எதிர்த் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

**பால்ராச் உயிருடன் பிடிபட்ட செய்தி**

இத்தாவில் பகுதியில் நிலைகொண்டிருந்த புலிகளின் அணியினை ஒருங்கிணைத்த தளபதி பால்ராச் உயிருடன் பிடிபட்ட செய்தியினை தம் களமுனைத் தளபதிகளிடமிருந்து கொழும்புப் படைத்தலைமை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக செய்திகள் வந்தது குறிப்பிடத்தக்கது.

**உடுத்துறை வழியான தரைவழி விநியோகம்**

வத்திராயன், தாளையடி, மருதங்கேணி முகாம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டு உடுத்துறை வழியான தரைவழி விநியோகம் மார்ச் 28 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது. இத் தரைவழி விநியோகத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் எல்லைப்படை வீரர்களும் பங்காற்றினர். இத்தாவிலில் நிலைகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க எட்டிற்கும் மேற்பட்ட தடவைகள் சிறீலங்கா இராணுவத்தினரால் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாவிலில் தரையிறங்கி நிலைகொண்ட புலிகள் அணியினரை முறியடிக்க முடியாத நிலைக்கு சிறீலங்காப் படையினர் தள்ளப்பட்டனர். இதனால், ஆனையிறவுப் படைத்தளத்தில் 53 ஆம் படையணியின் தளபதியாக விளங்கிய காமினி ஹெட்டியாராச்சி தனது பதவியிலிருந்து விலக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

**ஆனையிறவுப் படைத்தளம் மீதான முற்றுகை**

சிறீலங்காப் படைத் தரப்பினரின் விநியோகங்களைத் தடுத்தவாறே ஆனையிறவுப் படைத் தளத்தினை முற்றுகையிட்டனர் தமிழீழ விடுதலைப் புலிகள். குடாரப்புத் தரையிறக்கத் தாக்குதல் தொடங்கிய நாளில் இருந்து 34 ஆம் நாட்களின் பின்னர் ஊடறுப்புத் தாக்குதல் யுக்திகளால் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது.

குறிப்பு:- இது, தமிழீழ விடுதலைப் புலிகளின் சமராய்வுப் பிரிவால் தொகுக்கப்பட்ட பதிவு ஆகும்.




# கிளாலிப் படுகொலைகள் 02 ஜனவரி 1993 தொடக்கம் 29 யூலை 1993 வரை

யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப் பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற் பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப் பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப் பாதையே அருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.

இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு சங்குப்பிட் டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநி யோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர் திகள் பலமான வாகனங்கள் என்பன நகர்த் தப்பட்டன.




மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991 ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991 ஆம் ஆண்டு "ஒப்பரேசன் பலவேகயா-01" இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்டது.




குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட் டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக் கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதை யாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூ டாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங் கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங் களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள்.

"பலவேகய 02" இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற் றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ் குடாநாட் டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலை யில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற் கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியி னூடான கடற் போக்குவரத்தினை மேற் கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப் பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலை மன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீருடப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங் களின் மத்தியில் ஏறக்குறைய நான்கு மணித் தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலு கொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக் குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக் கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக் கமும் அமைத்திருந்த ஆனையிறவு இராணு வத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு



உதவியது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந்திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக்கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட முபப்த்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந்தாடகள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங்கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.




1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்த போது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற்றிஜம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவுகளைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பலதரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்றொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீறஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக் இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்றொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45
17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தர்மராஜா பகீரதன் - -
24. தம்பிஜயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்றொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்றொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிர்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்றொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப்யேசுராஜா யேசுநாயகம் தனிதாஸ் கடற்றொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்றொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்றொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்றொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்றொழில் 50
42. ஞானசூரியர் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்றொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியர் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூர்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கநத் சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமார் - 20
08. வி.,ன்பநாதன் கடற் றொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



30-07-1993

கிளாலிக் கடலில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களில் பெண்மணி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும், வயோதிபரின் சடலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நால்வரின் சடலங்கள் கரையில் வைக்கப்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சுன்னாகச் சந்தைப் படுகொலை – 28 மார்ச் 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன் று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீயூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதியூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன் துறை நோக்கிச் சென்ற இராணுவத ்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொதுமக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னஉ விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுபப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42. நெசவு
06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# நாச்சிக்குடா படுகொலை – 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக நாச்ச்சிக்குடாவைச் சேர்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,

“என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும் போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ-இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன் போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம்பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.

திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்றொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா இரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்றொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்றொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபோன்ஸ் அமலோறப் வராணி வீட்டுபப்பணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்றொழில் 68
17. மேரி அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16
25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராசு மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம் மேரி - -
36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. இராஜ்குமார் மாணவன் 14
57. ரசுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு – 26 மார்ச் 1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக் கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக்கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்த டையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவஉகள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன. அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில், “எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# உயர் பாதுகாப்பு வலயத்தில் 137 பேர் படுகொலை - 15.16. 17.03.2009

வன்னியின் “பாதுகாப்பான வலயத்திற்குள்” சிறீலங்கா இரா ணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் சனிக்கிழமை இரவு முதல் 137 பேர் இறந்துள்ளனர் மற்றும் 200 க்கும் மேற் பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் குறைந்தது 18 பேர் மக்கள் வலையத்திற்குல் சிறீலங்கா இராணுவத்தின் நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையில், செவ்வாய்க்கிழமை “பாதுகாப்பான வலயத்தின்” விளிம்புகளில் இலங்கை விமானப்படை வீசிய சுமார் 50 எண்ணிக்கையி லான பாரிய பதுங்கு குழி குண்டுகள் பொதுமக்கள் மத்தியில் அழிவை ஏற்படுத்தியது.

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 58 பொதுமக்கள் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டனர். நீண்ட தூரம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 12 பொதுமக்கள் பலியாகினர். திங்கட்கிழமை, 29 பேர் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர் மற்றும் 6 பேர் சிறீ லங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். திங்கள்கிழமை 73 பொதுமக்கள் காயமடைந்தனர். செவ் வாய்க்கிழமை காலை ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மாத்தளன் மருத்துவமனைக்கு அருகில் திங்கட்கிழமை சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் ICRC ஊழியர் கே. புலேந்திரராசா காயமடைந்தார் மற்றும் காயமடைந் தவர்களை மாற்றிய ICRC கப்பலில் ஏற்றப்பட்டார்.

இதேவேளை, 15 வயதுக்குட்பட்ட 12 சிறுவர்கள் உட்பட 52 பொதுமக்கள் திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாத் தலான் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஐந்து பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.











**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# பச்சைப்புல்மோட்டை, வலைஞர்மடப் பகுதிப் படுகொலை 17.03.2009

17.03.2009 அன்று, சிறீலங்கா விமானப்படை தாக்குதல்கள் மற்றும் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 84 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பச்சைப்புல்மோட்டை, வலைஞர்டம் பகுதிகளை குறிவைத்து சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு மற்றும் சிறீலங்கா சிங்கள இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 52 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயம் அடைந்தனர் என்று புலிகளின் குரலில் ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புலிகள் (VoT) மாலை ஒளிபரப்பு. முன்னதாக, காலையில், "பாதுகாப்பான வலயத்தின்" பிற பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப் பட்டதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையால் 12 முறைக்கு மேல் குண்டுகள் வீசப்பட்டன. 1,000 கிலோ எடை கொண்ட கனரக வெடிகுண்டுகள் "பாதுகாப்பு மண்டலம்" பகுதிகளிலும் அதன் எல்லைப் பகுதிகளிலும் வீசப்பட்டன.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 19.20.21.- 03.2009

19. 20. 21.03.2009, மூன்று நாளில் முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 102 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவில் முற்றுகையிடப்பட்ட பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல்களில் 46 பொது மக்கள் வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டனர். வெள்ளியன்று மாத்தளனில் இடம்பெயர்ந்தவர்களின் 6 தார்பாலின் தங்குமிடங்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் எறிகணைகள் தாக்கியதில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில், ICRC காயமடைந்த பொதுமக்களை ஏற்றிச் சென்ற கடலோர இடத்திற்கு 300 மீட்டர் தொலைவில் காலை 11:00 மணியளவில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வியாழகிழமை அன்று, 11 குழந்தைகள் உட்பட 39 பொது மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் புதன்கிழமை பாதுகாப்பு வலயத்திற்குள் குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

வெள்ளிக்கிழமை அன்று, பொக்கானையில் மதியம் 1.00 மணியளவில் இடம்பெயர்ந்தோர் குடிசை மீது ஒரே ஷெல் தாக்கியதில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



எஞ்சிய உயிரிழப்புகள் முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய இடங்களில் பதிவாகியுள்ளன. பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பொக்கனை மற்றும் மாத்தளன் பகுதிகளில் வியாழன் இரவு 11.00 மணிமுதல் கடும் எறிகணை வீச்சுக்கள் பதிவாகியுள்ளன.





# சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதல்களில் வன்னி 'பாதுகாப்பு வலயத்திற்குள்' 42 பொதுமக்கள் படுகொலை 22.03.2009

சிறீலங்கா சிங்கள இராணுவம் சனிக்கிழமையன்று "பாதுகாப்பு வலயத்திற்குள்" பீரங்கி குண்டுத்தாக்குதலில், 42 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் GS (கிராம அதிகாரி ஒருவர் உட்பட சுமார் 80 பொதுமக்கள் காயமடைந்தனர்). இரணைப்பாலையில் தேங்காய் சேகரிக்கச் சென்ற குறைந்தது 7 பொதுமக்கள் விமானப்படையின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 128 பொதுமக்கள் படுகொலை - 23.24.2009

இலங்கை இராணுவத்தின் குறுகிய தூர மோட்டார் எறிகணைத் தாக்குதல்கள், ராக்கெட் உந்து குண்டுகள் (ஆர்பிஜி) தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 19 குழந்தைகள் உட்பட 96 பொதுமக்கள் திங்கட்கிழமை "பாதுகாப்பு வலயத்திற்குள்" கொல்லப்பட்டனர். உள்ளூர் உதவி ஊழியர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் படி, ஞாயிற்றுக்கிழமை 7 குழந்தைகள் உட்பட 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். திங்கட்கிழமை சிறீலங்கா இராணுவம் மோட்டார் துப்பாக்கிச் சூடு, ஆர்பிஜி தாக்குதல்களை முடுக்கிவிட்டு, "பாதுகாப்பு வலயத்திற்குள்" உள்ள புதுமாத்தளன் பகுதிக்குள் குளத்தின் மறுபுறத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சுமார் 160 பொதுமக்கள் காயமடைந்தனர். பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டு பகல் நேரத்தில் பொதுமக்கள் மீதான அதிகரித்த மற்றும் திட்டமிட்ட தாக்குதல்கள், படுகொலை இடம்பெற்றது.

புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்தியசாலைக்கு அருகில் மாலை 4 மணியளவில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். திங்கட்கிழமை. மருத்துவமனையின் பின்புறம் 400 மீட்டர் தொலைவில் குண்டுகள் விழுந்து வெடித்தது.

பொக்கனைய் பகுதியில் வீசிய 3 எறிகணைகள் 16 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மாத்தளன் பகுதியில் அதி உயர் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

# சிறீலங்கா இராணுவம் மற்றும் விமானப் படையினரின் தாக்குதல்களில் 'பாதுகாப்பு வலயத்திற்குள்' 62 பொதுமக்கள் படுகொலை 24.03.2009

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12:30 மணி முதல் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதிகளுக்குள் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இரா ணுவம் முடுக்கிவிட்டுள்ளது, 62 பொதுமக்கள் கொல்லப்பட்டது மற்றும் பலருக்கு காயங்களை ஏற்படுத்தியது. பாதுகாப்பு வலயத் தின் மீது பீரங்கி மற்றும் மோட்டார் குண்டுகள் இரவில் தாக் கியதில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வலைஞர்மடத் திற்கும் அம்பலவன்பொக்கனைக்கும் இடையில் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் வெடித்ததில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. பாதுகாப்பு வலயத்திற்குள்ளான பச்சைப் - புல்மோட்டைச் சந்தியைச் சுற்றியுள்ள குடியிருப் புகளில் 12 வான்வழித் தாக்குதல்களுக்கு மேலதிகமாக செவ்வாய்க் கிழமை பகல் நேரத்தில் பாதுகாப்பு வலயத்தின் மீது RPG குண்டுகள், குறுகிய தூர மோட்டார்கள் மற்றும் நீண்ட தூர துப் பாக்கிச் சூடுகளை சிறீலங்கா இராணுவத்தினர் நிலை நிறுத்தியது. குறைந்த உயரத்தில் பறந்த சிறீலங்கா விமானப் படை குண்டுவீச்சாளர்களால் 70 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன, குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

பொக்கனை, அம்பலவன்பொக்கனை, முள்ளிவாய்க்கால், மாத்தளன் மற்றும் வலைஞர்மடம் ஆகியவற்றை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தினரால் நடத்தப்பட்டது.

கடந்த 3 நாட்களுக்குள் 250க்கும் மேற்பட்ட காயமடைந்த பொது மக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் 21 பேர் மருத்துவமனையில் உயி ரிழந்தனர்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 131 பொதுமக்கள் படுகொலை – 26.03.2009

பல்வேறு உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிட மிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, வியாழக்கிழமை முழு வதும் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை இராணுவம் மற் றும் சிறீலங்கா விமானப்படை நடாத்திய பல்வேறு வகையான தாக்குதல்களில் 32 குழந்தைகள் உட்பட 131 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

காயமடைந்த 252 பேரில் 49 பேர் குழந் தைகள். புதமாத் தலனிலிருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கி.மீ தூரத்தை இலக்காகக் கொண்டு சிறீலங்கா சிங்கள இராணுவம் ஆர்.பி.ஜி எறிகணைகளை, நீண்ட தூர துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் ஷெல்களை வீசியது.

மாத்தளனில் இராணுவத்தினரின் ஆர்பிஜி தாக்குதலில் 10 வயதுக்குட்பட்ட 4 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர். புதன்கிழமை துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் தாக்குதல்களில் 31 பயணிகள் கொல்லப் பட்டனர். இதற்கிடையில், விமானப்படையின் குண்டுவெடிப்பில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

25 மார்ச் 2009 அன்று வன்னியில் 185 பொதுமக்கள காய மடைந்தவர்கள் மாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிற்பகல் 3:00 மணியளவில் பொக்கனைக் பாதுகாப்பு வலயத் திற்குள் பல்குழல் ராக்கெட் தாக்குதல்கள் பதிவாகியுள்ளது. புதன். பொக்கனைக் கரையோரப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களின் குடிசை ஒன்றின் மீது MBRL ரொக்கட் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 16 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். காயமடைந்த 27 பேரில் 9 பேர் குழந்தைகள். இறந் தவர்களில் பலர் MBRL தாக்குதலின் ஏற்பட்ட தீக்காயங்களால் இறந்தனர். MBRL மற்றும் பீரங்கித் தாக்குதலில் பொக்கனைப் பகுதியில் 27 சிறுவர்கள் உட்பட 11 குழந்தைகள் உட்பட 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 72 பேர் காய மடைந் தனர். MBRL தாக்குதல்களில் பல தார்பாலின் தங்கு மிடங்கள் மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பொக்கனையில் 3 கடைகள் நாசமாக்கப்பட்டன.

மாத்தளனில் இருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கிலோ மீற்றர் நீளமான பாதையை நோக்கி சிறீலங்கா இராணுவம் தடாகத்தின் மறுபுறத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 9 பயணிகள் உட்பட 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதிகாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அதே பகுதியில் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு 5 முதல் 10 நிமிடங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மோட்டார்



ஷெல் அப்பகுதியைத் தாக்குகிறது, இதனால் 23 பேர் இறந் தனர். RPG ராக்கெட்டுகள், துப்பாக்கி மற்றும் மோட்டார் குண் டுகளை பயன்படுத்தி சாலை மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் சுற்றுப்புற தார்பாலின் குடிசைகள் மீது தாக்குதல் நடத்த சிறீலங்கா இராணுவத்தினர் சாலை தொடர்ந்து குறிவைக்கப் பட்டதால் காயமடைந்தவர்களில் பலர் மருத்துவ போக்குவரத்து இல்லாததால் காயங்களுக்கு ஆளானார்கள்.

TRO மற்றும் தமிழீழ காவல்துறை அதிகாரிகள் காயமடைந் தவர்களின் உயிரைக் காப்பாற்ற போராடினர்.

இதற்கிடையில், சிறீலங்கா விமானப்படைகளின் குண்டு வீச்சுகள் “பாதுகாப்பு மண்டலத்திற்குள்“ குறைந்தது 6 முறை நடாத்தினர். இரண்டு விமானப்படை குண்டுவீச்சாளர்கள் பச்சைப்-புல்மோடை மற்றும் முள்ளிவாய்க்கால் மீது தாக்குதல் நடத்தி, சுமார் 29 குண்டுகளை வீசினர், 6 குழந்தைகள், 12 பெண்கள் மற்றும் 3 முதியவர்கள் உட்பட 27 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 37 தார்பாய் தங்குமிடங்கள் அழிக்கப்பட்டன.

பாதுகாப்பு வலயத்திற்குள் புதனன்று சிறீலங்கா இராணுவம் மற்றும் சிறீலங்கா விமானப்படையினர் நடத்திய தாக்குதல் களில் சொத்துக்களுடன் கூடிய 85 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன.





# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 26.03.2009



# புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதல்களில் ஐந்து பொதுமக்கள் படுகொலை - 26.03.2009

வியாழன் அதிகாலை 4:00 மணி முதல் 4:30 மணி வரை சிறீலங்கா இராணுவம் புதுமத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனை மீது ராக்கெட் உந்து குண்டுகளால் (RPG) தாக்குதல் நடத்தியது, தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து நோயாளிகள் கொல்லப்பட்டனர். இரண்டு மருத்துவ ஊழியர்கள் உட்பட 11 பேர் காயமடைந்தனர். ஏற்கனவே ஷெல் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஆறு நோயாளிகளும், நோயாளிகளின் உறவினர்கள் 3 பேரும் ஆர்பிஜி தாக்குதலில் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலில் சமீபத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட மருந்துகளின் ஒரு பகுதியும் அழிக்கப்பட்டது.





# பாதுகாப்பு வலயத்திற்குள் 26.27.28.03.2009 அன்று 179 பொதுமக்கள் படுகொலை

26.27.28.03.2009, வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய மூன்று நாட்களுக்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 179 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 76 பேர் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 16 கர்ப்பிணித் தாய்மார்களும் அடங்குவர். 15 வயதுக்குட்பட்ட 109க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தினால் வீசப்பட்ட ஆயிரக்கணக்கான குண்டுகளில் சுமார் 45% பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியுள்ளன. இதற்கிடையில், காயமடைந்த சிவிலியனை ஏற்றிச் செல்வதற்காக சனிக்கிழமையன்று கப்பலில் வந்த ICRC இன் வெளிநாட்டு ஊழியர் ஒருவர், கப்பலின் ஜன்னலை சேதப்படுத்தியதால், நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கப்பல் மோதியதில், சிறிது நேரம் தப்பினார். வெள்ளிக்கிழமை, உள்ளூர் ICRC ஊழியர் பி. சதீஸ்குமார், சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

மற்றொரு செஞ்சிலுவை சங்க (ICRC அல்லது SLRC) ஊழியரின் மனைவி வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் காயமடைந்த நோயாளிகளை மாத்தளன் மருத்துவமனையில் இருந்து மாற்றுவதற்காக வந்த ICRC கப்பல் சுமார் 950 பேரை ஏற்றிச் செல்ல முடிந்தது.

தற்காலிக மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து காயமடைந்த நோயாளிகள் வியாழன் காலை சிறீலங்கா இராணுவத்தினரினால் ஏவப்பட்ட ராக்கெட் உந்து குண்டுகள் மருத்துவமனையைத் தாக்கியதில் கொல்லப்பட்டனர்.

பாசமலர் என்ற 25 வயது கர்ப்பிணித் தாயின் அடிவயிற்றில் காயம் ஏற்பட்டதில் 7 மாதக் கரு வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டது.

வியாழன் அன்று 59 பொதுமக்களும், வெள்ளிக்கிழமை 21 குழந்தைகள் உட்பட 63 பேரும், சனிக்கிழமை 57 பேரும் கொல்லப்பட்டனர். குறைந்தது 15 வயதுக்குட்பட்ட 109 குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் 31 பேர் 10 வயதுக்குட் பட்டவர்கள்.

மருத்துவ ஆதாரங்களின்படி, கொல்லப்பட்ட 16 கர்ப்பிணித் தாய்மார்களில் 9 பேர் கர்ப்பத்தின் இறுதிக் கட்டத்தில் இருந்தனர். பொக்கனை மற்றும் மாத்தளன் பிரதேசங்களிலேயே அதிகளவான கர்ப்பிணித் தாய்மார்களின் மரணங்கள் பதிவாகியுள்ளன.

வியாழன் இரவு வலைஞர்மடம் மற்றும் பொக்கனைக்கு இடையில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் தங்குமிடங்களை குறிவைத்து, வெள்ளிக்கிழமை பகல் நேரத்தில் மாத்தளன் மற்றும் பொக்கனைக்கு இடையில், சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஐசிஆர்சி கப்பல் மூலம் சனிக்கிழமை 498 பேரும், வியாழன் அன்று 443 பேரும் மருத்துவமனையில் இருந்து மாற்றப்பட்டனர்.

பொக்கனைக்கும் மாத்தளனுக்கும் இடையில் உள்ள கிணற்றில் இரண்டு எறிகணைகள் தாக்கியதில் உடல்களை கழுவிக் கொண்டிருந்த 10 இடம்பெயர்ந்த மக்கள் உயிரிழந்துள்ளனர்.



நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு முழு குடும்பமும் வியாழன் அன்று ஏரிக்கரை முழுவதும் சிறீலங்கா இராணுவ நிலைகளில் இருந்து வந்த ராக்கெட் தாக்குதலில் அழிக்கப்பட்டது.

பொக்கனை - மாத்தளன் எல்லையை குறிவைத்து நடாத்திய தாக்குதலில் வலைஞர்மடத்தில் அஜந்தா அபராஜிதன் என்ற பெண் கிராம (ஜிஎஸ்) அதிகாரி வியாழக்கிழமை கொல்லப்பட்டார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை விமானப்படையினரால் வான் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.







# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 88 பொதுமக்கள் படுகொலை - 31.03.2009

திங்களன்று இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 70 பொதுமக்கள் உயிர்கள் பலியாகியுள்ளன, மேலும் IDP குடியிருப்புகளுடன் தற்காலிக மருத்துவமனையை இணைக்கும் சாலையில் 18 பொதுமக்களைக் பலி. கொல்லப்பட்டவர்களில் 21 பேர் மற்றும் காயமடைந்த 156 பொதுமக்களில் 31 பேர் குழந்தைகள். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 63 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன. சாலை முழுவதும் 50 கலிபர் இயந்திர துப்பாக்கியால் சுடப்பட்டதால், காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பொதுமக்கள் சிரமப்பட்டனர். கரையோரப் புள்ளியான திடலில் இருந்து ICRC கப்பலுக்கு நோயாளிகளை ஏற்றிச் செல்ல படகுகளை ஏற்பாடு செய்யும் மீன்பிடி சங்கத்தின் தொழிலாளி உட்பட நான்கு பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கான ICRC கப்பல் கடந்த முறை துப்பாக்கிச் சூட்டில் சிக்கியதால் கரையை நெருங்கவில்லை. நோயாளிகள் மிகவும் கடினமான சூழ்நிலையில் படகுகள் மூலம் கப்பலுக்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. கப்பலில் வந்த ஐ.சி.ஆர்.சி அதிகாரிகள் தாக்குதல்கள் காரணமாக கரையை அடைய முடியவில்லை.

உயிரிழந்தவர்களில் 59 பேர் இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால், வலியஞர்மடம் ஆகிய மூன்று பிரதேசங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைஞர்மடம் - இரட்டைவாய்க்கால் இடையே எறிகணை ஒன்று சாலையில் மோதியதில் 9 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஷெல் தாக்குதல் நாள் முழுவதும் தொடர்ந்தது. சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் சாலையில் இருந்த பல குடிசைகள் அழிக்கப்பட்டன.

சாலையோரம் இருந்த 6 சிறு கடைகள் சேதமடைந்தன. கொல்லப்பட்டவர்களில் 3 பேர் இந்தக் கடைகளின் உரிமையாளர்கள். சாலையில் கொல்லப்பட்ட 18 பொதுமக்களில் ஏழு பேர் அடை யாளம் காணப்படவில்லை. அடையாளம் தெரியாத சடலங்கள் தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் (டிஆர்ஓ) தொண்டர்களால் அடையாளம் காண இடமாற்றம் செய்யப்பட்டன.



வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட 17 பெண்கள், 9 குழந்தைகள், 1 குழந்தை மற்றும் 8 முதியவர்கள் உட்பட 39 பேர் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டனர்.

# சிறீலங்கா இராணுவத்தின் கொத்துக் குண்டுத் தாக்குதல்களில் 45 பொதுமக்கள் படுகொலை – 31.03.2009

இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் 43 பொது மக்கள் செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும் கொல்லப்பட்டனர். அம்பலவன்பொக்கனை மற்றும் வலைஞர்மடம் பிரதேசத்தில் இன்று காலை 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 3 பேர் குழந்தைகள். துப்பாக்கிச் சூட்டில் 4 பொதுமக்கள் கொல்லப் பட்டனர். பாதுகாப்பு வலயத்தில் உள்ள மருத்துவ மற்றும் உதவி பணியாளர்களின் கூற்றுப்படி, நாள் முழுவதும் 120 பொதுமக்கள் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை முழுவதும் பாதுகாப்பு வலயத்திற்குள் வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் மேலும் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

98 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் இருந்து மதியம் 12.30 மணியளவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளில் குறைந்தது 63 பேர் வலைஞர்மடத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் 22 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.























# ‘பாதுகாப்பு வலயத்திற்குள்’ 53 பொதுமக்கள் படுகொலை 30.03.2009

சிறீலங்கா இராணுவம் ஞாயிறு முழுவதும் தொடர்ந்து பீரங்கி, மோட்டார் மற்றும் நீண்ட தூர துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 53 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 119 பேர் காயமடைந்தனர். மாத்தளனில் குறைந்தது 17 பொது மக்களும், பொக்கனையில் 18 பேரும், வலைஞர்மடத்தில் 15 பேரும் மற்றும் வலைஞர்மடத்தில் 15 பேரும் கொல்லப்பட்டனர். பச்சைப் புல்மோட்டையில் 3பேரும். இதற்கிடையில், 298 குடம் பங்களைச் சேர்ந்த 275 குழந்தைகள் உட்பட சுமார் 1,192 பொதுமக்கள் கடந்த 5 நாட்களுக்குள் தங்கள் தங்குமிடங்களை இழந்துள்ளனர், ஏனெனில் அவர்களின் தார்பாய் குடிசைகள் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் முற்றாக அழிக் கப்பட்டன.


JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free! ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
When you order more than $1000
Let us help with...
• Replacement (Door & Windows)
• Custom Door & Windows
• Front Door & Patio Door
• Garden Door
• Door & Windows Re-Caulking (Important)
• Painting Doors & Windows
• Basement Separate Entrance Door
• Home Painting
• Spotlights installation
• California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாணத்தின் நிலவியல், நில அமைப்பியல், ஆதிக் குடியிருப்புகள்

யாழ்ப்பாணத்தின் நிலவியல், நில அமைப்பியல், ஆதிக் குடியிருப்புகள்; பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்; சிவ தியாகராஜா

## நிலவியல்

பண்டைய யாழ்ப்பாணம் நாகநாடு (மணிமேகலை), நாகதீவு (வல்லிபுரப் பொற்சாசனம்), நாகதீப (மகாவம்சம்), நாகதீபோய் (தொலமி) ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. பண்டைய யாழ்ப்பாணத்தில் நாகர்கள் வாழ்ந்தமையால் இப் பெயர்கள் யாவும் 'நாக' என ஆரம்பிக்கின்றன. அன்றைய நாகநாடு யாழ்ப்பாணக் குடாநாடு, அதற்கு மேற்கேயுள்ள சிறு தீவுகள், வடக்கிலுள்ள இலங்கையின் தாய் நிலத்தின் மூன்றில் ஒரு பகுதி ஆகிய நிலங்களைக் கொண்டிருந்தது.




**நாகநாட்டின் தென் எல்லையைக் காட்டும் நிலப்படம்**

Image Source - Map after Parker, H. 1909: p. 14: Geiger, W. 1960: p. 108

மகாவில்லாச்சியின் (மதவாச்சி) மேற்குக் கரையிலிருந்த அரிப்பிலிருந்து மகாவில்லாச்சியூடாக நாகபொக்கணைவரையும் ஒரு கோடு வரைந்து, அக்கோட்டை திரிகூடத்திற்குத் (திருகோணமலை) தெற்கே மகாவலி கங்கையின் தெற்குக்கிளை கடலில் சங்கமிக்கும் துறைவரை வரைந்தால் அக்கோட்டிற்கு வடக்கேயுள்ள பகுதி அனைத்தும் நாகதீப நாட்டின் நிலப்பகுதி ஆகும் (Parker, H. 1909: 14; Geiger, W. 1960: 108). இந் நிலப்பகுதி சூளவம்சம் போன்ற நூல்களில் உத்தரதேச (வட நாடு) எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில காலங்களில் நாகதீபத்தின் எல்லைக் கோட்டிற்கு வெளியே மேற்குக் கடற்கரையிலிருந்த குதிரைமலை, சிலாபம் ஆகிய பகுதிகள் வடஇலங்கை நாகர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கின்றன.

இடைக்காலத்தில் இன்றைய யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் தாய் நிலத்திலிருந்து கடலால் பிரிந்த வேறான தீவாக இருந்து வந்தது. காலப்போக்கில் அதனிடையே மிகச் சமீபமாக இருந்த சுண்டிக்குளத்தில் படிந்த மணற்செறிவினால் இரு தீவுகளும் ஒன்றாகி பெரிய இலங்கைத் தீவாக உருவெடுத்தன.

யாழ்ப்பாணக் குடாநாடு இன்றைய இலங்கைத் தீவின் வடக்கில் அமைந்துள்ளது. இது தீர்க்கரேகையின் (Longitude) 79°54′-80°2′e கோட்டில், அட்சரேகை (Latitude) 9°30′-9°50n கோட்டில் 1062 சதுர கி.மீ. பரப்பைக் கொண்டு அமைந்திருக்கிறது. இக் குடாநாடு அதன் அகன்ற பகுதியில் 65 கி.மீ. நீளமும், 23 முதல் 6.5 கி.மீ. அகலமும் கொண்டது. இக்குடாவின் வடக்கிலும் தெற்கிலும் பாக்கு நீரிணையும், கிழக்கே வங்காள விரிகுடாவின் தென்கடலும், தெற்கே யாழ்ப்பாணக் கடல்நீரேரியும் (Jaffna Lagoon) உள்ளன. இக்குடாநாட்டின் மேற்கே பாக்கு நீரிணையில் சிறிய தீவுகளான காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு, நெடுந்தீவு ஆகியன அமைந்திருக்கின்றன.

தொல்லியல் ஆய்வுகள் தரும் தகவல்களின்படி நாகநாட்டின் உத்தரதேசப் பகுதி தென் ஆசியாவிற்கு நவீன மனித இனங்கள் வர ஆரம்பித்த காலத்திலிருந்தே அவர்களின் குடியேற்றங்களைக் கொண்டிருக்கிறது. பண்டைய யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொ.யு.மு.1300 ஆண்டுக் காலத்திலிருந்து பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களின் குடியேற்றங்கள் காணப்படுகின்றன. இக்குடிமக்கள் விட்டுச்சென்ற பாவனைப் பொருட்களின் தொல்லியல் எச்சங்களும், அவற்றின் காலக்கணிப்புகளும் இப்பிரதேசங்களில் அவர்களின் பரந்த குடியேற்றங்களுக்குச் சான்றாக அமைகின்றன.

பாக்கு நீரிணைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் நடுவே தென் கிழக்காசிய வர்த்தகக் கடற்பாதையான தீர்க்கரேகை பத்தாவது பாகைக்கு அருகே நாகநாடு அமைந்துள்ளபடியினால் அதன் மூன்று திசைகளிலுமிருந்த துறைகளின் வழியாக இந்தியாவிலிருந்தும், மற்றைய நாடுகளிலிருந்தும் வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் அன்றைய நாகநாட்டை அடைந்த வண்ணம் இருந்தன. இந்தியாவிலிருந்து வந்த பெருங்கற் பண்பாடும், இந்து - பௌத்த மதங்களும் நாகநாட்டின் துறைகளின் ஊடாகவே முதலில் இலங்கையை வந்தடைந்தன.

## பனிப்படிவு யுகங்கள் (Ice Ages)




பனிப்படிவு யுகக் காலத்தில் காணப்பட்ட உலகம்:
பனிப்படிவு யுகத்தின்போது பூமியின் மத்திய பகுதியிலிருந்த நிலங்களில் மட்டுமே மனிதர்கள் வசிக்கக்கூடியதாக இருந்தது. வடக்குப் பகுதியிலிருந்த நிலங்களும், தென் பகுதியிலிருந்த அண்டாட்டிக்கா கண்டமும், கடல்களும், பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தன. பனிப்பாளங்கள் 2 கிலோமீட்டர் உயரத்திற்குப் படிந்திருந்தன. பிரித்தானியா முழுவதும் பனிப்பாளங்களின் கீழே அமிழ்ந்திருந்தது. கடல் மட்டம் 135 மீட்டருக்குக் கீழே இருந்தமையால் கண்டங்களின் கரைகள் இன்றிருப்பதைவிட 200-300 கி.மீட்டர் வரை பரந்திருந்தன. இலங்கை தென்னிந்தியாவின் நிலப்பகுதியாக இருந்தது. கிழக்காசிய நாடுகள் நிலத்தொடர்பால் ஒன்றாகிவிட்டிருந்தன.

நமது பூமியில் ஏற்படும் தட்பவெப்ப மாற்றங்களால் பூமி உருவான காலத்திலிருந்து இதுவரை நான்கு பனிக் கல்பகாலங்கள் (Ice Epochs) நடைபெற்றிருக்கின்றன. இறுதியான பிளிஸ்ரோசீன் (Pleistocene Ice Epoch) கல்பத்தில் மட்டும் 17 பனிப்படிவு யுகங்களும் (பனியுகங்களும்) 17 பனியிடைக் காலங்களும் இடம்பெற்றன. கடந்த 12,000 ஆண்டுகளாக நாம் 17 ஆவது பனியிடைக்காலத்தில் (Interglacial Period) வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (Peter Clark 2002).

## மைல்

பனிப்படிவு யுகங்களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமியின் மேற்பாகம் குளிர்ந்துபோய் வட, தென் பூகோளப் பகுதிகளில் பல உயரத்திற்கு பனி உறைந்து பனிமலைகளாக இருந்தன. பூமியின் மத்திய பகுதியை அண்டிய நாடுகளைத்தவிர மற்றைய கண்டங்களில் ஆறுகள் உறைந்து நிலங்களில் பனிக்கட்டி பாளம்பாளமாகப் படர்ந்திருந்தது. கடல்நீர் ஆவியாக மேலே போய் பின்னர் மழையாக வந்தபோது, பெரும்பாலான நிலங்களில் பனிக்கட்டிகளாக உறைந்து போனதனால், கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 130 மீட்டர் முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்தது.

இற்றைக்கு முன் (இ.மு.) 115,000 ஆண்டு முதல் இ.மு. 12,000 ஆண்டுவரை நீடித்த கடைசிப் பனியுக காலத்தில் கடல் மட்டம் இன்றிருப்பதை விட 130 முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்த காலப்பகுதியில் இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்ட நிலப்பகுதியாக இருந்தது. இந்நிலத்தின் நீள - அகலப் பரிமாணங்களும் இன்றிருப்பதைவிடப் பெரியதாகவே இருந்தன. இந்நிலம் 'இந்திய-இலங்கை' என்ற ஒரே நிலமாகும் (Peter Clark 2002, Rohling 1998).

இற்றைக்கு 19,000 ஆண்களுக்கு முன்னர் கடைசிப் பனியுகம்



இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றைய காலநிலைவரை அதனுள் காட்டப்பட்டிருக்கிறது. குமரிமுனையின் கீழ் நீண்டுகொண்டிருப்பது அன்றைய குமரிநாடு.
நன்றி: டர்ஹாம் பல்கலைக்கழக புவியியல் துறை.

உச்சநிலையை அடைந்திருந்த சமயம் கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 135 மீட்டர் தாழ்வாக இருந்த காலப்பகுதியில் உலகம் முழுவதிலும் நாடுகளெல்லாம் இன்றிருப்பதைக் காட்டிலும் மிகவும் பெரியனவாக இருந்தன. இந்தியக் கடலோரம் இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றிவர பல கி.மீ. தொலைவிற்கு அகன்றிருந்தது.

இ.மு. 12,000 ஆண்டு முதலாக கடைசிப் பனியுகம் முடிவிற்கு வந்த காலத்திலிருந்து உலகைச் சூழ்ந்திருந்த பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் சிறிது சிறிதாக மேலெழுந்த போது இந்திய-இலங்கையின் கரையோர நிலப்பகுதிகள் சிறிது சிறிதாக கடலினுள் அமிழ்ந்து போயின. இ.மு. 7,000 காலப்பகுதியில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை, இந்தியாவிலிருந்து தனித்தீவாகப் பிரிந்து போயிற்று. அதுவரை காலமும் இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இருந்த நிலத் தொடர்பால் மக்களின் நடமாட்டம் தொடர்ந்து நடைபெற்றிருக்கும். அடுத்த ஆயிரம் ஆண்டுகாலப் பகுதியில் - பனிப்படலங்கள் உருகி ஆறுகள் வழியாகப் பெருகி வரும் நீரினாலும், மழையினாலும் ஏற்படும் கடல் பெருக்கமும், கடல்நீர் ஆவியாகப்போவதால் ஏற்படும் கடல்மட்டக் குறுக்கமும் சம நிலை அடைந்த நேரத்தில் - கடல் மட்டம் சீர்நிலை அடைந்தது.

## யாழ்ப்பாணத்தின் அமைவிடம் (Jaffna Topography)

பனியுக காலத்தில், இன்றைய கடல் மட்டம் இப்போது இருப்பதைவிட 135-130 மீட்டர் தாழ்வாக இருந்த காலத்தில் அன்றைய யாழ்ப்பாண நிலம் இந்தியத் துணைக்கண்டத்துடனும், இலங்கையின் பெருநிலப்பரப்புடனும் இணைந்திருந்தது மட்டுமல்லாது, இன்று அதன் மேற்கே காணப்படும் தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய பெருநிலமாகவும் இருந்திருக்கிறது. பனியுகம் முடிந்து கடல் மட்டம் மேலெழுந்தபோது பள்ளமாக இருந்த நிலப்பகுதிகள் அனைத்தும் கடலினுள் அமிழ்ந்துபோக எஞ்சிய நிலப்பகுதிகள் அனைத்தும் இன்று அக்கடலினுள் துருத்திக் கொண்டிருக்கும் தீவுகளாக உள்ளன. அந்தவகையில் இன்றைய யாழ்ப்பாணக் குடாநாட்டை மூன்று தீவுகள் இணைந்த ஒரு நாடாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடிவமைப்பைத் தீர்மானிப்பது அதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கும் கடற் கால்வாயாகும். பனியுகத்தின் இறுதியில் கடல் மட்டம் உலகெங்கும் மேலெழுந்த சமயம் பள்ளமாக இருந்த நிலப்பகுதியில் கடல்நீர் புகுந்ததால், இன்று கால்வாயாகக் காட்சியளிக்கிறது. வடக்கே தொண்டைமானாறில் கடலிலிருந்து உட்புகும் இக்கால்வாயின் முக்கிய பகுதி குடாநாட்டை இரு பாதியாகப் பிளந்து தெற்கே அரியாலையில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் (Jaffna Lagoon) சங்கமிக்கிறது. இக்கால்வாயின் மிக ஒடுக்கமான பகுதிகள் தொண்டைமானாறுக் கடலுடன் சேரும் இடத்திலும் நாவற்குழியிலும் காணப்படுகின்றன. நாவற்குழியிலுள்ள தொடர்வண்டி, வீதிப் பாலங்கள் இக்கால்வாயின் மேலாகச் செல்கின்றன. தொண்டைமானாற்றிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் கிளைக் கால்வாய், யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பகுதியை இரு கூறாகப் பிரித்துக்கொண்டு கிழக்கே வங்காளக் கடலின் தென்பகுதியில் இணைகிறது.

கீரிமலையிலிருந்து தெல்லிப்பழைவரை கடல் மட்டத்திலிருந்து 10-12 மீட்டர் உயரமாக உள்ள யாழ்ப்பாண நிலப்பரப்பு மிகுதிக் குடாநாட்டில் தட்டையாக உள்ளது. குடாநாட்டின் வடகிழக்



பனியுகத்தின் இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்த கடல் கால்வாய்


இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்படும் மன்னார் மணற்பாறை சில இடங்களில் 130 மீட்டர் கனதி கொண்டவையாக உள்ளன.


காங்சேன்துறையில் பெருமழையின் பின்னர் மேலிருந்த செம்மண் கரைந்து வெளிவந்த யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை. இச் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டே அங்கே தொழிற்சாலையில் சீமெந்து தயாரிக்கப்படுகிறது.

கிலும், தெற்கிலும் உள்ள மணற்கும்பிகள் கடல் மட்டத்திலிருந்து 15 மீட்டர் உயரம் வரை காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்தரை சிவப்பு, மண்ணிறச் சிவப்பு, மண்ணிறக் களிமண், மணற்படிவு ஆகிய தோற்றங்களைக் கொண்டிருக்கிறது. மேற்தரை அமைப்பைக்கொண்டு குடாநாட்டை இரு விவசாய-பொருளியல் பகுதிகளாகப் பிரிக்கலாம் (Agro-Ecological Zones). குடாநாட்டின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் காணப்படும் சிவந்த செம்பாட்டு மண் இரும்புத்தாதைக் கொண்டு நெல், தாவரப் பயிர்கள், புகையிலை, பழ மரங்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கு உகந்த பிராந்தியமாக அமைந்திருக்கிறது. தெற்கே கொடிகாமத்திற்கும் ஆனையிறவுக்குமிடையே உள்ள தட்டையான மணல் நிலம் ஏதும் விளைவிக்க முடியாத தரிசு நிலமாக உள்ளது. இந்த இரு பிராந்தியங்களின் தரைகளிலும் பனையும் தென்னையும் வளர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஆறுகள் ஏதுமில்லை. ஆதலால் வீட்டுப் பாவனைக்கும் விவசாயத்திற்கும் உகந்த மேலக நீர்நிலைகள் அருகியே உள்ளன. ஆனாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குளங்களும், கந்தரோடையிலும் நந்தாவிலிலும் உள்ள இரு பெருங் குளங்களும், பல்லாயிரம் கிணறுகளும் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்கின்றன. மேல்நிலத்தின் கீழே உள்ள சுண்ணாம்புக் கற்பாறையில் தோண்டப்படும் கிணறுகள் வடிகட்டிய தெளிந்த தண்ணீரை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

## கந்தரோடையும் சூழல் மையங்களும்

இன்றைய கந்தரோடை, புராதன வட இலங்கைத் துறைமுகங்களான சம்புத்துறையிலிருந்து (Jambukola) 5 கி.மீ. தூரத்திலும், காங்கேசன்துறையிலிருந்து (பண்டைய காயாத்துறை) 6 கி.மீ. தூரத்திலும் உள்ள ஆரவாரமற்ற ஓர் எளிய கிராமம். கடல் மட்டத்திலிருந்து 2.6 மீட்டர் உயரத்தில் அமைந்த இக் கிராமம் இலக்கியச் சான்றுகளால் பண்டைய நாகநாட்டின் தலைநகரமாக அறியப்பட்டு தொல்லியல் ஆய்வுகளால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலை இப்பிராந்தியத்தின் தலைநகரை கதிரமலை என்ற பெயரால் குறிப்பிடுகிறது. இன்றைய சுன்னாகம் சந்தைக்கும் கந்தரோடைக்கும் இடையிலுள்ள மேட்டு நிலம் 'கதிரமலை' என்ற பெயரால் இன்றைக்கும் அழைக்கப்படுகிறது. சுன்னாகம் தொடர்வண்டி நிலையத்திற்கு (புகையிரத) அருகாமையிலிருக்கும் சிவன்கோயில் 'கதிரமலைச் சிவன்கோயில்' என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசத்தை சிங்களமொழியில் குறிப்பிடும் 'கதுறுகொட' என்ற சொற்பதம் 'கதிரமலை' என்ற சொல்லின் நேரடியான சிங்கள மொழி பெயர்ப்பாகும். 'கந்தரோடை' என்ற சொற்பதம் எப்போது, எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. 'கந்தரின் ஓடை' என்ற கருத்து சரியானதாகத் தெரியவில்லை. 'கந்தக் கோட்டை' என்ற பெயர் காலப்போக்கில் மருவி 'கந்தரோடை' ஆனது என்கிறார் வரலாற்றாசிரியர் சி.எஸ். நவரத்தினம். எப்படியிருந்தாலும் இந்த ஆதிநகரை 'கந்தரோடை' என்றே குறிப்பிடுவோம்.

கந்தரோடைக் கிராமம், கந்தரோடைக் குளம் என அழைக்கப்படும் ஏரியைக் கொண்ட பரந்த நெல்வயல்களின் அருகேயுள்ள உயரமான மேட்டு நிலத்தில் அமைந்திருக்கிறது. அக்கிராமத்தினூடே செல்லும் வழுக்கை ஆறு என்ற பெயர் கொண்ட கால்வாய் அருகிலுள்ள உடுவில் கிராமத்தின் வழியாகச் சென்று, பின்னர் மேற்கு நோக்கித் திரும்பி ஆனைக்கோட்டை வழியாக மேற்கே நாவாந்துறை அருகே யாழ்ப்பாணக் கடலை அடைகிறது. மக்களின் மரபு ஞாபகங்களின்படி அக்காலத்தில் இந்த வழுக்கை ஆறு ஊடாக, நாவாந்துறையிலிருந்து சிறிய படகுகள், கடல் மூலமாக வரும் பொருட்களை கந்தரோடைக்கும், அப்பாலும் எடுத்துச்சென்றன. இன்று இந்த 'ஆறு' மழைநீரை யாழ்ப்பாணத்தின் மேற்குக் கடல்வரை எடுத்துச் செல்லும் கால்வாயாகச் செயற்படுகிறது.

இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் கந்தரோடை திராவிடரின் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய நடுவமாகவும், தென்னாசியக் கடல் வர்த்தக வலைப்பின்னலில் முக்கிய பங்கெடுத்துக்கொண்ட பெரும்பத மையமாகவும் விளங்கியிருக்கிறது. அது மட்டுமல்லாது அன்றைய தென்னிந்திய நாடுகளான ஆந்திரப் பிரதேசம், தமிழகம், கேரளநாடு


கீரிமலை கடற்கரையில் செங்குத்தாக எழும் சுண்ணாம்புப்பாறை. முற்காலத்தில் இப் பாறை கடலுக்குள் பலதூரம் துரத்திக் கொண்டு போனதாகவும், புராதன திருத்தாம்பலேஸ்வர் கோயில் அதன் மேல் கட்டப்பட்டிருந்ததாகவும் கடல் அலைகளின் உக்கிரத்தினால் இப் பாறைக் கோயில் அரிக்கப்பட்டு உடைந்து விழுந்ததாகவும் ஐதீகக் கதைகள் உள்ளன. இப் பாறையின் அடித்தளக் கல் கடலினுள் 70 மீட்டர் தூரம் வரை நீண்டு செல்வது இதற்கு வலுத்தருகிறது. இந்த இடத்திலிருந்து அரை கி.மீ. தொலைவில் இப் பாறைத் தொடரின் மேல் இன்றைக்கும் ஒரு பெருமாள் (விஷ்ணு) கோயில் உள்ளது.

ஆகியவற்றுடன் இணைந்து இந்துமத - பௌத்தமத நடவடிக்கைகளின் மையமாகவும் பரிணமித்திருக்கிறது.

கந்தரோடையைத் தவிர ஆனைக்கோட்டை, சிங்கைப் பட்டினம், கீரிமலை, யம்புகோளப் பட்டினம், வல்லிபுரம், நாகர் கோயில் ஆகியன பொதுயுகத்திற்கு முற்பட்ட காலத்தைய நகரங்களாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிங்கைத்துறை (பொங்கொலி நீர்ச் சிங்கை நகர்), யம்புத்துறை, காயாத்துறை (இன்றைய காங்கேசன் துறை, அன்று புத்தகாயாவிற்குச் செல்லும் பௌத்த யாத்திரிகர்கள் கப்பலெடுத்துச் சென்ற துறையாதலால் பெற்ற பெயர்), நாவாந்துறை ஆகியன தென்னாசிய இந்து மாகடல் வர்த்தகத்தில் பங்கெடுத்த பெருந்துறைகளாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள தீவுகளான காரைநகர், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்பன பெருங்கற் பண்பாட்டைப் பேணிய பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்கள். யாழ்ப்பாணக் குடாவிலிருந்து இத்தீவுகளைப் பிரித்த யாழ்ப்பாணக் கடல்நீரேரி இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் பரிமாறலுக்கும், அக்கால மக்களின் பொருளாதாரப் படிநிலை வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்கியிருக்கிறது.

குடாநாட்டுக்கு வெளியே உள்ள இலங்கையின் பெருநிலப் பகுதியின் மூன்றில் ஒரு பங்கு நாகநாட்டின் (Nāgadipa) ஆட்சிப் பரப்பின் கீழ் இருந்தது (Geiger, W. 1960: 108). சில காலங்களில் மேற்குக் கடற்கரையிலிருந்த குதிரைமலையும், சிலாபமும் நாகநாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. அப்பரப்பிலிருந்த பூநகர் (இன்றைய பூநகரி), மாந்தை, திரிகூடம் (திருகோணமலை) என்பன அக்காலத் துறைமுக நகரங்களாகும். பெருங்கற் பண்பாட்டைப் பேணிய இப்பட்டினங்களில் மாந்தையும், திரிகூடமும் வரலாற்றுப் பெருமைமிக்க மிகப்பழமையான நகரங்கள். பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் மாந்தை பெரியதொரு வர்த்தகச் சந்தையைக் கொண்டிருந்தது. அத்துறையினூடாக இடம்பெயர்ந்த மக்களின் பெரியதொரு குடியிருப்பு பொம்பரிப்பில் உருவானது.

நாகநாட்டின் நிலப்பரப்பு அதன் கடற்கரை நகரங்களில் மூன்று புராதன சிவதலங்களைக் கொண்டிருந்தது. வடக்கே கீரிமலையிலிருந்த திருத்தாம்பலேஸ்வரம் (நகுலேஸ்வரம்), கிழக்கே திரிகூட மலைக்குன்றிலிருந்த திருக்கோணேஸ்வரம், மேற்கே மாந்தையிலிருந்த (மாதோட்டம்) திருக்கேதீஸ்வரம் என்பவையே அவையாகும்.

## நில அமைப்பியல்

யாழ்ப்பாணக் குடாநாடும், இலங்கையின் பெருநிலப்பரப்பின் வட பகுதியும் மூன்று வகையான கற்பாறை அமைப்புகளின் மேல் அமர்ந்திருக்கின்றன. அவையாவன: 1. தொல்லூழிக்கு முற்பட்ட அடித்தளப் பாறை (Pre-Palaeozoic Basement Rocks), 2. மன்னார் மணற்பாறை (The Mannar Sandstone), 3. யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை (The Jaffna Limestone). இப்பாறை அமைப்புகளை மேல்நில மண்படுகை மூடியிருக்கிறது. வெவ்வேறு கனதிகளில் உள்ள இந்த மண் அடுக்கு இடத்திற்கு இடம் களிமண்ணாகவோ, இரும்பு கலந்த வண்டல் கலந்த கருமண்ணாகவோ அல்லது வெறும் மண்ணிறமான மண்ணாகவோ செம்மண்ணாகவோ, காட்சி தருகிறது.

தொல்லூழிக்கு முற்பட்ட அடித்தளப் பாறை (Pre-Palaeozoic Basement Rock) என்பது மிகக் கனதியான, பளிங்கு இயல்புடைய, தீச்சார்ந்த, இயன்மாறுபாடு கொண்ட (Massive, Crystalline, Igneous And Metamorphic) பாறைத்தளம் என வருணிக்கப்படுகிறது. நிலத்திற்குக் கீழே 240 மீட்டர் ஆழத்தில் இந்த அடித்தளப்பாறை காணப்படுகிறது. இதற்கு மேலாக குவாட்சைட் கற்கள் கொண்ட அடுக்கு, அல்லது மன்னார் மணற்பாறை அடுக்கு, அல்லது யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை அடுக்கு என்பனவும், அதற்கு மேலாக மண் அடுக்குகளும் காணப்படுகின்றன.

இற்றைக்கு 35 மில்லியன் (350 இலட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்ட மீயோசீன் யுகத்தில் (Miocene Age) புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடுவரை தென்னிந்தியப் பகுதியோடு இணைந்த நிலம் ஆதிப் பனியுகங்களின் இடைக்காலத்தில் கடலினுள் அமிழ்ந்து கிடந்ததனால் வளிமண்டலத்திலிருந்த கரியமிலவாயு கடல்நீரில் கலந்து சுண்ணாம்புக்காபனேற்றாக மாற்றமடைந்தது. கடலில் வாழ்ந்த உயிரினங்கள் இதை உட்கொண்டு இறந்த பின்னர், அவை அடியில் சுண்ணாம்புக் கல்லாகப் படிந்தன. காலப்போக்கில் அதன் மேல் படிப்படியாகப் படிந்த கற்களின் பளுவினால் அது இறுக்கமடைந்து, பின்னர் பூமியின் நடுப்பகுதி வெப்பத்தினால் இப்பகுதி மேலெழுந்து கெட்டியான பூமியின் மேற்பகுதியை அடைந்திருக்கிறது (Mathanakaran, R. 1987: 189).

மன்னார் மணற்பாறை (The Mannar Sandstone) சாம்பல் நிறமாகவும், மேற்பகுதி பருவெட்டான, முரட்டுத்தனமான குரணிகளைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. பளையில் மேற்கொள்ளப்பட்ட துளைக்கருவி ஆய்வு இப்பாறையின் ஆழத்தை 130 மீட்டர் வரையும் எடுத்துச் சென்றது. பளையில் உள்ள பாறைக்கல்லின் இடையிடையே களிமண்ணும், வண்டல் சேற்றுப் படிவும் காணப்பட்டன. மன்னாரில் எண்ணெய் தேடலுக்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203



இலங்கையின் வடபகுதியிலும், வடமேற்கிலும் கரையோரமாகப் பரந்திருக்கும் இரணைமடு அடுக்கமைவு

இது தென்னிந்திய தென்கிழக்கு கடற்கரை ஓரமாகப் பரந்திருக்கும் தேரி மேடுகளின் நிலநீட்சியாகும்

Image Source - S.U. Deraniyagala.

காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த மணற்பாறையினிடையே கடல் களிக்கல் தகடுகளும் (Marine Shales), மணலும், களிமண்-கற்களும் (Claystones) காணப்பட்டன (Mathanakaran, R. 1987: 190).

யாழ்ப்பாண சுண்ணாம்புக் கற்பாறை (The Jaffna Limestone) வெளிறிய மஞ்சள் நிறமாகவோ, அல்லது மெல்லிய மண்ணிறமாகவோ, அல்லது வெண்ணிறமான பளிங்கு இயல்புடைய படிகக் கல்லாகவோ காட்சிதரும். இக்கல்லின் இறுக்கமான பகுதி பளிங்கிலாலான மியோசீன் யுகத்திற்குரிய (Miocene Epoch: 23-5.3 Million Years Ago) மூன்றாம் ஊழிப் பாறையாகும் (Cooray, 1950: 135). இப்பாறை ஏறக்குறைய 90 மீட்டர் கனதி கொண்டது. இப்பாறைக்கு மேலாக பிளிஸ்ரொஸீன் காலத்தைய மண் அடுக்கு காணப்படும். சில இடங்களில் பிளிஸ்ரொஸீன் காலத்தைய மணல் அல்லது பவளப்பாறையினால் (Coral Reef) மூடப்பட்டிருக்கும். இம்மண் அடுக்கு அல்லது மணல் அடுக்கு ஒரு மீட்டரிலிருந்து பதினைந்து மீட்டர்வரை ஆழம் கொண்டதாக உள்ளது (Ground Water Survey In Jaffna 1968; Rajeswaran, S.T.B. 2008).

இச்சுண்ணாம்புக் கற்பாறையில் பல ஊழிக்காலங்களாக ஏற்பட்ட மேலும் கீழுமான நில அசைவுகளால் சில இடங்களில் மடிப்புகள் (Anticlines And Synclines) ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் வெட்டப்படும் சுண்ணாம்புக்கற்களில் இம்மடிப்புகள் விழுந்திருப்பதைக் காணலாம். இச்சுண்ணாம்புக் கற்பாறை வெளியில் தெரியும் இடங்களில் கீரிமலை, கீரிமலையை அண்டிய காங்கேசன்துறை என்பன முக்கியமான இடங்கள். கீரிமலையில் காணப்படும் சுண்ணாம்புக்கற்பாறை 30 அடி உயரம் உள்ளது. கீரிமலையிலிருந்து கிழக்கே காங்கேசன் துறை வரையிலான கடற்கரை இப்பாறை நிலமாகும். ஆங்காங்கே கடல் அரிப்பினால் ஏற்பட்ட சுவடுகள் இப்பாறைகளில் காணப்படுகின்றன (Mathanakaran, R. 1987: 191).




இரணைமடு அடுக்கமைவில் அகழ்ந்தெடுத்த பழைய கற்காலக் கருவிகளும் பாவனைப் பொருட்களும்

Image Source - S.U. Deraniyagala.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் மணற்பரப்பு நான்கு தெளிவான நிலப்பரப்புகளைக் கொண்டிருக்கிறது. இம்மணற்பரப்புகள் வடமேற்கிலுள்ள சுண்ணாம்புப்பாறை நிலத்தை அடுத்து வடக்கு-மேற்காகவும், தெற்கு-மேற்காகவும் பரந்திருக்கின்றன. இம்மணற்பரப்பிற்கு அடியிலே சுண்ணாம்புப்பாறை அடுக்குக் காணப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக கடல் நீரோட்டமும் அலைகளும் கொண்டுவரும் மணற் திட்டுகளை வடகிழக்கு வாடையும், தென்மேற்குச் சோழகக் காற்றுகளும் பல மைல் தொலைவிற்குப் பரந்திருக்க வைத்திருக்கிறது. இம்மணற்பரப்புகள் பெரும்பாலும் விளைவற்ற, தாவரவளர்ச்சி ஏதுமற்ற, நிலையற்ற நிலங்களாக இருப்பதனால் நகர்ந்து செல்லும்



சுண்டிக்குளம் மணற் பரப்பு

மணற்கும்பிகளாகக் காணப்படுகின்றன. மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை குடாநாட்டின் கிழக்குக் கரையிலிருந்து அடிக்கும் வடகிழக்குப் பருவக்காற்று, கடல் அலைகளைக் கொண்டு, நீரடி மணலை (Spits) கடலின் அடியே நகரச் செய்கிறது. இலங்கையின் பெருந்தீவிற்கு வடக்கே யாழ்ப்பாணத் தடாகக் கடலினால் (Jaffna Lagoon) தனித்தீவாக பிரிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத் தீவகத்தை, சுண்டிக்குளத்தில் படிந்த மணல் அடுக்கு இலங்கைப் பெருந்தீவினோடு இணைத்து வைத்தது (Jeyasingham, W.L.1951; Mathanakaran>,R.1987).

## யாழ்ப்பாணத்தின் பருவநிலை (The Jaffna Climate)

**மாரி – கோடைப் பருவநிலை**

பூமியின் பூமத்திய ரேகையின் வடக்கே அட்சரேகை பத்தாம் பாகைக்குள் யாழ்ப்பாணக்குடாநாடு அமைந்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திற்கு அருகே பாக்குத் தொடுவாயினாலும், வங்காள விரிகுடாவினாலும் இக்குடாநாடு அதனின்று பிரிக்கப்பட்டிருக்கிறது. 1,230 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட இக்குடாநாடு இந்தியக் கரையிலிருந்து 32-40 கி.மீ. (20-25 மைல்) தொலைவில் அமைந்துள்ளது. இக்குடாநாட்டின் மிக உயர்ந்த பகுதி கடல் மட்டத்திலிருந்து 15.2 மீட்டர் (50அடி) உயரமாகவே இருந்தது. இதன் அமைவிடமும், அங்கு நிலவும் 'பூமத்தியரேகை-வளிமண்டல' நிலைகளுமே அதன் தட்ப வெப்ப நிலையைத் தீர்மானிக்கின்றன. இப்பருவம் 'வெப்பமண்டல-மழைக்காலப்' பருவநிலை (Tropical Monsoon) என அழைக்கப்படுகிறது (Mathanakaran, R. 1987: 193).

யாழ்ப்பாணப் பருவநிலை மாரி, கோடை என வகுக்கப்பட்டிருக் கிறது. ஐப்பசி முதல் மார்கழி மாதம் வரை நிகழும் வடகிழக்குப் பருவ மழைக்காலம் ஆண்டின் 90 சதவிகிதமான மழையைக் கொண்டுவருகிறது. இதுவே மாரிகாலம் என அழைக்கப்படு கிறது. சித்திரை-வைகாசி மாதங்களில் வீசும் தென்மேற்குப் பருவமழைக்காலம் மிகுதி 10 சதவிகித மழையைக் கொண்டு வருகிறது. இது மென்மழைக்காலம் என்றும் அழைக்கப்படும். வடகிழக்குப் பருவமழைக் காலத்திற்கும், தென்மேற்குப் பருவ மழைக் காலத்திற்கும் இடையே ஆனி முதல் புரட்டாசி மாதம் வரையும் உள்ள காலப்பகுதி உலர்ந்த கோடைப் பருவமாகும்.

யாழ்ப்பாணத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி பாரிய வேறுபாட்டைக் கொண்டிருக்கிறது. ஆண்டிற்குச் சராசரி 1300 மி.மீ. மழைவீழ்ச்சியைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு 1988 - 2004ஆம் ஆண்டுகளுக்கிடையே 1903 மி.மீட்டருக்கும் 847.8 மி.மீட்டருக்கும் இடைப்பட்ட மழைவீழ்ச்சியைக் காட்டுகிறது. 1944ஆம் ஆண்டில் கார்த்திகை (நவம்பர்) மாதத்தில் மட்டும் 1118 மி.மீ. மழையைக் கண்ட யாழ்ப்பாணம், 1974 முழு ஆண்டிலும் 635 மி.மீ. மழையை மட்டுமே கண்டிருக்கிறது (Jaffna District Statistical Handbook 2003).

**வெப்பநிலை**

பூமியின் அட்சரேகை (Latitude) 9°30′-9°50n இல் யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்திருப்பதனால் வருடம் முழுவதும் கதிரவனின் ஒளிக்கதிர்கள் அங்கே படிந்திருக்கும். ஆனால் மழைக் காலங்களில் கவியும் மேகத்திரள்கள் கதிரவன் ஒளியை நிலத்திற்கு வரவிடாமல் தடுக்கும். வடகிழக்கிலிருந்து வீசும் வாடைக் காற்று குளிரைக் கொண்டுவரும். இக்காற்றினால் ஏற்படும் நீர் உறைவும் (Condensation) வெப்பநிலையை வெகுவாகக் குறைக்கும். யாழ்ப்பாணத்தின் சராசரி வெப்பம் 26.2 சென்ரிகிரேட் பாகையாகும். சித்திரை மாதம் முதல் ஆவணி மாதம் வரை வெப்பம் 28 சென்ரிகிரேட் பாகை முதல் 30 சென்ரிகிரேட் பாகை வரை உயர்வாக இருக்கும் (Jaffna District Statistical Handbook 2003).

## நாகநாட்டின் ஆதிக்குடியிருப்புகள்

### உத்தரதேசக் குடியிருப்புகள்

இந்தியத் துணைக்கண்டத்தில் இற்றைக்கு ஒன்றரை மில்லியன் (15 இலட்சம்) ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆதிகால மனித இனங்கள் வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்களாக அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் அறிவியல் ரீதியான




பண்டைய யாழ்ப்பாணத்தின் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள்

Image Source - P.Ragupathy

காலக்கணிப்புகள் காணப்படுகின்றன. அக்காலகட்டத்தின் 99 சதவிகிதமான காலத்தில் இலங்கை, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தமையால் தென்னிந்தியா வரை வந்த மனித இனங்கள் இலங்கைக்கு நடந்து வந்திருப்பார்கள். இற்றைக்கு 65,000-60,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் நவீன மனிதர்களான ஹோமோ சேப்பியன்ஸ் இனங்கள் தென்னிந்தியாவையும் இலங்கையையும் வந்தடைந்து விட்டன என்பதை இன்றைய மரபணுவியல் ஆய்வுகள் அறியத் தருகின்றன (Thiagarajah, S. 2015). இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட காலக்கணிப்பு ஆய்வுகளில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லாயுதங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

வட இலங்கையின் (உத்தர தேசத்தின்) கிழக்கே முல்லைத் தீவுப் பகுதியிலிருந்து வடக்குக் கரைநிலம் வழியாக மேற்குக் கரையில் புத்தளம் வரையில் சரளைக் கற்களும் மணலும் கலந்து பரந்திருக்கும் சிவந்த நிறமான 'தேரி மணல் மேடு' இரணைமடு அடுக்கமைவு (Iranamadu Formation) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இரும்புத்தாது கொண்ட இந் நிலம் மணலுடன் கலந்து நீண்டகால தட்பவெப்ப நிலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு செந்நிறம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த இரணைமடு அடுக்கமைவின் இரு இடங்களில் கண்டெடுத்த கல்லாயுதங்களில் மேற்கொள்ளப்பட்ட வெப்பேற்று-ஒளி உமிழும் காலக் கணிப்புகள் (Thermoluminescence Dating) இற்றைக்கு முன் (இ.மு.) 125,000 ஆண்டுகளையும் (Abeyaratne, M. 1996), இ.மு. 80,000 ஆண்டுகளையும் (Deraniyagala, S., 1992: 686-688) காட்டியிருக்கின்றன.



## தமிழ்நாட்டில் கொடுமணலில் காணப்படும் பெருங்கற் பண்பாட்டுக் கல்லறை

வட இலங்கையின் இரணைமடு அடுக்கமைவில் கண்டெடுத்த காலத்திற்குரிய கற்கருவிகள் தென் இலங்கையில் பந்துல என்ற இடத்திலும் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கற்கருவிகளைத்தவிர அக்காலகட்டத்தைய மனிதர்களின் எலும்புகளோ,

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

| P. No. | Sample No. | Trench | Stratum | Pretreatment | 5568 Half-life B.P. 1950 | A.D/B.C. | 5730 Half-life A.D./B.C. | MASCA Corr[1] A.D./B.C. |
|---|---|---|---|---|---|---|---|---|
| P-2521 | 4 | A | IV | – | 2020 ± 50 | 70 B.C. | 140 ± 50 B.C. | 10- 100 ± ,50 B.C. |
| P-2518 | 5 | A | IV | NaOH | 2290 ± 50 | 340 B.C. | 410 ± 50 B.C. | 420 ± 50 B.C. |
| P-2520 | 8 | A | V | – | 2180 ± 60 | 230 B.C. | 290 ± 60 B.C. | 270- 390 ± 60 B.C. |
| P-2524 | 9 | A | VI | – | 2340 ± 50 | 390 B.C. | 460 ± 30 B.C. | 440 ± 50 B.C. |
| P-2514 | 1 | B | V | – | 2250 ± 60 | 300 B.C. | 370 ± 60 B.C. | 410 ± 60 B.C. |
| P-2515 | 2 | B | VI | – | 2990 ± 60 | 1040 B.C. | 1130 ± 60 B.C. | 1290 ± 60 B.C. |
| P-2516 | 3 | B | VI | NaOH | 2070 ± 60 | 120 B.C. | 180 ± 60 B.C. | 130 ± 60 B.C. |
| P-2522 | 7 | B | VII | – | 2110 ± 60 | 150 B.C. | 220 ± 60 B.C. | 170- 200 ± 60 B.C. |
| P-2523 | 15 | B | VIII | – | 2060 ± 50 | 110 B.C. | 170 ± 60 B.C. | 120- 140 ± 60 B.C. |
| P-2525 | 16 | B | VIII | – | 2730 ± 220* | 780 B.C. | 870 ± 220 B.C. | 940- 980 ± 220 B.C. |
| P-2519 | 17 | B | IX | NaOH | 2290 ± 60 | 340 B.C. | 410 ± 60 B.C. | 420 ± 60 B.C. |
| P-2528 | 19 | B | XI | – | 2370 ± 60 | 420 B.C. | 500 ± 60 B.C. | 480 ± 60 B.C. |
| P-2526 | 18 | B | X | – | 2090 ± 50 | 140 B.C. | 200 ± 60 B.C. | 140- 190 ± 50 B.C. |
| P-2529 | 6 | X | III | – | 2350 ± 200* | 400 B.C. | 470 ± 210 B.C. | 440- 460 ± 210 B.C. |
| P-2517 | 12 | X | IV or V | NaOH | 2250 ± 50 | 300 B.C. | 370 ± 50 B.C. | 410 ± 50 B.C. |
| P-2527 | 11 | X | IV or V | Too Small | | | | |

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see MASCA Newsletter, 1973, Vol.9, No.1, p.1-20.

1970 ஆம் ஆண்டில் கந்தரோடையில் பென்ஸில் வேனிய பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் மேற்கொண்ட அகழாய்வில் பெற்ற பொருட்களின் கதிரியக்கக் கரிம தேதிக்கணிப்புகள் 1977ஆம் ஆண்டில் தான் வெளியிடப்பட்டது.
P-2515, P-2525 இலக்கமிட்ட தொல் பொருட்கள்
கி.மு. 1350, 1200 ஆண்டுகளைக் காட்டுவதைக் காணலாம்

மற்றைய பாவனைப் பொருட்கள் எதுவுமோ கண்டுபிடிக்கப்படவில்லை. காலயுகத்தின் அழிவுகளாலும், வெப்பமண்டலச் சிதைவுகளாலும் இம்மனிதர்கள் விட்டுச்சென்ற தடயங்கள் என்றைக்கோ அழிந்துபோய்விட்டன. தென்னாசியாவிற்கு ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதர்கள் ஆபிரிக்காவிலிருந்து வந்தடைந்த காலம் இ.மு. 65,000-60,000 எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்கருவிகள் நவீன மனிதர்களுக்கு முன்பு இங்கே வாழ்ந்த ஹோமோ இரக்டஸ் எனப்படும் ஆதி மனிதர்கள் உபயோகித்த கற்கருவிகளாகவே இருக்கும். தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்ட இந்த ஆதிமனிதர்களின் கல்லாயுதங்கள் 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆதிமனிதர்கள் மிருகங்களை வேட்டையாடியும், கிழங்குகள், பழங்கள், விதைகள் ஆகிய உணவுப் பொருட்களைச் சேகரித்து உணவாகவும் கொண்டு, பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலும், ஆற்றங்கரைகளிலும் வாழ்க்கை நடத்தினார்கள். வட இலங்கையின் வறண்ட பிராந்தியத்தில் 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சதுர கி.மீ. பரப்பில் 1.5 முதல் 0.8 மனிதர்களே வாழ்ந்திருப்பார்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்னிலங்கையில் ஈரப்பிரதேசத்தில் மிக அடர்த்தி குறைவாக ஒரு சதுர கி.மீட்டருக்கு 0.1 அல்லது அதற்கும் குறைவான ஆதி மனிதர்களே வாழ்ந்திருப்பர் (S.U. Deraniyagala 1996).

இலங்கையின் இடைக்கற்கால மக்கள், இ.மு. 60,000 ஆண்டு களில் தென் ஆசியாவை வந்தடைந்த நவீன ஹோமோ சேப் பியன்ஸ் மனி தர்களாவர். கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து வெளி வந்து அவுஸ்திரேலியாவை அடைந்த அவர்களது முதலாவது இடப் பெயர்வு கடற்கரையோரமாக நடைபெற் றதனால் அவர்களது நகர்வு இலங்கை யின் கரையோரப் பகுதியூடாகவே நடைபெற்றிருக்கும். அக்காலகட்டத்தில் இலங்கை இந்தியாவோடு இணைந்து ஒரே நிலமாக இருந்தது என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இம்மனிதர்களின் வாழ்வியல் பற்றி விவரமாக இனிவரும் ஓர் இயலில் கூறப்படும்.

1970ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளகத்தின் அகழாய்வுக் குழு கந்தரோடையில் முதல் தடவையாக ஓர் அறிவியல் ரீதியிலான அகழாய்வை மேற்கொண்டது. இக்குழுவுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் விமலா பேக்ளி அம்மையார் இங்கே ஆதியில் வாழ்ந்த மக்கள் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய மக்கள் எனத் தெரிவித்தார் (Begley, V. 1973).

இக்கால கதிரியக்கத் தேதிக்கணிப்புகளின் படி (Radiocarbon And Thermoluminescence Dating) பெருங்கற் பண்பாடு, தென்னிந்தியாவில் பொ.யு.மு. 1500ஆம் ஆண்டளவில் தோற்றம்பெற்று திராவிட மொழிகளைப் பேசும் கர்நாடகம், ஆந்திரம், தமிழகம், மலையாள நாடுகளிலெல்லாம் பரவி, அப்பால் இலங்கைத்தீவு எங்கும் பரவியது (Moorthy, U.S. 1994; Possehl, G.L. 1994).

பெருங்கற் பண்பாடானது முக்கியமாக இறந்த மக்களை அடக்கம் செய்யும் பெருங்கற்களைக் கொண்ட கல்லறைகளை உள்ளடக்கியது. இறந்தவர்களை அடக்கம் செய்த பின்னர் பெரிய கற்பாறைகளை கற்பலகைகளாக வெட்டியோ அல்லது அடக்கத்தைச் சுற்றிவர நட்டுவைத்தோ, மேலாக மற்றொரு கற்பலகையால் மூடிவிடுவார்கள். இந்த அடிப்படை முறையிலிருந்து பலவகையான மாறுபாடுகளும் காணப்படும். இம்மாதிரி பெருங்கற்களைக் கொண்ட சமாதிகளும், வழிபாட்டு நடுகற்களும் பண்டைய உலகின் பல பகுதிகளில் காணப்படுகிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களே இந்த அடக்



யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வில் கண்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டம்

கமுறைகளைக் கடைப்பிடித்தவராவர்.

பெருங்கற் பண்பாடு என்பது மேற்கூறப்பட்ட பெருங் கற்களைக் கொண்ட கல்லறைகளோடு இரும்பின் தொழில்நுட்பம், குளம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன விவசாயம், உழுவதற்கான ஏர், நெற்பயிர்ச்செய்கை, மட்பாண்டம் வனையும் சில், கறுப்பு-சிவப்பு மட்பாண்டம், அம்மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துகள் ஆகிய பண்புகளை உள்ளடக்கியதாகும்.

நன்றி: சிவ தியாகராஜா, எழுநா முகநூல்





### பண்டைய யாழ்ப்பாணத்தின் ஆரம்பகாலக் குடியிருப்பு மையங்கள்

1. கந்தரோடை
2. ஆனைக்கோட்டை
3. யாழ்ப்பாணக்கோட்டை
4. ஆனைக்கோட்டை : சிங்கை நகர்
5. வல்லிபுரம்
6. பூநகரி
7. காரைநகர்
8. வேலணை
9. அல்லைப்பிட்டி
10. நயினாதீவு
11. நெடுந்தீவு



ஆதிச்சநல்லூர் அகழ்வுகளில் கண்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள்
நன்றி : T.S. Subramanian.

# திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்களுக்கு எமது மரியாதை வணக்கம்

07.03.2025

ஆனந்தி அக்கா எனப் பரவலாக அறியப்பட்டிருந்த ஊடக ஆளுமை திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்களுக்கு எமது மரியாதை வணக்கத்தைத் தெரிவிப்பதோடு அவரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் கரங்களைத் தோழமையுடன் இறுகப் பற்றிக் கொள்கிறோம்.

ஆனந்தி அவர்கள், பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தமிழ் ஒலிபரப்பான தமிழோசையில் 30 ஆண்டுகளுக் கும் மேலாகப் பணிபுரிந்தவர். ஈழத் தமிழ் மக் களின் தேசியப் பிரச்சினை மற்றும் தமிழர் சமூகத்தின் அக்கறைக்குரிய பல்வேறு விடயங்களில் பற்றுறுதி யுடன்செயற்பட்டவர்.



ஓர் அனைத்துலக ஊடகத்தின் பிரதிநிதியாக இருந்தவாறு ஊடக அறத்தைப் பேணிய வண்ணம் அவர் போராட்டத்தின் பக்கம் தன்னை இணைத்து நின்றவர். தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள்மீது மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தவர். தலைவரது ஒவ்வொரு முடிவுகளின் பின்னும் தலைவர் பின்பற்றும் போராட்ட அறம் உண்டு என உறுதியாக நம்பியவர்.

பனிப்போரின் பிற்பட்ட காலங்களில் ஒடுக் கப்பட்ட மக்களின் போராட்டங்கள் மீது அரசுக ளால் பயங்கர வாத முத்திரை குத்தப்பட்ட பின்னர் அனைத்துலக ஊடகங்களும் மெல்ல மெல்ல அரசுகளின் வழிகாட் டலுக்கு உட்டட்டன. . இந்தச் சூழலிலும் ஆனந்தி அவர்கள் அந்த வழி காட்டலுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கம் மனதால் நின்றவர். தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் ஈழத் தமிழ் மக்களின் போராட் டத்துக்கு வலுச் சேரக்கும் வகையில் பயன்படுத் தினார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களோடு இவர் கண்ட நேர்காணல் அக் காலத்தில் மிகவும் காலமுக் கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

ஆனந்தி அவர்கள் ஈழத் தமிழ் பெண்களின் ஓர் ஆளமை யாகவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர். ஓய்வு பெற்ற பின்னர் அனைத்துலகத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டவர். பல இளைய தமிழ் ஊடக வியலாளர்களுக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

இவர் ஆற்றிய பணி காலத்தால் நிலைத்திருக்கும் என்பது திண்ணம். அவருக்கு எமது மரியாதை வணக்கம்!

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்






# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.




**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.






Reward Points




WWW.MYEVERYDAYSHOPPING.COM

# அலைகள் ஓய்வதில்லை...



***இது தமிழீழத்தில் வெளியான சிறுகதை. சிங்கள் ஆக்கிரமிப்புப் படையின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் குடாநாட்டில் இருந்து வெளிவந்த கதை என்பது இரட்டிப்பான தாக்கத்தைத் தருகின்றது. இது கற்பனைக் கதையா? உண்மைக்கதையா? இனம்பிரித்து அறியமுடியவில்லை. உணர்வுகளின், உறவுகளின் பின்னலாகி, கதை இதயத்தை நெருடுகின்றது. கண்களை ஈரப்படுத்துகின்றது.***

அண்ணா எழுதியிருந்த கடிதத்தை மீண்டுமொரு முறை வாசித்தேன்.

அன்புடன் தம்பிக்கு !

நான் முன்புபோல இவ்விடம் வரமுடியாது. அப்படிவரச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் உவ்விடம் வந்து நிம்மதியாகத் தங்கியிருப்பது சாத்தியமில்லை. நீ கவனமாகப்படி. அம்மா அப்பாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருப்பதை நீ அறிவாய். எனவே நீ வேறு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம். மேலும் அம்மாவிற்கு இக்கடிதத்தைக் காட்ட வேண்டாம். அவ அழுது கொண்டிருப்பா. அப்பாவின் புகையிலைத் தோட்டம் இந்த முறை நல்ல பயனைத் தரும் என நினைக்கிறேன். அசோகன் இறந்ததுதான் எனக்குத் தாங்கமுடியாமற் போய்விட்டது. அவனுடைய செத்த வீட்டைக்கூட கொண்டாட முடியாத பரிதாபநிலையை அறிந்து உள்ளம் வெதும்பினேன். மீணடும் சந்தர்ப்பம் கிடைத்தால் மடல் வரைவேன். ஆனால் அதுவும் நிச்சயம் இல்லை. இந்தக் கடிதம்கூட மாறனின் முதுகில் வைத்தே எழுதுகிறேன். எனக்கு இப்போது அம்மாவின் கையால் சோறும் கறியும் சாப்பிட வேண்டும்போல் இருக்கிறது. பெரியண்ணாவிற்கு அந்த ஆசை நிறைவேறியது. ஆனால் எனக்கு?! நீ எதற்கும் கலங்காதே! நேரம் கிடைக்கும்போது பெரியண்ணாவின் டயறியை வாசி.

இப்படிக்கு
இளையண்ணா
சுதாங்கன்

இந்தக் கடிதத்தை அம்மாவிடம் காட்டுவதா? வேண்டாமா? என என் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஏற்கனவே இரத்த அழுத்தத்தால் நிறையப் பாதிக்கப்பட்டிருக்கும் அம்மாவிற்கு எந்த ஓர் அதிர்ச்சியான செய்தியும் தெரிவிக்கக் கூடாது என மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த நிலையில் இந்தக் கடிதத்தைக் காட்டுவது சாதகமாக இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதனால் அண்ணாவின் கடிதத்தை அம்மாவிற்குக் காட்டாமல் அப்பாவிற்குக் காட்டுவதென முடிவெடுத்தேன். கடிதத்தை அப்பாவிற்குக் காட்டுவதற்குத் தோட்டம் சரியான இடம். வீட்டில் அம்மாவில் இருந்து அப்பாவைத் தனிமைப்படுத்துவதற்கான சாத்தியம் மிக மிகக்குறைவு.

நான் தோட்டத்திற்குப் போனபோது அப்பா கிணற்றடிப் பூவரசின் நிழலில் இருந்து, சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார் புகையிலைக்கன்றுகள் காற்றின் உதவியுடன் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்தன. ஐப்பசி மாதத்தில்கூட பங்குனி வெய்யில் தகித்தது. காலநிலைகூட எங்களுக்கு எதிராகத்தானே இருக்கிறது. யாரோ களைபிடுங்கும் இருவர் பேசிக் கொண்டிருந்தது தெளிவாய்க் கேட்டது.

என் காலடி ஓசை கேட்டுத் திரும்பிய அப்பா. என்னை நிதானமாகப் பார்த்தார். அவர் முகத்தில் உணர்ச்சி என்பது வறண்டிருந்தது. அப்பா அமர்ந்திருந்த சூழலில் பெரும் நிசப்தம் நிலவியது. அதைக் கலைக்க வேண்டிய தேவை அப்போது எனக்கு ஏற்பட்டது.

“அப்பா! அண்ணா கடிதம் அனுப்பியிருக்கிறார்.” என்றேன் அக்கடிதத்தை அவரிடம் நீட்டியவாறே. அந்த நேரத்தில் அவர் கண்களில் ஒரு பிரகாசத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆர்வத்துடன் அந்தக் கடிதத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கினார்.

கடிதத்தை வாசித்து முடித்த அப்பாவின் கண்கள் கலங்கியிருந்தன. “கொம்மாவுக்கு இப்ப இதைப்பற்றி ஒண்டும் சொல்ல வேண்டாம்” என்றபடி கடிதத்தை மடித்து இடுப்பில் செருகிக் கொண்டார். அந்த இடத்தில் மீண்டும் அமைதி நிலவுகிறது. அந்த அமைதியைக் கலைக்க விரும்பாதவனாய் நான் திரும்பி வீடு நோக்கி நடந்தேன்.

என்ன சுதாங்கன் யோசிக்கிறாய்? நண்பன் செவ்வேளின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தான் சுதாங்கன்.

கடைசி நேரம் அம்மா, அப்பாவின் முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கேல்ல மச்சான் என்றான். குரலில் நிறையச் சோகம் கலந்திருந்தது. சுதாங்கனின் பதில் செவ்வேளை நிறையப் பாதித்திருந்தது. அவன் அந்த இரவின் கருவானத்தை வெறித்தபடியே சொன்னான்.

உனக்கு மட்டுமல்ல எங்களில் அநேகம் பேருக்கு கடைசி நேரத்தில் இப்படி ஒரு ஆதங்கம் ஏற்படத்தான் செய்யுது. அதுக்காக வீணாய் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தால் எங்கடை இலக்கை அணுகிறதில தடங்கல் ஏற்பட்டாலும் ஏற்படும். செவ்வேளின் வார்த்தைகளைத் தொடர்ந்து அந்த இடத்தில் நிசப்தம் நிலவியது. சுதாங்கன் கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தான். அது இரவு பத்து முப்பது என மௌனமாகப் பேசிக் கொண்டிருந்தது.

நாளைக்கு இந்நேரம் நாங்கள் பிறந்ததுக்கும், வளர்ந்ததுக்கும் வாழ்ந்ததுக்கும் ஓர் அர்த்தம் கற்பிக்கப்பட்டிருக்கும் என்று சொன்ன சுதாங்கனின் குரலில் ஒருவிதமான உறுதி கலந்திருந்தது. ஆனால் அந்தக் குரலில் பயமோ, விரக்தியோ, நிச்சயமாகக் கலந்திருக்கவில்லை. செவ்வேள் சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு நிதானமாகப் பேச ஆரம்பித்தான்.

மச்சான்! கடல் எங்களுக்கு அம்மா மாதிரி. அது எங்கட குடம்பத்தின்ர வறுமையை நீக்கின தெய்வம். எனக்கு இப்பவும் ஞாபகமிருக்குது. இரவு பத்துப் பதினொரு மணிக்குத்தான் அப்பா கடலுக்குப் போவார். அப்பா மட்டுமில்ல எங்கட ஊரில கடற்தொழில் செய்யிற ஆக்கள் எல்லாம் அந்த நேரத்திலதான் கடலுக்குப் போவினம். அதுவும் நடுக்கடலுக்கு. திரும்பிவர பன்னிரண்டு ஒரு மணியாகும். அப்பர் கடலால வந்த உடனும் வீட்டில ஒரு இனம்புரியாத சந்தோசம். நெத்தலி மீன் புட்டு, விரால் மீன் குழம்பு, கும்பிளா மீன் குழம்பு, முரல் மீன் வறுவல் எண்டு விதவிதமான சாப்பாடு. அந்தச் சந்தோசமான வாழ்கை அப்பாவும் அண்ணாவும் கடலோட சங்கமமானதோட சிதைஞ்சு சின்னாபின்னமாப் போச்சு... சிறிது நேரம் தனது உணர்வுகளை வார்த்தைகளாக்குவதை நிறுத்தி பெருமூச்செறிந்தான் செவ்வேள். பின்னர் ஆவேசம் வந்தவன் போல் கூறினான்.

இவங்கள் ஆர் மச்சான் எங்கட கடலில சுதந்திரமா மீன் பிடிக்கிறதைக் கட்டுப்படுத்த? திரும்பவும் சுதந்திரமும் நிம்மதியும் நிறைஞ்ச ஒரு வாழ்வைப் பெற்றுக்கொடுத்து எங்கட மக்களை வாழவைக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதுக்காக நிறையச் சந்தோசப்படுறன் மச்சான்... நிறையச் சந்தோசப்படுறன்.

உன்னப் போலத்தான் மச்சான் நானும் நிறையச் சந்தோசப்படுறன் என்ற சுதாங்கனின் குரலிலும் ஒருவித நிம்மதியை உணரமுடிந்தது.

இளையண்ணாவின் கடிதத்தை வாசித்த பிறகு என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை.

அவருடைய முடிவு நிச்சயிக்கப்பட்டுவிட்டதை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தாலும் அது எப்போது நிகழும் என்பதை மட்டும் அறிந்து கொள்ள முடியாதிருந்தமையினால் என்மனம் துடித்துக் கொண்டிருந்தது. பெரியண்ணாவும் இப்படித்தான் ஒரு நாள் எதிர்பாராத விதமாக வீட்டுக்கு வந்தார்.

நான் ஒரு கிழமைக்கு இஞ்சதான் நிக்கப்போறன். அவர் இவ்விதம் சொன்னதும் அம்மா அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

“ஏன் தம்பி லீவோ?” அப்பா கேட்டார்.”




”ஓமப்பா லீவு மாதிரித்தான்” பெரியண்ணாவின் பதிலில் ஏதோ ஒன்று மறைந்திருந்தது.

“டேய் ஆனந்தன் இஞ்சவா” பெரியண்ணா என்னை பாசத்தோடு அழைத்தார். எனக்கு அவரது தோற்றத்தைப் பார்க்கப் பயமாக இருந்தது. நிறையத் தாடி வளர்த்திருந்தார். கண்கள் சிவந்து போயிருந்தன.

“இப்ப எந்த வகுப்புப் படிக்கிறாய்?” எனத் தலையைத் தடவிய படி கேட்டார்.

“நாலாம் வகுப்புப் படிக்கிறன்” என் பதிலில் பயம் கலந்திருந்தது.

“இந்த முறை நீ எத்தனையாம் பிள்ளை?” அவர் ஆர்வத்துடன் கேட்ட மாதிரி எனக்குத் தோன்றிற்று.

“முதலாம் பிள்ளை” நான் கொஞ்சம் பெருமைப்பட்டு பதிலளித்தேன்.

“கெட்டிக்காரன். இப்படி ஒவ்வொரு முறையும் வரவேணும் என்ன?” அவருடைய பாராட்டுதலும் வேண்டுதலும் என்னை உற்சாகப் படுத்திற்று. நான் “சரி” எனத் தலையசைத்தேன். எனக்கு இப்போது பெரியண்ணாவுடன் கதைக்கத் துணிவு வந்தது. நெடு நேரமாக என்மனதில் எழுந்த சந்தேகமொன்றைக் கேள்வியாக்கினேன்.

“பெரியண்ணா நீங்கள் அந்த உரப்பைக்குள் என்ன சாமான் வைச்சிருக்கிறியள்?”

எனது கேள்விக்குப் பதிலாக அவர் புன்னகை ஒன்றை உதிர்த்தார். சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு சொன்னார்.

# “திரும்பவும் சுதந்திரமும் நிம்மதியும் நிறைஞ்ச ஒரு வாழ்வைப் பெற்றுக் கொடுத்து எங்கட மக்களை வாழவைக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதுக்காக நிறையச் சந்தோசப்படுறன்”

“அதுக்குள்ள இருக்கிற சாமான்தான் எங்கட உரிமையளைப் பெற்றுத் தருகிற கருவி. விளங்கிச்சுதோ?” நானும் அதை விளங்கிக் கொண்டவன் போலத் தலையாட்டினேன். ஆனால் எனக்கு அப்போது ஒன்றுமே விளங்கவில்லை. நான் பெரியண் ணாவைப் பார்த்து இன்னுமொரு கேள்வி கேட்டேன்.

“அண்ணா? நீங்கள் ஏன் இப்படி எங்கள விட்டுட்டு வேற இடம் போன நீங்கள்? நீங்கள் போன நாள் தொடக்கம் அம்மா அழுது கொண்டல்லோ இருக்கிறா?”

என் கேள்விக்கு பெரியண்ணாவிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது. பின்னர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு “உனக்குச் சித்திரா அக்காவைத் தெரியுமல்லோ என்று கேட்டார்?”

அவர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் சித்திரா அக்கா என் நினைவுத் திரையில் தோன்றினாள். அழகான கண்கள் சீரான சின்ன மூக்கு திரண்ட பளபளப்பான கன்னம், ரோசாப்பூவை நினைவுபடுத்தும் உதடுகள். இவையாவற்றினதும் தொகுப் பான அவளின் வட்ட முகம் என் மனக்கண்ணில் மின்னலடித்து மறைந்தது. சித்திரா அக்கா முன்பெல்லாம் அடிக்கடி வீட்டிற்கு வருவாள். பெரியண்ணாவுடன் தனியாக இருந்து சிரித்துக் கதைப்பாள். அம்மாவும், அப்பாவும் கூட ஒருநாள் அவர்கள் இருவரையும் சேர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, நல்ல சோடிப் பொருத்தம் என்று சொன்னதும் ஞாபகம் இருக்கிறது. அவள் இறந்துபோன அன்றிலிருந்து சில நாட்கள் பெரியண்ணா சாப்பிடாமல் இருந்ததும் ஞாபகம் இருக்கிறது.

ஆனால் சித்திராக்கா எப்படி இறந்து போனாள் என்பது மட்டும் அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

“என்னடா யோசிக்கிறாய்? உனக்கு சித்திரா அக்காவைத் தெரி யாதோ?” பெரியண்ணா திரும்பவும் இவ்வாறு கேட்டபோது தான் நான் நினைவுகளில் இருந்து விடுபட்டேன்.

“தெரியும் நல்லாத் தெரியும்” நான் பதிலளித்தேன்.

“அவாவை சிங்கங்கள் கடிச்சுச் சாகடிச்சுப் போட்டுது. அந்தச் சாக்காட்டின சிங்கங்களை வேட்டையாடத்தான் நான் இப்படி உங்களை எல்லாம் விட்டுட்டு காட்டுக்குப்போனனான்.” பெரி யண்ணாவின் பதில் எனக்குத் திருப்தி அளிப்பதைப் போலத் தோன்றிற்று.

“டேய் வெளியால போய் விளையாடு பாப்பம். பெரிய மனிசன் மாதிரி கேள்வி கேட்டுக் கொண்டு” இளையண்ணா என்னை அதட்டினார்.

“அவனைக் கலைக்காதை. அவன் நிக்கட்டும்.” பெரியண்ணா அன்பான குரலில் இளையண்ணாவிற்கு சொன்னார். ஆனால் நான் அங்கே தொடர்ந்தும் நிற்காமல் வெளியில் விளையாடப் போய்விட்டேன்.”

“அம்மா, உன்ர கையால கொஞ்சம் சோறு குழைச்சுத் தீத்தி விடுறியே. இதுதானே நான் இங்க தங்கி நிக்கிற கடைசி இரவு.” பெரியண்ணா தான் திரும்பிப் போவதற்கு முதல் நள்ளிரவு அம்மாவை இவ்வாறு கேட்டார்.
“அப்பு நாளைக்கு உண்மையாப் போப்போறியே?” என்று கேட்ட அம்மா சிறிது நேரம் மௌனமாக அழுதாள். பின்பு பெரி யண்ணா கேட்டபடியே சோறு குழைத்து ஊட்டிவிட்டாள். அதன் பின்னர் சிறிது நேரம், அம்மாவின் மடியில் அவர் படுத்திருந் தார். அவர் அவ்விதம் படுத்திருந்ததைப் பார்க்க அப்போது எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. ஆனால் இப்போது அதை நினைத்துப் பார்க்கும்போது ஓர் இனம் புரியாத வேதனை தொண்டையை அடைக்கும். அன்றுதான் பெரியண்ணாவைக் கடைசியாகப் பார்த்தேன். அதன்பின் தொடர்ந்து வந்த சில நாட்களில் அவர் காற்றோடு கலந்த செய்தி மட்டுமே கிடைத்தது.

அந்தத் தகவல் அம்மாவுக்குத் தெரிந்ததும் மயக்கமுற்று வீழ்ந் தாள். அதன்பின் ஆறேழு நாட்கள் அவள் நிலை கவலைக்கிட மாக இருந்தது. அந்த நாட்களில், குழாய் மூலமான குளக் கோஸ்தான் அவளது உணவாக இருந்தது. பின்னர் படிப்படி யாகத் தேறிவிட்டிருந்தாள்.

பெரியண்ணாவின் சம்பவத்திற்குப் பிறகு சிலகாலம் சாதாரண மாகவே கழிந்தது. தமிழன் வாழ்வில் அசாதாரண சம்பவங்கள் நிறையவே நிகழ வேண்டுமென விதியிருக்கும்போது, நாங்கள் மட்டும் என்ன அதற்கு விதிவிலக்கா?! அன்றொருநாள் புயல் வேகத்தில் வந்த குண்டு வீச்சு விமானங்கள் சாவகச்சேரி சந்தைப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டு தமது சுமைகளை கவலை யில்லாமல் கண்மூடித்தனமாக இறக்கிவிட்டுப் போனதில் பலர் சதைத் துண்டங்களாகச் சிதறிப் போயிருந்தனர். இதைப் பார்த்துவிட்டு வந்ததிலிருந்து இளையண்ணா சாப்பிடவில்லை. எதையும் விரக்தியாகப் பார்த்தபடியிருந்தார்.

“தம்பி, சாப்பிட வாவன்” அம்மாவின் அழைப்பிற்கு எந்தப் பதிலும் தராமல் கற்சிலை போல இருப்பார். சில நேரங்களில் அம்மாவின் அழைப்பிற்கு, “எனக்குப் பசிக்கேல்ல” என்ற உணர்ச்சிகளற்ற குரலில் பதில்வரும். சாப்பிடும் நேரங்களில் கூட யோசித்துக் கொண்டிருப்பார். இந்த நிலை சில நாட்கள் நீடித்தது. திடீரென ஒருநாள் இளையண்ணா காணாமல் போனார். பெரியண்ணாவின் மறைவினால் ஏற்பட்ட வேத னைகளையும் சேர்த்து வைத்திருந்த அம்மா கதறி அழுது களைத்துப் போனாள்.

சிறிது நாட்களின் பின்னர் இளையண்ணாவிடமிருந்து ஒரு குறிப்புக் காகிதம் வந்திருந்தது. நான் நலமாயுள்ளேன். என்னை நினைத்து யாரும் கலங்க வேண்டாம்.

- சீலன்.

இந்தச் சிறு குறிப்பு அம்மாவின் வேதனைகளைக் குறைப் பதற்கு உதவியாக இருந்தது. தொடர்ந்து வந்த நாட்களில் அவரிடமிருந்து அவ்வப்போது கிடைக்கப்பெற்ற பெருமடல் களும், சிறுமடல்களும் அம்மாவின் துயரத்தைப் படிப்படியாகக் குறையச் செய்திருந்தன. ஐந்தாறு தடவைகள் அண்ணாவும் வீட்டிற்கு வந்து போனார். இதன் பிறகு அம்மா துயர மனைத் தையும் மறந்து இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தாள். தொண் ணூற்றைந்தில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்வதற்கு முன்னர் அண்ணா வீட்டிற்கு வந்துபோனார். அதன்பின் வர வேயில்லை. இடையிடையே கடிதங்கள் வரும். தொடர்ந்து வந்த நாட்களில் கடிதங்கள் வரவும் வெகுவாகக் குறைந்து போய்விட்டன.

இப்போது கிடைத்திருக்கும் கடிதம்தான் அனேகமாக அவரது இறுதிக்கடிதம் என நினைக்கிறரேன். இனி ஒருபோதும் இளையண்ணாவைக் காணமுடியாது என்பதை என்னால் நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது. என்னால் எனக்கு எந்த ஆறுதலும் கூற முடியவில்லை. சொல்ல முடியாத வேதனை மனத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறது. கண்கள் என்னை யறியாமலே ஈரமாகிவிட்டிருந்தன. ஒரே வயிற்றில் பிறந்தே இத்தகையநிலை என்றால் அந்த வயிற்றில் அண்ணாவைச் சுமந்த அம்மாவின் நிலை எவ்விதம் இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. அம்மா இனிவரும் நாட்களில் கிடைக்கப்போகும் செய்தியை எவ்விதம் தாங்கிக் கொள்ளப் போகிறாள்? அதுவும் கதறியழக்கூட அனுமதிக்கப் படாத இந்தச் சூழ்நிலையில், நான் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தேன். படிப்பதற்குக்கூட மனம் இடம் தரவில்லை. எங்கேனும் வெகுதொலைவில் வெடியோசை ஏதாவது கேட் கிறதா எனக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டே யிருந்தேன்.

பெரியண்ணாவின் டயறியை வாசிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அந்த எண்ணத்தைச் செயற்படுத்த சில மணித்தியாலங்களைச் செலவழிக்க வேண்டியிருந்தது. அதற் குப் பெயர்தான் டயறியே தவிர அதன் பக்கங்கள் எல்லாம் கவிதைகள் மாத்திரம் நிரம்பியிருந்தன. முதற்பக்கத்தை விரித்தேன்.

உலகிலுள்ள மனிதன் எவனையும் கவிஞராக்கிவிடக்கூடிய விஷயங்கள் இரண்டு. ஒன்று காதல். இன்னொன்று உரிமைப் போராட்டம் என் எழுதப்பட்டிருந்தது. டயறியின் கடைசிப்பக்கத் தைப் பார்க்கவேண்டும் என ஒரு உந்துதல் எழுந்தது. கடைசிப் பக்கத்தைப் புரட்டினேன்.

**நேற்று என் நண்பன்**
**இன்று நான்**
**நாளை என் சகோதரன்**
**இவ்விதம் தொடர்ந்து கொண்டே இருக்கும்**
**அலைகள் ஓய்வதில்லை.**

முத்தான எழுத்துக்களில் ஓர் உணர்ச்சிமிக்க புதுக்கவிதை. நான் அந்த டயறியை மேலும் புரட்டிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு தூரத்தில் ஒரு வெடியோசை எழுந்து மறைந்தது. என் இதயம் அசா தாரண நிலையில் துடித்துக் கொண்டிருந்தது. நான் அந்த டயறியை மூடிவைத்துவிட்டு கண்களை மூடி இறைவனை வேண்டினேன். இறைவா!, இனிவரும் நாட்களில் அறியப் படவிருக்கும் துக்கச் செய்தியைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மனஉறுதியை என் தாய்க்கு வழங்கி அவளை ஆறுதல்ப் படுத்து.

-களத்தில் 30.03.2000



# யாழ்ப்பாணமே உனது பசி எது? தாகம் எது?

09.03.2025

அண்மையில் பலாலி வீதியில் பல்கலைக்கழகத்தில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் ஓர் உயர்தர உணவகம் திறக்கப்பட்டதுஅதன் பெயர் ‘டெலிஸ்’ .அதற்குச் சில கிழமைகளுக்கு முன்பு அதே பலாலி வீதியில் மற்றொரு உயர்தர உணவகம் –காலித் பிரியாணி –திறக்கப்பட்டது. முன்சொன்ன உணவகத்தில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் இந்த உணவகம் உண்டு. இந்த இரண்டு உணவகங்களும் திறக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணம் நகரத்தின் மையத்தில் முன்பு வெலிங்டன் தியேட்டர் அமைந்திருந்த வளவிற்குள் ‘கீல்ஸ்’ பேரங்காடி திறக்கப்பட்டது.திறக்கப்பட்ட நாளிலிருந்து இரவும் பகலும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு குவிகிறார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில், வேம்படிச் சந்திக்கு அருகாக உள்ள சூழலில் உயர்தர உணவகங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. பீட்சா கடைகளில் இருந்து பிரியாணி கடைகள் வரை பல்வேறு வகைப்பட்ட உணவகங்கள் மிகக்குறுகிய தூர இடைவெளிக்குள் உண்டு.

இந்த உணவகங்கள் தவிர இவற்றிற்கு முன்னரே திறக்கப்பட்ட உயர்தர விருந்தினர் விடுதிகள் உண்டு. அங்கேயும் இரவில் நூற் றுக்கணக்கானவர்களைக் காணமுடியும். அவரவர் அவரவர் நுகர்வுக் கொள்ளளவுக்கு ஏற்ப உணவகங்களை நாடிச் செல்கிறார்கள்.




ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான தமிழ்ச் சமூகத்தில் நுகர்வுத் தாகம் அதிகரித்து வருவதை; ஒரு நுகர்வு அலை எழுந்திருப்பதை பல ஆண்டுகளுக்கு முன்னரே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த நுகர்வுப் பசியும் தாகமும் அதிகரித்துச் செல்கின்றன. போரினால் மூடப்பட்டிருந்த ஒரு சமூகம் வெளியுலகத்துக்குத் திறந்து விடப்படுகையில் நுகர்வுத்தாகமும் பசியும் அதிகமாக இருக்கும். புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவிகள் மட்டும் இதற்குக் காரணமல்ல. ஆயுத மோதலுக்கு பின்னர் தமிழ்மக்கள் தமது வாழ்க்கையைப் படிப்படியாகக் கட்டியெழுப்பி வருகிறார்கள் என்பதன் குறிகாட்டிகளில் ஒன்றாக மேற்படி உயர்தர உணவகங்களின் பெருக்கத்தைக் கூறலாம்.

ஒரு மாற்றத்திற்காக வெளியில் போய்ச் சாப்பிட விரும்புகிறவர்கள்; அல்லது வித்தியாசமாகச் சாப்பிட விரும்புகிறவர்கள்; அல்லது கூடியிருந்து சாப்பிடுவதைக் கொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறு உயர்தர விருந்தகங்களை நோக்கிப் போகிறார்கள்.

வசதிபடைத்த மேல்நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமல்ல அன்றாடம் உழைப்பவர்கள் அதிகமுடைய கிராமங்களிலும் கூட இரவு உணவுக்காக பேக்கரிகளில் தங்கியிருக்கும் ஒரு நிலையைக் காணலாம். உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன்பு உரும்பிராயில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஸ்தாபகருடைய நினைவு தினத்தைக்  கொண்டாடுவதற்காக போயிருந்தோம். பெருமாளவிற்கு அன்றாடம் உழைப்பவர்களைக் கொண்ட ஒரு கிராமம் அது. நாங்கள் அங்கேயிருந்த சுமார் 5 மணித்தியால காலப்பகுதிக்குள் 8 பேக்கரி வாகனங்கள் அப்பகுதிக்குள் வந்துபோயின. அவற்றுள் சில ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வந்தன. அந்த கிராமத்தவர் ஒருவரிடம் கேட்டேன், “இவ்வளவு அதிக தொகையாக பேக்கரி வாகனங்கள் வருகின்றனவே அந்த அளவுக்கு நுகர்வு உண்டா? என்று. அவர் சொன்னார்,” ஓம் பெருமளவுக்கு உடல் உழைப்பாளிகளாகிய எமது கிராமத்தவர்கள் இரவுகளில் ஆறதலாக இருக்க விரும்புகிறார்கள். இரவில் சமைப்பதைவிடவும் இந்த பேக்கரி உணவுகளை வாங்கினால் பெண்கள் ஆறதலாக இருந்து திரைத்தொடர்களைப் பார்க்கலாம்” என்று சொன்னார்.

சமையல், பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்ட ஒரு  கடமை என்று கருதும் ஒரு சமூகத்தில் இவ்வாறு விருந்தகங்களுக்குப் போவதன் மூலம் பெண்களுக்கு ஆறுதல் கிடைக்கும். பொதுவாக கிழமைக்கு ஒரு நாளிலாவது அல்லது ஒரு நாளில் ஒரு வேளையாவது சமையாமல் இருப்பதை பெண்கள் பெருமளவுக்கு ஆறுதலாகக் கருதுகிறார்கள்.

எனினும் இவ்வாறு உணவை கூடியிருந்து சாப்பிடுவதை ஒரு கொண்டாட்டமாகக் கருதும் பலரும், உயர்தர உணவகங்களில் உணவுக்கு ஓர்டர் கொடுத்துவிட்டு, மேசையைச் சுற்றியிருந்த அவரவர் அவரவருடைய கைபேசியை நோண்டிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். ஒன்றாக உட்கார்ந்து உணவைச் சுவைப்பது ஒரு கொண்டாட்டம். அந்த கொண்டாட்டத்துக்குள்ளும் கைபேசி ?




மேற்சொன்ன உயர்தர உணவகங்களில் ஒரு தொகுதி கோர்ப்பரேட் வலப்பின்னலுக்குள் வருபவை. உதாரணமாக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் ஆர்ஆர் பிரியாணி இந்தியாவை மையமாகக் கொண்டது. அதற்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் கிளைகள் உண்டு. அடுத்ததாக காலித் பிரியாணியும் சென்னையை மையமாகக் கொண்டது. பெருந்தொற்று நோய்க் காலத்தில் மூவர் இணைந்து உருவாக்கிய உணவகங்களின் சங்கிலி வலையமைப்பு அது.

கோப்பரேட் உணவகங்கள் உலகப் பொதுவான கோப்பரேட் சுவையைப் பரப்புகின்றன. யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான சனாதனன் கூறுவார் எல்லா பேரங்காடிகளுக்கும் ஒரே மொழிதான் என்று. அங்குள்ள தட்பவெட்பம், அங்கு மென்மையாகத் தவழும் இசை, உணவு வேகும் வாசம் போன்ற எல்லாமும் உலகின் எல்லாப் பேரங்காடிகளுக்கும் ஒரே மாதிரியானவைதான். அப்படித்தான் கோப்பரேட் உணவகங்களும் உலகப் பொதுச் சுவையை பரப்புகின்றன.

ஆனால் இதனால் உள்ளூர் சாப்பாட்டுக் கடைகள் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன என்று கூறமுடியாது. ஏனென்றால் உள்ளூர் சாப்பாட்டுக் கடைகளில் வழமையாக உணவு அருந்துபவர்கள் எப்பொழுதும் அங்கே போவார்கள். ஒரு குறிப்பிட்ட பிரிவினர்தான் உயர்தர உணவகங்களை நோக்கியும் குறிப்பிட்ட சில பேரங்காடிகளை நோக்கியும் போகிறார்கள்.

“உயர்தர உணவகங்களில் பிரியாணி வகை உணவைச் சாப்பிடுவது என்பது ஒரு அந்தஸ்தை, சமூகத் தராதரத்தை காட்டும் விடயம்” என்று கனடாவில் வசிக்கும் கீதா சுகுமாரன் கூறுகிறார். அவர் உணவுப் பண்பாட்டை தனது கலாநிதிப் பட்ட ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டவர். பிரியாணி என்பது எல்லா விதமான பொருட்களும் கலந்து சமைக்கப்படும் ஓர் உணவு. விருந்துகளில் அது அந்தஸ்தைக் குறிப்பது. பிரியாணிக் கடைகளில் சாப்பிடுவதை ஒரு சமூக அந்தஸ்தாக கருதும் ஒரு பிரிவினர் அங்கே போகிறார்கள். என்றும் அவர் கூறுகிறார்.

ஆனால், அதனால் உள்நாட்டுச் சுவையும் உள்நாட்டு உண



வும் கைவிடப்படுகின்றதா? இல்லை. அவ்வாறெல்லாம் ஏங்கத் தேவையில்லை. வீடுகளில் இப்பொழுதும் உள்நாட்டு சமையல் தான். உள்ளூர் சுவைதான். ஒரு வித்தியாசத்துக்காக, ஒரு மாற்றத்திற்காக அல்லது தமது அந்தஸ்தைக் காட்டுவதற்காக பிரியாணிக் கடைக்கு போகின்றவர்கள் வாழ்க்கை முழுவதும் பிரியாணிக் கடைகளிலேயே சாப்பிடுவதில்லை. அவ்வாறு தினசரி பிரியாணிக் சாப்பிடுகிறவர்கள் யாழ்ப்பாணத்தில் அந்தக் கடைகளில் இருந்து குறுகிய தொலைவில் காணப்படும் தனியார் ஆஸ்பத்திரிகளில் தங்களுடைய கொலஸ்ட்ரோலைக் கரைப்பதற்கான சிகிச்சைகளையும் பெறுகிறார்கள். அதாவது ஒரு கோப்பரேட் கொலஸ்ட்ரோலை விற்கிறார். ஒரு கோப்பரேட் கொலஸ்ட்ரோலைக் கரைக்கிறார். ஆக மொத்தம் கோப்பரேட்களின் ஆய்வு கூடமாக மாற்றப்பட்ட உள்ளூர் உடல் ?


















கோப்பரேட் சுவை என்பது உலகப் பொதுவானது. உள்ளூர்ச் சுவை என்பது அதிகம் தேசியத் தன்மை மிக்கது. ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பண்பாடு. பொதுப் பண்பாட்டுக்குள் உணவுப் பண்பாடும் அடங்கும். எனவே உணவுப் பண்பாடானது ஒரு மக்கள் கூட்டத்தின் தேசியத் தனித்துவங்களில் ஒன்றாகக் கருதத் தக்கது. 1966இல் மேதினத்தன்று இடதுசாரிகள் தமிழ்மக்களுக்கு எதிராக எழுப்பிய கோசத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். "தோசே மசால வடே அப்பிட்ட எப்பா". இது தமிழர்களை அவர்களுடைய உணவுக்கூடாக விழித்த ஒரு கோஷம். தோசையும் மசாலா வடையும் வேண்டாம் என்று பொருள். அதாவது தோசையும் வடையும் அங்கே தமிழ் மக்களின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டன.

ஈழத் தமிழர்கள் மத்தியில் வடக்கிலும் கிழக்கிலும் வித்தியாசமான உணவுப் பண்பாடுகள் உண்டு. வடக்கில் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே வித்தியாசங்கள் உண்டு. யாழ்ப்பாணத்திலேயே வடமாராட்சி, தீவுப் பகுதிக் கிடையே வித்தியாசமான உள்ளூர் உணவுப் பண்பாடுகள் உண்டு. ஒரு தேசிய இனத்தின் உள்ளூர் உணவு பண்பாட்டுக்குள்ளேயே பல வகைகள் உண்டு. அவை எக பரிமாணத்தைக் கொண்டவை அல்ல. இந்தப் பல்வகைமையின் திரட்சிதான் ஈழத் தமிழர்களுடைய பொதுவான உணவு பண்பாடாகும். உலகில் தூய உணவுப் பண்பாடு என்று ஒன்று கிடையாது என்று கீதா சுகுமாரன் கூறுகிறார். எல்லா உள்ளூர் உணவுப் பண்பாடுகளும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்தவைதான்.

இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே கோப்பரேட் உணவுப் பண்பாட்டையும், உள்ளூர், தேசியத் தனித்துவம்மிக்க உணவுப் பண்பாடுகளையும் பார்க்க வேண்டும்.

ஆயுத மோதல்களுக்கு பின்னரான நுகர்வுப் பசி, தாகம் என்பவற்றின் பின்னணியில் ஒரு தேசமாக திரள்வதன் மூலம் மட்டுமே தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தமிழ்ச் சமூகமானது, தனித்துவம் மிக்க தனது சொந்தச் சுவையைக் குறைத்து மதிப்பிட்டு, அதை "லோக்கலானது" என்று இகழ்ந்துவிட்டு, கோப்பரேட் சுவை மீது பசி தாகமுடையதாக மாறிவிடுமா ?

கோப்பரேட் உணவகங்களின் பெருக்கத்தின் மத்தியில் உள்ளூர்த் தனித்துவங்களைப் பாதுகாப்பதை ஒரு வாழ்க்கை முறையாக, பெருமைக்குரிய வாழ்க்கை முறையாகக் கட்டமைப்பது என்பது ஒரு சமூகத்தின் அரசியல் சமூக பண்பாட்டுத் தலைமைத்துவங்களின் வேலை. அது தொடர்பாக அந்த சமூகத்தின் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புக்கள் மத்தியில் பொருத்தமான விழிப்பும் தூரநோக்கிலான அரசியல் தரிசனங்களும் இருக்க வேண்டும். துறைசார் அறிஞர்கள் இது தொடர்பான கற்கைகளை காஸ்ரோ நஷனலிஸம் (Gastro nationalism)என்று அழைக்கிறார்கள்.

ஈழத்தமிழர்கள் புலப்பெயர்ச்சி காரணமாக ஏற்கனவே உலகமயப்பட்டு விட்டார்கள். தாங்கள் உலகமயப்பட்டு விட்டதாகக் காட்டிக்கொள்வதை ஒரு பகுதியினர் பெருமையாகவும் கருதுகிறார்கள்.

தமிழ்மக்கள் பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தை கொண்டவர்கள். பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு சமூகம் தன்வசமிழந்து தனது தனித்துவங்களை 'லோக்கல்' ஆனவை என்று இகழ்ந்து எதிர்ப்பின்றி உலகப் பொதுப் பண்பாட்டுக்குள் கரைந்துவிடாது. ஆனால் ஒரு சமூகத்தை தோற்கடிக்க விரும்பும் சக்திகள் அந்தச் சமூகத்தின் பண்பாட்டுத் தனித்துவத்தையும் செழிப்பையும் அதைவிட பலமான ஒரு பண்பாட்டிற்குள் கரைத்து விட முயற்சிக்கும். எனவே அதை எதிர்கொள்வதற்கான சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு விழிப்பு என்பது கலெக்டிவ் ஆனது. அரசியல் தலைமைகளால் முன்னெடுக்கப்பட வேண்டியது. கோப்பரேட் சுவையைப் பரப்பும் உயர்தர உணவகங்களுக்கு நிகராக உள்ளூர்ச் சுவையை, உள்ளூரில் தனித்துவமான உணவுப் பண்டங்களை உலகத் தரத்துக்கு உற்பத்தி செய்வதற்கு தமிழ் மக்களிடம் வளம் இல்லையா?

உள்ளூர் நண்டுக் கறி, உளளூர் றால்கறி, உள்ளூர் பிரட்டல், உள்ளூர் பொரியல், உள்ளூர் சுண்டல், உள்ளூர் கீரை, உள்ளூர் ஒடியல் கூழ், உள்ளூர் பலகாரம்... என்று தமிழ் மக்களின் தேசிய தனித்துவங்களை வெளிப்படுத்தும் உணவுச் சாலைகளை கட்டியெழுப்ப உளளூரிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள முதலீட்டாளர்கள் முன் வர வேண்டும்.

சூழலியலாளர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவார்கள். உள்ளூர் மரங்களில்தான் பறவைகள் கூடுகட்டும். பூச்சி புழுக்களும் அந்த மரங்களைத்தான் மொய்க்கும். அவற்றுக்குத் தெரிகிறது உள்ளூர் மரம் எது? "ஹைபிரிட்" மரம் எது? என்று. பண்பாட்டுச் செழிப்பு மிக்க தமிழ் மக்களுக்கும் அது தெரியும். தமது சுவை எது? கோப்பரேட் சுவை எது என்பது. பண்பாட்டு விழிப்பில்லாமல் தேசிய விழிப்பு இல்லை.

நன்றி: நிலாந்தன்

**எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை, ஒழுக்கம் – வழிகாட்டும் வகையில் வாழும் வாழ்க்கை – இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணமாகும்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# பகை சிலிர்க்கும் நெஞ்சுரம்

## கல்முனை நகரில் நடந்த உண்மைச் சம்பவம்



கல்முனையில் பாடசாலை பிரதான இடம். உபகரணங்களுக்கும் அலங்காரப் பொருட்களுக்கும் பேரான கடை. அந்தக் கடையை அண்மித்து, விசேட அதிரடிப் படையின் ஒரு 'ட்ரக்' வண்டி நின்று கொண்டிருந்தது. நான்கு பக்கமும் மூடப்படாமல் திறந்திருந் தாலும், அவ் வண்டியின் ஒரு பக்க இருக்கையில் அழுக்குத்துணி ஒன்றினால் போர்த்தியபடி - ஒரு முண்டம் அத் துணிக்குள் மறைந்திருப்பது, இதுவரைக்கும் எவருக்குமே தெரிய வரவில்லை.

1985ஆம் ஆண்டில் ஒருநாள் - காலை 7.00 மணியிலிருந்து இயக்க உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு, கடையருகில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடையினுள் சாதாரண உடையில் விசேட அதிரடிப் படையினர் பதினைந்து பேர் வரை மறைந் திருக் கின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

தேசத்துரோகியின் சொற்படி அதிரடிப் படையினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்மாறை மாவட்ட - கல்முனைப் பிராந் திய அமைப்பாளராக இருந்த விஸ்வத்தின் வரவை எதிர் பார்த்து இருக்கின்றார்கள் என்பது யாருக்குத்தான் தெரியும்?

விஸ்வம் ஆம்! அவன் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவன். தாய் இவன் சிறுவனாக இருக்கும்போதே இறந்து விட்டாள். தந்தை சகோதரர்கள் உண்டு. கண்டவர் மெய் மறந்து நிற்குமளவுக்கு ஓவியம் வரைவதில் இவனுக்கு நிகர் இவனே.

இவன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலம் - 1976ஆம் ஆண்டு - தன் வீட்டில் வைத்து தேசியத் தலைவரை அழகாக வரைந்து விட்டான். அன்று கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த எஸ். நவரட்ணராஜா, இவனது பக் கத்து வீட்டிற்கு குற்றவாளி ஒருவரைப் பிடிக்கப் பொலிசாருடன் நடந்து வந்தபோது, இவன் வரைந்திருந்த தேசியத் தலைவரின் படம் அவனது கண்களில் தென்பட்டு, அப்படத்தை எடுத்துச் செல் லுமுன், படம் வரைந்த கருணாநிதியை (விஸ்வம்) பொலிஸ் நிலையம் வரும்படி கட்டளையிட்டு விட்டுச் செல்கின்றான்.

மறுநாள், கல்முனைப் பொலிஸ் நிலையம் சென்ற விஸ்வம், பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி நவரெட்ணராஜாவால் எச் சரிக்கப்படுகின்றான். தான் ஓவியன் என்றும் தான் வரைந்த ஓவியங்கள் பல இடங்களில் இருப்பதாகவும், தினசரிப் பத் திரிகையொன்றில் வந்த இப்படத்தை வரைய நினைத்து வரைந்ததாகவும் எடுத்துக் கூறுகின்றான் விஸ்வம். பின் வெளிவருகின்றான்.

அன்று இவன் ஓவியம் வரைந்தே தன் குடும்பத்தின் கஸ்ரத்தைப் போக்கியவன். விடுதலைப் புலிகளில் டேவிட் ஐயா மூலம் இணைந்தான். காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணி வரையில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், உறுப் பினர்களை கல்முனையில் உள்ள உணவகத்தில் சந்தித்து உரையாடிய பின்தான். ஏனைய கிராமங்களுக்குச் செல்வது இவனது அன்றாட வழக்கம்.

அன்று கல்முனைப் பொது நூலகத்தில் மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளராக இருந்த கப்டன் பிரான்சிசை அழைத்து, கருத்தரங்குகள் மூலம் விளக்கம் கொடுப்பதும் புதிய உறுப்பினர்களை அழைத்து அவர்களுக்கு விளக்கமளிப்பதும் இவனது இடைவிடாத சேவைகளில் ஒன்று.

**அன்று, அந்தக் களம் வென்ற வேங்கை விஸ்வத்தின் உயிரற்ற உடல், கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பின்னால் ரயருடன் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது.**

நாட்கள், மாதங்களையும் கடந்து வருடத்தையும் கடந்து கொண்டிருக்கின்றன.

இளைஞன் ஒருவனின் கழுத்தில் கறுப்பு அல்லது சிவப்பு நாடாவைக் கண்டால், அவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொத்துவில், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பொறுப் பாளர்களிடம் ஆலோசனை கேட்பதும் வழக்கம். அதுவும் பேரூந்தில் இவனது பயணம் தொடரும்.

அன்றாடம் வாகனங்களையும் பிரதான பாதையூடாக வரு வோரையும் விசேட அதிரடிப் படையினர் பிடித்துச் சோதிப்பது வழக்கம். இவன் மிகச் சாதுவானவனாகவும் இயக்கத்தைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்பவனைப் போலவும் தன் முகபாவங்களைக் காட்டியவனாக நடப்பான். அதிரடிப் படை யினர் இவன் சந்தேகத்திற்குரியவன் எனப் பார்ப்பதில்லை! ஆனால் எந்த நேரத்திலும் தான் எதிரியிடம் பிடிபடலாம், அப்படிப் பிடிபட்டால் இயக்கத்தின் சட்டதிட்டப்படி சயனைட் அருந்தவும் தயங்காதவன். அதற்கேற்றாற் போல் டேவிட் ஐயா கொடுத்த 'சயனைட்'டை தன் சட்டைத் தலைப்பில் மறைத்து வைத்திருந் தான். அதனை எந்தச் சிரமமுமின்றி உபயோகப்படுத்தவும் வசதியாக அமைத்திருந்தான்.

### 1985ஆம் ஆண்டின் ஒருநாள்!

கல்முனைப் பிரதான பாதையில் அனைத்தும் வழமைபோல் நடை பெறுகின்றன. தொழிலாளர்கள், வியாபாரிகள், பாட சாலை மாணவ - மாணவிகள் தங்கள் தங்கள் அன்றாடச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அம்பாறை மத்திய முகாம் பகுதியிலிருந்து தனது அக்காவின் மகளைத் தன் சின்ன மிதிவண்டியில் ஏற்றி வந்து, கல்முனை வெஸ்லி உயர் தர பாடசாலை முன் இறக்கிவிட்டுச் செல்வான் விஸ்வம். ஆனால் அன்று சின்ன 'வான்' ஒன்றில் வந்து பாடசாலை முன் வாசலில் இறங்கிய விஸ்வம் நடந்து வருகின்றான். பாதையில் வரும் மக்களுடன் இவனது வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர் விசேட அதிரடிப் படையினர். காட்டிக்கொடுப் பவனும் வீதியால் போவோர் வருவோர் மீது தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கிறான். விஸ்வத்தின் வழமையான நடை.

# பகை சிலிர்க்கும் நெஞ்சுரம்

ஈழநாதம்
THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●
நாதம் 01 பிரமோதூத ஆவ் வைகாசி மீ 29ஆம் உ செவ்வாய்க்கிழமை (12 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 18 ஓசை 114

# வாழைச்சேனை முதல் பொத்துவில் வரை பொலிஸ் நிலையங்கள் புலிகளின் வசம்!



## கல்முனை, களுவாஞ்சிக் குடியில் மோதலில் 14 இராணுவத்தினர் மாண்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பகுதியில் பொலிஸாரின் அத்துமீறிய செயல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் பெரும்பாலானவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டன. இதைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இரண்டு வேறுபட்ட மோதல் சம்பவங்களின்போது பதின்நான்கு இராணுவத்தினர் இறந்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சிங்களப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை முஸ்லிம் வியாபாரிகளைத் தாக்கியதைத் தொடர்ந்து இப் பிரச்சினை ஆரம்பமானது. வியாபாரிகளைத் தாக்கியவர்களை புலிகள் விசாரிக்க வேண்டும் என உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களை ஒப்படைக்க நேற்றுக் காலைவரை புலிகளால் பொலிஸாருக்குக் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது.

கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்ததும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்கள் புலிகளால் முற்றுகையிடப்பட்டது.

இதையடுத்து பொலிஸ் விடுதியில் இருந்து பொலிசார் முழுமையாக வெளியேறினர். இவர்களை விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதேபோன்று வாழைச்சேனை, கல்குடா, ஏறாவூர், களுவாஞ்சிகுடி, வெள்ளாவெளி, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களும் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன. பொலிஸார் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்பொலிஸ் நிலைய முற்றுகையின் போது 300க்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட பொலிஸார் சரணடைந்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், பான்சேனை ஆகிய இடங்களில் சிங்களவரும், பொலிஸ் நிலையத்தைச் சூழ இருந்த சிங்கள வியாபாரிகளும் பாதுகாப்புடன் விமான நிலையத்தில் புலிகளால் ஒப்படைக்கப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க இதன் எதிரொலியாக ஏற்பட்ட இரு வேறு சம்பவங்களில் 14 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டனர்.

பொலிஸ் நிலைய முற்றுகை நிகழ்ந்த போது கல்முனை வாடி வீட்டிலிருந்த ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறி வந்தது. அவர்களை விடுதலைப் புலிகள் தடுத்தபோது அவர்கள் திரும்பிச் சென்றனர். பின்னர் கடற்கரை வழியாகவும், உள்வீதி வழியாகவும் கல்முனைக்குள் பிரவேசிக்க இராணுவம் முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

அதேவேளை களுவாஞ்சிக் குடி பொலிஸ் நிலையத்திற்கு எதிராகவிருந்த ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளின் தடையரண்களைத் தாண்டி வெளியேற முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்தனர்.

பின்னர் முகாம் திரும்பிய இராணுவத்தினர் முகாமில் இருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இச் ஷெல் தாக்குதலில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் உட்பட 30பேர் காயமடைந்தனர். இவர்கள் யாவரும் மட்டக்களப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த இலங்கை பொலிஸ் மா அதிபர் மட்டக்களப்பிற்கு நேற்று மாலை செல்லவிருந்ததாகக் கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"அடோவ் நில்லடா"

எதிரிதான் அழைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட விஸ்வம், அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடக்கின்றான்.

மறுகணம் சாதாரண உடையில் இருந்த பதினைந்து படையினரும் விசேட அதிரடிப் விஸ்வத்தை சுற்றி வளைத்து கை, கால், துப்பாக்கிகளால் தாக்கத் தொடங்கினார்கள். வீறுகொண்ட வேங்கையல்லவா! அதுவும் தாக்கத் தொடங்கியது.

இவனது வலது கை, இவன் பாரிய வேலைகளைச் செய்தால் தோள்மூட்டில் இருந்து விலகிவிடுவது வழக்கம். இன்னொருவர் இவனது கையைப் பிடித்து உதவினால் சரியாகி விடும்.
ஆனால் அந்த நிலை அதிரடிப் படையினரின் மத்தியில் இவனுக்கு ஏற்பட்டுவிட்டது. இவனுக்கு உதவயாருள்ளார்? கல்முனை நகரில் இக்காட்சியை மக்கள் வெள்ளம் காண்கின்றது. இவனை வளைத்தவர் எதிரிகள். விஸ்வம் தன் காலால் எதிரியொருவனின் கையிலிருந்த துப்பாக்கிக்கு அடிக்கிறான். எதிரியின் கையிலிருந்த துப்பாக்கி மேலெழுந்து விழுகின்றது.

எதிரிகள் இவனது கால், கைகளில் பிடித்து அவர்களின் 'ட்ரக்' வண்டியில் வீசி எறிகிறார்கள். வாகனத்தினுள் விழுந்து, எழுந்த விஸ்வம் அங்கிருந்த முகமூடிக்காரனின் முகத்திரையைக் கிழித்து, "தங்கமணி! தங்கமணி! எதிரிக்கு என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டான் தங்கமணி!" எனப் பல தடவைகள் உரத்த குரலில் சத்தமிடுகின்றான்.

விஸ்வத்தின் வீட்டிற்கு பின் வீடு தங்கமணியின் வீடு. இவன் அரச உத்தியோகத்தன். இவர்களின் பொதுவேலியில் இவனது அக்காவிற்கும் தங்கமணிக்கும் ஏற்பட்ட வாய்ப்பேச்சில் குறக்கிட்டுப் பிரச்சினையைத் தீர்த்தவன் விஸ்வம். "நீ. எல்.ரி.ரி.ஈ. உன் அதிகாரத்தைக் காட்டுகிறாய்! ஆனால் நான் யாரென்றும் நீ அறிவாய்" என அன்று கூறிய தங்கமணிதான், இன்று இப்படிப் பழிவாங்க வந்தானோ விஸ்வத்தை!

ஆத்திரம் கொண்டு வாகனத்தினுள் துள்ளிக் குதித்த அதிரடிப் படையினர், மீண்டும் விஸ்வத்தை தாக்கத் தொடங்கினர். இவர்களின் பிடியில் இருந்து தப்பமுடியாது என உணர்ந்த விஸ்வம், தன் சட்டைத் தலைப்பில் மறைத்து வைத்திருந்த 'சயனைட்'டை உட்கொண்டு மான மறவர் போரில் மகிழ்ந்து மடியும் வேங்கை என்பதை. வெளிக்காட்டுகின்றான்.

'சயனைட்' கடித்த விஸ்வத்தைக் கண்ட எதிரிகள், அவனது தொண்டையைப் பற்றிப் பிடிக்கின்றனர். விஸ்வம் வென்று விட்டான்!

மறுகணம், எதிரியின் வாகனம் மின்னல் வேகத்தில் கல்முனை அரசினர் வைத்தியசாலையை எட்டியது. ஆனால் விஸ்வத்தைக் காப்பாற்ற எதிரியால் முடியவில்லை.

உயிரற்ற விஸ்வத்தின் உடல்மீது மீண்டும் எதிரிகள் தாக்குதலை ஆரம்பிக்கின்றனர். இறுதியில் கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் முன் சனத்திரள்.

தலைவிரி கோலத்துடன் அக்கா அழுதுகொண்டு! உயிருக்காகக் போராடிக் கொண்டு நிற்கும் தந்தை! "எங்கள் மகனின் பிணத்




தையாவது தந்துவிடுங்கள்" கெஞ்சிக் கேட்கிறார் விஸ்வத்தின் தந்தை. ஆத்திரத்துடன் இருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இரத்னாயக்க, "இவன் பயங்கரவாதி என்று கையொப்பமிட வேண்டும்: அத்தோடு ரூபா 500 கட்டி பிரேதத்தை எடுத்துக் கொண்டு போ" எனக் கட்டளையிடுகின்றான் உரத்த குரலில்!

அன்றாடம் ஒருவேளைச் சாப்பாட்டுக்கே வழியின்றிக் கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்த விஸ்வத்தின் தந்தையோ. சகோதரியோ ரூபா 500க்கு எங்கே போவார்கள்? "அட கொலைகாரப் பாவிகள்! ஒரு விஸ்வம்தான் இன்று செத்தான். ஆனால் நூறு விஸ்வங்கள் பிறந்து, உன்னையும் உன் கூட்டத்தையும் இந்தப் பொலிஸ் நிலையத்தையும் தரைமட்டமாக்கத்தான் போகிறார்கள் அதை நான் இறப்பதற்கு முன் காணத்தான் போகிறேன்!" என்று அன்று கல்முனைப் பொலிஸ் நிலைய முன் வாசலில் கையால் அடித்து அவர் சத்தியம் செய்தார். அது 1990.06.11 ஆம் திகதி நிறைவேறியது விடுதலைப் புலிப் போராளிகளால்!

அன்று, அந்தக் களம் வென்ற வேங்கை விஸ்வத்தின் உயிரற்ற உடல், கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பின்னால் ரயருடன் சேர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அந்தப் புகை மண்டலம் சூரிய ஒளியையும் மறைத்து அன்று காலை 10.30 மணிக்கு கல்முனை நகரையே இருளாக்கியது.

ஆனால், அவன் எரிந்த இடத்தில் 1990.06.11 ஆம் திகதி, விடுதலைப் புலிப் போராளிகள், மேஜர் கஸ்ரோவின் தலைமையில் இரண்டு நிமிட நேரம் விஸ்வத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

கல்முனைச் சந்தியில் நீ!
கடமையில் நிற்கும்போது
பொல்லாத நரி எட்டப்பன்
போர்வைக்குள் வந்தான் - உன்னை
நில்லென்றார் பிடித்திழுத்தார்
நிமிர்ந்தவன் போர்வை பிய்த்தாய்!
கல்லொத்த உனது தோளால்
கயவர்களை அடித்து வீழ்த்தி
எல்லோருக்கும் வீரம் காட்டி
இறவாது புகழ் படைத்தாய். - களத்தில் 25.03.1998

# புதிய கூட்டுக்கள் பழைய பகைமைகள்?

02.03.2025



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்கித் தமிழ்க்கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புகளுக்குப் போகத் தொடங்கியுள்ளன. அதை வரவேற்க வேண்டும். கடந்த 15ஆண்டுகளில் முன்னெந்தத் தேர்தலையும் விட தென்னிலங்கைமையக் கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் எதிராக அணி திரள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கும் ஒரு தேர்தல் இது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது பெருமளவுக்கு உள்ளூர் நிலைமைகளை உள்ளூர் சாதி, சமய, வட்டார உணர்வுகளைப் பிரதிபலிப்பவை. உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்புவதற்கான ஒரு களம். ஆனால் அவை உள்ளூர்த் தலைமைகள் மட்டுமல்ல. ஒரு தேசியவாத அரசியலுக்கான அடிக்கட்டுமாணம் என்ற விளக்கத்தோடு மக்கள் மட்டக் கட்டமைப்புகளை அங்கிருந்துதான் பலப்படுத்த வேண்டும். அதாவது உள்ளூர் உணர்வுகளை அவற்றின் அசமத்துவங்களை நீக்கி தேசியக் கூட்டுணர்வாகத் திரட்ட வேண்டும். கீழிருந்து மேல் நோக்கி.

அந்த அடிப்படையில் பார்த்தால், உள்ளூர்த் தலைமைகளை எப்படித் தமிழ் தேசியப் பண்புமிக்கவர்களாக வார்த்தெடுப்பது என்பதற்கான ஒரு பயில் களம்தான் உள்ளூராட்சி மன்றங்கள். ஆனால் தமிழ்க்கட்சிகளிடம் அது தொடர்பாக தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து ஆழமான நீண்டகால நோக்கிலான விளக்கங்களும் பார்வைகளும் உண்டா ?

கடந்த வாரம் ஜனநாயகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்ட கூட்டு எனப்படுவது தேர்தல்கூட்டு அல்ல என்று கூறப்பட்டாலும் அது நடைமுறையில் ஒரு தேர்தல் கூட்டாகத்தான் காணப்படுகின்றது. அக்கூட்டுக்குள் முதலில் காணப்பட்ட இரண்டு கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் வெளியேறக்கூடிய ஆபத்துக்களை இக்கட்டுரை எழுதப்படுகையில் உணரக்கூடியதாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்கிலான கூட்டு அது என்று எடுத்துக் கொண்டால், தமிழ்த்தேசிய வாக்குகளைத் திரட்டுவதற்கான ஒரு கூட்டு என்றும் அதை வியாக்கியானப்படுத்தலாம். ஆயின் அக்கூட்டானது தமிழ்த்தேசிய வாக்குகளை கொத்தாகத் திரட்டும் சக்தி மிக்கதா ?

தமிழ்த் தேசியப் பரப்பில் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் இரண்டு விதமான ஒருங்கிணைப்பு முயற்சிகள் உண்டு. ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படுகின்ற யாப்புருவாக்க முயற்சிகளை நோக்கிய ஒருங்கிணைவு. அதில் சிறீதரன் முன்னணியோடு இணக்கமாகக் காணப்படுகின்றார். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியும் அந்த அணியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மத்திய குழுவும் அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு எதிராக இருக்கின்றன. இந்த விடயத்தில் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான தலைமைத்துவப் போட்டி முன்னணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகிறது.

இது ஏறக்குறைய பொது வேட்பாளரின்போது காணப்பட்ட ஒரு நிலை. அங்கேயும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் உட்பகையானது பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாடுகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது. ஆனால் இந்த இரண்டு விடயங்களிலும் சிறீதரன் தேசத்திரட்சிக்கு ஆதரவாக நின்றார் நிற்கின்றார். அவரைப் பொறுத்தவரை அது தவிர்க்க முடியாதது. கட்சிக்குள் அவருடைய நிலையை பலப்படுத்துவதற்கு அவருக்கு வெளிக்கூட்டுகள் அவசியம்.

சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகை கஜேந்திரகுமாரின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துவதைப் போலத்தான் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை, புதிய கூட்டு முயற்சிகளிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். அப்படித்தான் மணிவண்ணனுக்கும் கஜேந்திரக்குமாருக்கும் இடையிலான பகையுணர்வும், தவராசாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையுணர்வும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும்.

சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை எனப்படுவது பொது எதிரிக்கு எதிரான பகையுணர்வை விடவும் ஆழமானதாகவும் கூர்மையானதாகவும் வளர்ந்துவருகிறது. அதுபோலவே சிறீதரனுக்கும் சந்திரகுமாருக்கும் இடையிலான பகை என்பது பெருமளவுக்கு மாவட்டமட்டப் பண்பை கொண்டது. அதிகம் உள்ளூர் நிலைமைகளால் தீர்மானிக்கப்படுவது.

புதியகூட்டை அறிவிக்கும் முதலாவது சந்திப்பின்போது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இக்கூட்டுக்குள் சந்திரகுமார் இருக்கும்வரை சிறீதரனைக் கொண்டு வருவது கடினம் என்று சுட்டிக்காட்டப்பட்ட பொழுது, சந்திரகுமார் கூறியிருக்கிறார், பிரச்சினையில்லை சிறீதரன் இந்த அணிக்குள் வருவார் என்றால் நாங்கள் தமிழரசுக் கட்சியோடு போகிறோம் என்று. கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகையும் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பகையும் அங்கே புதிய சேர்க்கைகளைத் தீர்மானிக்கின்றன. சுமந்திரனுக்கு ஆதரவான அணி அங்கு சந்திரகுமாருக்கு நெருக்கமாகக் காணப்படுகின்றது

அப்படித்தான் மணிவண்ணனின் விடயத்திலும். மணிவண்ணன் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்மக்கள் கூட்டணியும், ஐங்கரநேசனும் புதிய கூட்டுக்குள் சந்திரகுமார் இணைக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய தவராசா அணியும் அக்கூட்டுக்குள் முரண்படுவதாகத் தெரிகிறது. அதற்காக இவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஏதும் புதிய உடன்படிக்கைக்கு போகக்கூடுமா? தவராசா அணிக்கும் சுமந்திரன் அணிக்கும் இடையிலான இடைவெளியும் மணிவண்ணனுக்கும் முன்னணிக்கும் இடையிலான பகையும் இக்கூட்டுக்களைத் தீர்மானிக்கும் காரணிகளாகும்.

மணிவண்ணன், ஐங்கரநேசன், தவராசா அணி போன்றவற்றைச் சுதாகரிப்பதற்காக புதியகூட்டானது சந்திரகுமாரை வெளியே விடுமா? இல்லை. அதற்கான வாய்ப்புக்கள் இப்போதைக்குக் குறைவு. ஏனென்றால் புதிய கூட்டை உருவாக்கும் முன்முயற்சிகளை எடுத்த ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஒரு சினேக சக்தியாக கருதவில்லை. தவிர ஏற்கனவே யாப்புருவாக்க முயற்சிகளுக்காக செல்வம் அடைக்கலநாதனை கஜேந்திரக்குமார் சந்தித்திருக்கும் ஒரு பின்னணியில்தான் மேற்படி கூட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக மணிவண்ணனும் கலந்து கொண்டார். விக்னேஸ்வரனின் கட்சிக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான இடைவெளியை தீர்மானிக்கும் அம்சங்களில் மணிவண்ணனும் ஒருவர். எனவே கூட்டிக்கழித்து பார்த்தால் புதிய கூட்டுக்குள் பழைய பகைமைகள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

தமிழ்மக்கள் உருகிப் பிணைந்த ஒரு தேசத் திரட்சியாக இல்லை. தமிழ்த் தேசியப் பரப்பில் எத்தனை துருவ நிலைகள்? ஆயுதப் போராட்டத்தில் இயக்கங்களுக்குள் ஏற்பட்ட பகைமையின் தொடர்ச்சியாகக் காணப்படும் தியாகி-துரோகி என்ற பகைநிலை. கட்சிகளுக்கு இடையிலான பகை;கட்சிகளுக்குள் காணப்படும் குழுக்களுக்கு இடையிலான பகை;கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கும் தாய்க்கட்சிக்கும் இடையிலான பகை... என்றிவ்வாறாக பல்வேறு பகைநிலைகள் உண்டு. இந்தப் பகைமைகள் அனைத்தும் பழையவை. இவை புதிய கூட்டுக்களை எவ்வாறு தீர்மானிக்கப் போகின்றன?

இப்பொழுது தமிழ்த்தேசியப் பரப்பில் நான்கு தரப்புக்கள் துலக்கமாக தெரிகின்றன. முதலாவது தமிழரசுக் கட்சி. இரண்டாவது முன்னணி. மூன்றாவது புதிய கூட்டணி. நாலாவது இவற்றுக்குள் வராத சிறிய கட்சிகளும் சுயேச்சைகளும்.

தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி தேர்தலை தனியாகவே எதிர்கொள்ளப் போவதாக தெரிகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை வென்ற கட்சி என்ற அடிப்படையில் தாமே உள்ளதில் பெரிய கட்சி, பிரதான கட்சி, தலைமை தாங்கும் கட்சி என்ற பொருள்பட சுமந்திரன் கருத்துக்கூறி வருகிறார். தேர்தலுக்கு முன் கூட்டுக்களை உருவாக்காமல் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

இது தாங்களே பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர்கள் வகுத்துள்ள தந்திரம். தேர்தலுக்குப் பின் கூட்டுக்களை வைக்கும்பொழுது தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஏனைய கட்சிகளின் உயரம் எதுவென்று தெரிந்துவிடும். அந்த அடிப்படையில்தான் அவர்கள் பேரம்பேச முடியும். மாறாக தேர்தலுக்கு முன் கூட்டை வைத்தால், கட்சிகளின் உயரம் இதுவென்று தெரியாமல் அவற்றின் தகுதிக்கு மீறி இடங்கொடுக்க வேண்டிவரும். இது தாமே தீர்மானிக்கும் கட்சி என்ற அடிப்படையில் கட்சி நோக்குநிலையில் இருந்து எடுத்த முடிவு. நிச்சயமாக தேசத்திரட்சி என்ற நோக்குநிலையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு இறந்த காலத்திலிருந்து எதையும் படித்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. உள்ளதில் பெரிய கட்சிதலைமை தாங்கும் கட்சி என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு கட்சியானது தேசியவாத அரசியலுக்குத் தலைமை தாங்கும் கட்சி தாங்கள்தான் என்ற பொறுப்பை உணர்ந்து முடிவெடுக்கவில்லை. தேசத் திரட்சியை நோக்கித்தான் கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும்.தேர்தலை நோக்கி அல்ல.அது மிக முக்கியம்.அந்த ஒருங்கிணைப்பு 2009க்கு பின்னரான புதிய பண்புருமாற்ற அரசியலாகவும் இருக்க வேண்டும். அது மிக முக்கியம்.மாறாக அவரவர் பலத்தின் அடிப்படையில் கூட்டுக்களை வைத்துக் கொள்ளலாம் என்பது முழுக்க முழுக்க தேர்தல் நோக்கு நிலையிலானது. சில சமயங்களில் தேர்தல் நோக்கு நிலையானது தேசத் திரட்சிக்கு எதிராக இருக்க முடியும்.

தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசியக் கூட்டுணர்வின் அடிப்படையில் பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி அதற்குத் தேவையான வழி வரைபடத்தைக் கொண்டிருக்கின்றதா? இல்லை. முதலில் அவர்கள் தங்களை ஒரு உருகிப்பிணைந்த அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டும். தன்னை ஒரு கட்டிறுக்கமான கட்சியாகத் திரட்டமுடியாத ஒரு கட்சியானது எப்படி அரசற்ற, நாடற்ற ஒரு மக்களைத் தேசமாகக் கட்டியெழுப்ப முடியும்? இதுதானே கடந்த 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது?

தமிழரசுக் கட்சி, முன்னணி, புதிய கூட்டணி தவிர ஆங்காங்கே சுயேச்சைகளும் களமிறங்கும் வாய்ப்புக்கள் தெரிகின்றன. நாடாளுமன்றத் தேர்தலைப் போலன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைகளுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம். தென்மாராட்சியில் ஒரு சுயேச்சைக் குழு அவ்வாறு களமிறங்கும் வாய்ப்புகள் தெரிகின்றன. வலிகாமத்திலும் சுயேச்சைக் குழுக்கள் இறங்க முடியும். இதில் சுயேச்சையாக நிற்கக்கூடிய சில அரசியல்வாதிகளோடு சுமந்திரன் உரையாட முற்படுவதாக ஊர்ஜிதமற்ற ஒரு தகவல் உண்டு.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நோக்கி உருவாகிவரும் புதிய கூட்டுக்கள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். ஆனால்.அதைக் கட்சிகள் செய்ய முடியாது என்பதுதான் தமிழ்த்தேசிய அரசியலில் உள்ள கொடுமையான யதார்த்தம். ஏனென்றால் தமிழ்மக்களை வாக்காளர்களாக; விசுவாசிகளாக; பகைக் குழுக்களாக; துரோகிகளாக தியாகிகளாக; ஆயுதக் குழுக்களாக; மிதவாதிகளாக; இன்னபிறவாகப் பிரித்து வைத்திருப்பதே கட்சிகள் தான். தாங்களே சிதறடிக்கும் ஒரு மக்கள் கூட்டத்தை தாங்களே திரட்டுவது எப்படி? வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது ஒரு தேசமாகத் திரண்டு முடிவெடுக்காத கட்சிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எப்படித் தமிழ் வாக்குகளைத் திரட்டப் போகின்றன?

அவர்கள் ஒன்றாக நின்று தேர்தலை எதிர்கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. ஆகக்குறைந்தபட்சம் அந்தந்த உள்ளூராட்சிப் பிரதேசங்களில் பகை தவிர்ப்பு அல்லது போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை எதற்காவது போவார்களா? அதாவது ஒரு உள்ளூராட்சிப் பிரதேசத்தில் வெல்லக்கூடிய வேட்பாளருக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த் தேசியக் கட்சி வேட்பாளரை நிறுத்தாமல் விடுவதன்மூலம் ஒரு தமிழ்த் தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவது. செய்வார்களா? அதாவது கட்சி கடந்து தேசமாகச் சிந்திப்பார்களா?

நன்றி: நிலாந்தன்

# போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை சிறீலங்கா இராணுவம் தடுத்தது

07.03.2025

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதை இலங்கை அரச படைகள் தடுத்தன என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சவுதி அரேபியாவை தளமாக் கொண்ட அல் ஜசீராவில் தொலைக்காட்சியின் ஹெட் டு ஹெட் நிகழ்ச்சியில் பிரிட்டிஷ் ஊடகவியலாளர் மெஹ்தி ஹசனுக்கு வழங்கிய நேர்காணலிலையே அவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நேர்காணலில்,

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வழக்குத் தொடுப்பிலிருந்து பாதுகாக்கவில்லை என்று மறுத்தார்.



2019 ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய கொடிய பயங்கரவாத தாக்குதல்களுடன் அரசாங்க தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவதை நம்பகத்தன்மையுடன் விசாரிக்க தனது சொந்த நிர்வாகம் தவறிவிட்டது என்ற புதுப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் மறுத்தார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் கையாண்ட விதம் மற்றும் 1980 களின் பிற்பகுதியில் அவரது கண்காணிப்பின் கீழ் செய்யப்பட்ட சித்திரவதை குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சூடான விவாதம் இந்த நேர்காணலில் இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டு வெகுஜன போராட்டங்களைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு அளித்தீர்களா என்று இங்கு ஊடகவியலாளரினால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க, என் நாட்டில் வழக்குத் தொடருவது குறித்து முடிவெடுப்பது சட்டமா அதிபர் தான், அவர் ஒரு அரசியல் பிரமுகர் அல்ல - நாங்கள் அவருக்கு முன் ஆதாரங்களை மட்டுமே அனுப்ப முடியும் என்றார்.

கோட்டாபய மற்றும் அவரது சகோதரரான முன்னாள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருவரும் ஊழல் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகவும், நாட்டை பெரும் நிதி நெருக்கடியில் தள்ளியதாகவும் பரவலாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு விக்கிரமசிங்கே ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்யாமல் நாட்டிற்குள் திரும்ப அனுமதித்தது குறித்தும் இங்கு கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க, அவர்கள் மீண்டும் நாட்டுக்குள் உள்ளே வரலாம். அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. நான் எப்படி அதை செய்ய முடியும்? நான் ஒரு சர்வாதிகாரியா? - என்றார்.

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் தொடர்புடைய “பிற சக்திகளை” ஐ.எஸ்.ஐ.எஸ்-சார்புடைய அமைப்பால் நடத்தப்பட்டதாக கத்தோலிக்க திருச்சபையின் புதிய குற்றச்சாட்டுகள் குறித்தும் ஊடகவியலாளர் ஹசன் இதன்போது வினவினார்.

அதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, இந்தக் குற்றச்சாட்டுகளை “அனைத்தும் முட்டாள்தனம்” என்றும் “கத்தோலிக்க திருச்சபையின் அரசியலுக்கு” ஒரு எடுத்துக்காட்டு என்றும் கூறினார்.

இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் முட்டாள்தனமாகப் பேசுகிறாரா?” என்று ஹசன் மறுபடியும் வினவினார்.

அதற்கு “ஆம்,” என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

2019 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க, உள்ளூர் கார்டினல் மெல்கம் ரஞ்சித்தின் பொது அறிக்கைகளுக்கும், தொலைக்காட்சி பதிவுக்கு முன்பு அல் ஜசீராவின் தலைமை குழுவிற்கு கார்டினல் தெரிவித்த பிரத்யேக கருத்துக்களுக்கும் பதிலளித்தார்.

அல் ஜசீராவுடனான தொலைபேசி அழைப்பில், உண்மையிலேயே சுயாதீனமான விசாரணைக்கான திருச்சபையின் கோரிக்கையை விக்ரமசிங்கே கவனிக்கத் தவறிவிட்டார் என்றும், விக்ரமசிங்கவின் ஜனாதிபதி காலத்தில் முந்தைய விசாரணை மற்றும் அறிக்கை “அது எழுதப்பட்ட காகிதத்திற்கு மதிப்புக்குரியது அல்ல” என்றும் மெல்கம் ரஞ்சித் கூறியிருந்தார்.

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு உண்மை மற்றும் சமரசம் குறித்து ஹசன், விடுதலைப் புலிகள் (LTTE) பக்கம் திரும்பியபோது, 2009 இல் முடிவடைந்த மோதலில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி வழங்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, இல்லை. எந்த சமூகத்திற்கும் நீதி இதுவரை வழங்கப் படவில்லை - என்றார்.

அத்துடன், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் தடுக்கப்பட்டதையும், சில மருத்துவமனைகள் குண்டுத் தாக்குதல்களில் தாக்கப்பட்டத்தையும் அவர் ஒப்புக் கொண்டார், ஆனால் அத்தகைய குண்டு வெடிப்புகள் முறையாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை என்பதை மறுத்தார்.

ஐ.நா. குழுவின் கூற்றுப்படி, இலங்கை அரசாங்கப் படைகள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதைத் தடுத்தன என்று ஹசன் கூறினார்.

அது தொடர்பில் பதிலளித்த போரின் இறுதிக் கட்டத் தின் போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்ரமசிங்கே, அது நடந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் - என்றார்.

அமெரிக்க வெளிவிகாரத் துறை போர்க்குற்றங்கள் செய்ததாக குற்றம் சாட்டும் ஜெனரல் சவேந்திர சில்வாவை, ஜனாதிபதி யாக மீண்டும் இலங்கை யின் ஆயுதப் படைகளுக்குத் தலைவராக நியமித்ததற்கான காரணம் குறித்தும் ரணில்விக்ரம சிங்க இதன்போது தெளிவு படுத்தினார்.

ஒரு தேர்தலின் போது இராணுவத் தளபதிகளை மாற்றக்கூடாது என்பது ஒரு நடைமுறை, நான் பொறுப்பேற்றபோது, அதைச் சரிபார்த்தேன், ஜெனரல் சில்வா அதில் (போர்க் குற்றங்களில்) ஈடுபடவில்லை என்பதில் நான் திருப்தி அடைந்தேன் என்று அவர் மேலும் கூறினார்.

1980களின் பிற்பகுதியில் ஒரு அமைச்சராக தாம் வசித்து வந்த படலந்த என்ற வீட்டுத் தொகுதியில் சட்டவிரோத தடுப்புக் காவல், சித்திரவதை மற்றும் கொலைகள் நடந்ததாக ரணில் விக்ரம சிங்க அறிந்திருந்ததாக அரசாங்க விசாரணை ஆணையகம் கூறிய குற்றச்சாட்டுகளையும் முன்னாள் ஜனாதிபதி இதன்போது மறுத்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், காலி முகத்திடலில் போராட்டக்காரர்களை கையாண்ட விதம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து வந்த விமர்சனங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்கேவிடம் இங்கு கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு பதிலளித்த அவர், ஐரோப்பிய ஒன்றியம் சில நிறுவனங்களுக்கு நிதியளித்து, எனது இராஜினாமாவைக் கோரியது, அதன் பின்னரே அதே ஒன்றியம் இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த மனிதராக என்னைப் பாராட்டியது” என்று கூறினார்.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் மற்றும் நிதி நெருக்கடிகளில் ஒன்றின் மத்தியில் 2022 இல் நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க, 2024 தேர்தல் தோல்வியை சந்தித்தார்.

இருந்தாலும் தனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் மேற்கொண்ட செயல்கள் தொடர்பில் அவர் இந்த நேர்காணலில் பெருமிதம் கொண்டார்.

இரண்டு ஆண்டுகளில், நான் பொருளாதாரத்தை மீண்டும் பாதையில் கொண்டு வந்தேன். அதாவது பணவீக்கக் குறைப்பு, சுருக்கம். இது மிக மிக கடினம்.

“நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை செய்தேன்,” என்று கூறினார்.

மேலும், ஜனாதிபதியாக அவர் மத்தியஸ்தம் செய்த ஒரு முக்கிய சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஒப்பந்தத்தை மேற்கொள்ளிட்டு “தான் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என்றால், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார சரிவு ஏற்பட்டிருக்கும்” - என தெரிவித்தார்.



# வெளிவந்துவிட்டது

உலக வணிகம்
ULAGA VANIKAM
2025




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

437-345-4203

# நிலமிழந்து - பலமிழந்து தாயகக் கொள்கையை கைவிடுகிறார்களா?

# குர்திஷ் போர்நிறுத்த அவசியம் என்ன?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

04.03.2025

தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

கடந்த வாரம் 27-2-25 குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே அமைப்பு தனது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தார்.






### எல்லை தாண்டி அழித்த துருக்கி:

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி.

சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்தி வரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சனிக்கிழமை குர்திஷ் போராளிகள் போர்நிறுத்தத்தை அறிவித்தனர்.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே-யின் போர் நிறுத்த அறிக்கையை அக்குழுவிற்கு நெருக்கமான ஊடக நிறுவனமான ஃபிரத் செய்தி நிறுவனம் வெளியிட்டது.

1999 முதல் துருக்கியால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்துல்லா ஓஜலனைப் பற்றி குறிப்பிடுகையில், அந்தக் குழு கூறியது: "தலைவர் அப்துல்லா ஓஜலான் அமைதி மற்றும் ஜனநாயக சமூகத்திற்கான அழைப்பை செயல்படுத்துவதற்கு வழி வகுக்கும் வகையில் இன்று முதல் போர்நிறுத்தம் அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

துருக்கியால் தாக்கப்படாவிட்டால் எங்கள் படைகள் எதுவும் ஆயுதமேந்திய நடவடிக்கை எடுக்காது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2015 கோடையில் பி.கே.கே மற்றும் துருக்கி படைகள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து, அமைதிக்கானமுதல் அறிகுறியாக இந்த போர் நிறுத்தம் உள்ளது.

குர்திஷ்தான் மற்றும் மத்திய கிழக்கில் ஒரு புதிய வரலாற்று செயல்முறை தொடங்கியுள்ளது என்பதை ஓஜலனின் அறிக்கை சுட்டிக்காட்டுவதாக பி.கே.கே தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### குர்திஷ்தான் பூர்வீக தாயகம் :




குர்திஷ்தான் என்பது துருக்கி, ஈராக், சிரியா மற்றும் ஈரானின் குர்துகள் வசிக்கும் பகுதிகளைக் குறிக்கிறது.

பி.கே.கேயின் தலைவர் அப்துல்லா ஓஜலான், 1999ல் இருந்து சிறையில் இருக்கிறார். எனினும் குர்திஸ் அமைப்பு தொடர்ந்து போராடி வருகிறது. பல அமைதி ஒப்பந்தங்கள் பயனற்றுப் போன நிலையில், சிறையில் இருக்கும் அப்துல்லாவை சமீபத்தில் துருக்கி அரசியல் தலைவர்கள் சந்தித்து, வன்முறையை கைவிடும்படி கோரினர்.

இந்த நிலையில், ஆயுதங்களை கைவிடுவதாக குர்திஷ் பி.கே.கே அமைப்பினர் அறிவித்துள்ளனர்.



குர்திஷ் அமைப்பைச் சேர்ந்த யாரும் ஆயுத தாக்குதலில் ஈடுபட மாட்டார்கள். துருக்கி, ஈராக், ஈரான், சிரியாவை உள்ளடக்கிய குர்திஷ் பிராந்தியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் புதிய வரலாறு எழுதப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியில் அதிபர் எர்டோகன் பதவிக்காலம் 2028ல் முடிகிறது. அதன் பிறகும் பதவியில் தொடரும் வகையில் சட்டத்தை திருத்த குர்திஷ் ஆதரவு தேவைப்படுவதால், அவரது முயற்சியில் இந்த போர் நிறுத்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

அத்துடன் சிரியாவில் அதிபராக இருந்த பஷிர் ஆசாத்தின் ஆட்சி கவிழ்ப்பு, லெபனானில் ஹெஸ்பெல்லா அமைப்பு பலவீனமானது போன்ற காரணங்களும், குர்திஷ் போராளிகளின் போர் நிறுத்த முடிவுக்கு காரணமாகக் கூறப்படுகிறது.

### காவு வாங்கப்படும் கனவு தேசம்:

சிரியாவில் பஷிர் ஆசாத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர், குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் அங்கும் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகி விடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

### தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள் :

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (முரசனளைா) தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான



குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

### ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்:

# துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை



போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகி விடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, நவம்பர் 2103 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன.

அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18% பேர் உள்ளனர்.

குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப் பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனிநாடு காண விரும்புகிறார்கள்.

முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததையடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான் கோரிக்கை முதலில் முன்மொழியப்பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப்போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டுவந்தனர். 1920ல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## 1920 ஒப்பந்த வரைபடத்தில் குர்திஷ்தான் நாடு




ஆனால், 1923ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ்சன்னே' ஒப்பந்தத்தின்படி நவீன துருக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

ஆனால் தற்போது குர்திஷ் பி.கே.கே அமைப்பின் அரசியல் குழுவானது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தமை உள்நோக்கம் கொண்டதாக அறியப்படுகிறது.

ஐந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் குர்திஷ் மக்களின் தாயகக் கனவு நனவாகாமல், கலைந்த கனவாக மாறிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.



## குர்திஷ்தான்




Kurdish-inhabited areas.

| | |
|---|---|
| மொழி | குர்தி மொழி |
| இடம் | ஈரான், ஈராக், சிரியா, துருக்கி [1] |
| பரப்பு (Est.) | 190,000 km²–390,000 km² 74,000 sq.mi–151,000 sq.mi |
| மக்கட்தொகை | 25 to 30 Million (Est.)[2] |



தமிழீழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில்
இந்தியப்படை புரிந்திட்ட அடக்குமுறைக்கு எதிராக
19.03.1988 அன்றிலிருந்து 19.04.1988 வரையிலான
சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில்
உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர்

ஈகைச்சுடர் **அன்னை பூபதி**